### அணிந்துரை

இந்து சமயத்தை வளம்படுத்தும் பண்பாட்டு மூலங்களுள் புராணங்கள் தனிச்சிறப்புடையவை. புராணம் என்னும் சொல் பழமையானது எனப் பொருள்படுகிறது. புராணங்கள் பதினெட்டு ஆகும். அதே போல் உப புராணங்களும் பதினெட்டு உள்ளன. உபபுராணங்களுள் பார்க்கவ புராணமும் ஒன்று. இப்புராணம் விநாயகரின் பெருமைகளைச் சிறப்பாகச் சித்திரிக்கின்றது. பிருகு முனிவரால் உபதேசிக்கப்பட்டதால் பார்க்கவபுராணம் என்று அதற்குப் பெயர் விளங்கலாயிற்று. பார்க்கவ புராணமே விநாயகபுராணம் எனப்படுகின்றது. விநாயக புராணத்தை திருவாவடுதுறையைச் சேர்ந்த கச்சியப்ப முனிவர் தமிழில் கவிதை வடிவில் தந்துள்ளார். இதனை எல்லோரும் கற்றுப் பயன் பெற வேண்டு மென்ற உயரிய நோக்கில் எமது பேரன்புக்குரிய கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் அதிபராக விளங்கும் திருமிகு கே.வி.குணசேகரம் அவர்கள் எளிய முறையில் இலகு தமிழில் கதை வடிவில் இந்நூலை சைவ உலகத்திற்கு அளித்துள்ளார். சிறுகதை, நாவல் போன்றவற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்து வளரும் இவ்வாசிரியர் ஆத்தி சூடிக்கதைகள், திருக்குறட்கதைகள் மற்றும் பெரியபுராணக் கதைகள் மூலம் ஈழத்தில் பெருமை பெற்று விளங்குகின்றார்.

விநாயகரின் தெய்வீக வரலாற்றைப் புலப்படுத்தும் விநாயகர் திருமணம், மதுகைடவர் வதம், சதுர்த்திவிரதம், சங்கடசதுர்த்தி விரதம், அறுகம்புல்லின் மகிமை, மூஷிகவாகன வரலாறு, சிந்துராஜன், கஜமுகன் வதம், சோமகாந்தன் முத்தி என்பன பற்றிய விபரங்களை இவ்வாசிரியர் மூல நூலுக்கு முரணின்றி பாமரரும் படித்து இன்புறுமாறு அமைத்துள்ளார். இவர் தனது குலதெய்வமாகிய விநாயகர் பெருமானுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குவது அவரது சமய உணர்வை மெய்ப்பிக்கின்றது.

நூலாசிரியரின் முயற்சியைப் பெரிதும் பாராட்டுவதுடன் இவர் மேன் மேலும் இத்தகைய பணிகளில் சிறந்து விளங்க திருவருள் துணைபுரியும் என்று நம்புகின்றேன்.

டாக்டர் மா.வேதநாதன், எம்.ஏ.பிஎச்.டி
தலைவர், புறநிலைப்படிப்புகள் பிரிவு,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
ஸ்ரீலங்கா.

### அணிந்துரை

“ அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையை தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே”

இந்து சமயத்தவர்களாகிய நாம் எக்கருமத்தைச் செய்ய முற்படினும் முதற் செய்வது விநாய வணக்கம். மூத்த கணபதியின் திருவருட்டுணையுடன் தான் எக்காரியத்தையும் நடாத்தும் பக்திமரபு எமது சமய மரபாகும். பிரணவ சொரூபியாக இருக்கும் விநாயகக் கடவுள் எல்லாவற்றிற்கும் மூலமாக இருக்கிறார். பிரணவம் என்பது ஓங்காரம். ஓங்காரம் என்பது ஒப்பற்ற உயர் ஒலி வடிவுடையது. அனைத்து இயக்கத்திற்கும் காரணமாக இருப்பது ஓம் எனும் ஓங்கார நாதமாகும். உலகின் அனைத்து இயக்கத்திற்கும் மூலமாக இருப்பதனால் ஓங்காரப் பொருளாக இருக்கும் முழுமுதற் கடவுளாக விநாயகர் போற்றப்படுகின்றார். இதனை ஒட்டியே விநாயக வணக்கத்தை முதற் செய்து கருமமாற்றும் விதி எம்மிடையே இடம் பெறுகிறது.

“முப்புரம் எரி செய்த அச்சிவனுறை ரதம்
அச்சது பொடி செய்த அதிதீரர்”

என்பது விநாயகர் வணக்கத்தை மேற் கொள்ளாது சிவபரம் பொருள் முப்புர தகனம் செய்ய முயன்ற போது, அச்சிவன் உறை ரதத்தின் அச்சானது உடைந்த சம்பவத்தைச் சுட்டி நிற்கிறது. சிவபரம் பொருளுக்கே இந்நிலை ஏற்படும் போது விநாய வணக்கம் செய்யாவிடின் எமக்கு ஏற்படும் இடர்களைச் சொல்ல முடியுமா?.

இவ்வண்ணம் விநாயக மகத்துவத்தைச் சொல்லப்புகில் அது விரிவுபடும்; ‘‘விநாயகபுராணம்’’ எனும் நூலை ஆக்கி இருக்கிறார் கோப்பாய் நாவலர் வித்தியாசாலை அதிபராக விளங்கும் கே.வி.குணசேகரம் அவர்கள். அவர்கள் ஆக்கிய விநாயகபுராணம் எனும் இந்நூலில் சிறப்புக்கள் பற்றிச் சிந்திப்போம். இந்து சமயத்தின் மூலவேராக இருப்பது வேதங்கள். அதன் கிளைகளாக இருப்பது, ஆகமங்களும், உபநிடதங்களும், வேதாகமங்கள் இந்து சமயத்தின் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. இவையாவும் சுலோக வடிவில் இருப்பதனால் இவற்றையெல்லாம் சாதாரண மக்களால்க் கற்றறிய முடிவதில்லை. இதனால் இவற்றில் கூறும் கருத்தாம்சங்களைக் கதை வடிவில் பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படி உருவாக்கப்பட்டவையே புராணங்கள் ஆகும். விநாயகபுராணத்தை கச்சியப்ப முனிவர் தமிழில் பாடியுள்ளார். விநாயக புராணத்தை சிவபெருமான் பிரம்மாவுக்கு உபதேசிக்க அவர் வேதவியாசருக்கு உபதேசிக்க வேதவியாசகர் பிருகுமுனிவருக்கு உபதேசிக்க அவர் அதனைப் பாவடிவில் வடிமொழியில் பாடியருளினார். அதனை அடி ஒற்றிக் கச்சியப்பர் தமிழில் பாடியருளினார்.

விநாயகபுராணத்தில் விநாயக மகத்துவம் பலவும் கூறப்பட்டுள்ளது. புராணங்கள் மிகவும் நீண்டவை. அவற்றை முழுமையாக வாசித்து அறிந்து கொள்ள முடியாத இவ்வேதயுகத்தில் இந்நூலாசிரியர் அப்புராணத்தில் கூறப்படும் மிக முக்கியமான சில கதைகளைத் தொகுத்து விநாயகபுராணம் எனும் பெயரில் வெளியிட்டுள்ளார். சுருக்கம் என்பது இன்றைய காலத்தேவையாக உள்ளது. எனவே அவரின் இம் முயற்சி மிக்க பயனுடையதாக அமையும்.

விநாயகர் திருவருள் பெறுவதற்குரிய விரதமாகச் சதுர்த்தி விரதம் இருக்கிறது. மாதம் தோறும் வரும் சதுர்த்தி விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பதால் விநாயகரின் அனுக்கிரகத்தைப் பெறலாம் என்று புராணங்கள் எடுத்துக் கூறுகிறன. விநாயக சதுர்த்தியின் மஹிமையை விளக்கும் சதுர்த்தி விரதம் எனும் தலைப்பில் அமைந்த கதையைப் படிப்பதன் மூலம் சதுர்த்தி விரத மேன்மையை உணர்ந்து கொள்ள முடிகிறது. சதுர்த்தி விரதத்தை உமாதேவியார் முதற் கொண்டு பற்பலரும் அனுஷ்டித்து நற்பலன்களைப் பெற்றனர். எனின் அதன் சிறப்பை எவ்வாறு கூற முடியும். சிவபிரான், பார்வதி, சுப்பிரமணியர், ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி, கிருஷ்ணபகவான், அகத்தியர், நாரதர், வியாசர் முதலானவர்கள் விநாயகப் பெருமானைத் துதித்து நல்லருள் பெற்றார்கள். மானுடர் பலரும் விநாய மகத்துவத்தை முனிசிரேஷ்டர்கள் மூலம் கேட்டுணர்ந்து, விநாயகவிரதங்களை அனுஷ்டித்தும், முறையான பூஜை வழிபாடுகளைத் கைக் கொண்டும் தம் துன்பங்களை நீக்கி மகிழ்வடைந்த நிகழ்வுகள் அநேக முண்டு. இவை ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான அனுகூலங்களைக் கொடுத்திருக்கிறது. இவை பலவற்றைக் கதைரூபமாக ஆசிரியர் வெளிப்படுத்தி இருக்கிறார். காமந்தன், வல்லாளப் பெருமான், ருக்மணிசாபம், சிந்தாமணிவிநாயகர், விநாயகர் திருவிளையாடல் போன்ற பல தலைப்புக்கள் இட்டு விநாயக பராக்கிரமத்தையும் விநாயக மகத்துவத்தையும் ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார். இறைவனை நம்பிச் சரணடைதல் எம்கடன், எம்துயர் தீர்பது கடவுளில் கருணை. இதுவே முடிந்த உண்மையாகும். கடளை நம்பினோர் கைவிடப்படார் என்பது சான்றோர் உரைத்த முதுமொழி. பெருங்கருணைக் கடலாகிய விநாயகர் மிகவும் எளிமையானவர். அவரை வணங்குவதும் எளிது. அவர் விரும்பும் பத்திரம், புஸ்பம் முதலானவையும் எளிமையானவை.

உயர்ந்த வாசனையும் அரிதிற் கிடைக்க முடியாததுமான புஷ்பங்களோ, பாத்திரங்களோ விநாயகருக்குத் தேவைப்படாதது. எங்கும் கிடைக்கும் எளிதான அறுகம் புல்லே விநாயகப் பெருமானின் இஷ்டபத்திரமாகும். அறுகு மருத்துவ குணங்கள் நிரம்பிய அற்புதமான மூலிகை. அறுகின் வைத்திய குணங்கள் அநேகம், இதனால் அறுகு பூஜையின் முக்கிய இடம் பெறுகிறது. எமது சமயத்தின் தனித்துவமே அது தான். எவையெல்லாம் உடல் நலத்தை அளிப்பனவோ அவை எல்லாவற்றையும் இறைவனுக்கு உகந்தவை என்று வரையறை செய்துள்ளார்கள். மனிதர்களாகிய நாம் கடவுளின் பிரசாதம் என்று அவற்றை நிச்சயமாக எடுத்துக் கொள்வோம் அல்லவா? அன்றியும் உடல்நலம் சம்பந்தமான விதிமுறைகள் அனைத்தையும் ஆசார அனுட்டானம் என்று வரையறை செய்யப்பட்டுள்ளமையை நாம் நன்குணரவேண்டும். சாணிதெளித்தல், வாழையிலையில் உண்ணல், என்பன எல்லாம் தொற்றுத் தடையாகும். இவ்வாறு எல்லாவற்றிற்குமே விஞ்ஞான விளக்கம் தரக்கூடிய வகையில் எமது சைவப் பண்புகள் உள்ளன. இவ்வாறே அறுகும் அந்த வகையில் எடுத்தாளப்படுகின்றது. ஒரு பிடி சாணியை எடுத்து ஓரிடத்தில் வைத்தால் இரண்டொருநாளில் அவை பூச்சி உண்டாகிப் பழுதடையும். ஆனால் கைப்பிடி சாணியை பிள்ளையாரகப் பிடித்து அதில் அறுகை வைக்கும் அச் சாணி பழுதடைவதில்லை. இதிலிருந்து அறுகின் மகத்துவம் புலனாகிறது. இவ்வாறு இவ்விநாயக புராணத்தில் வரும் ஒவ்வொரு கதைகளிலுமிருந்து பலதத்துவார்த்தமான கருத்துக்களை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இவ்வாறு அற்புதமான நடைமுறைகளை உள்ளடக்கிய எமது சைவப் பண்புகளை ஊக்குவிக்கும் வகையில், சைவக்கருத்துக்களை விளக்கி வெளிவரும் நூல்கள் வரவேற்கத்தக்கன. எமது சமயப் பாரம்பரிய நடைமுறைகளை நாம் மறந்து விடாமல் இருப்பதற்கு இவ்வாறான நூல்கள் உதவி புரிகின்றன. எனவே ஆசிரியர் அவர்கள் மேன்மேலும் இது போன்ற ஆக்கங்களை நூலுருவில் வெளிக் கொணர்ந்து மேன்மை கொள் சைவப் பண்பை வளர்க்க வேண்டும். அதற்கு ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டியது மக்களாகிய எமது கடமை. எல்லாவற்றிற்கும் மேலாக அந்த மேலாம் பரம் பொருளாகிய

விநாயகப் பெருமானின் திருவருள் அவருக்கு நிறைவாகக் கிடைக்க வேண்டுமென உளமாரப் பிரார்த்திக்கிறேன்.

''சிவானந்தவாரிதி 'வாரியார் வாரிசு''<br>
சிவத்திரு,<br>
வ.குமாரசாமி ஐயா.

***நூலாசிரியரின் எண்ணம்***

விநாயகப் பெருமானின் வரலாற்றை எழுதும் அருள் கிட்டியுள்ளது. ஐந்தாம் குரவர் என்று கூறப்படும் ஆறுமுகநாவலர் அவர்கள் உருவாக்கிய பாடசாலையின் அதிபராகப் பதினாறு ஆண்டுகள் கல்விப்பணிபுரிந்ததோடு, அவரின் மண்ணில் கால் பதித்தமையால் அவர் விட்டுச் சென்ற சமயத் தொண்டைத் தொடர வேண்டிய பாக்கியமும் கிடைத்தது. அதன் பயனாக ஔவையாரின் ஆத்தி சூடிச் சூத்திரங்களுக்குக் கதை எழுதினேன். அதன் பின் திருக்குறள் பாக்கள் அறுநூற்றி முப்பதிற்குக் கதை எழுதினேன். தொடர்ந்து பெரியபுராணக் கதைகள் எழுதியுள்ளேன். அத்துடன் புராண இதிகாச, வேத உபநிடத சாரத்தை இலகு தமிழில் இன்பத்திற்கு வழிவகுக்கும் இந்துசமயம் என்ற பெயரில் பல கட்டுரைகளை எழுதியுள்ளேன் அவற்றின் தொகுப்பும் வெளிவரவுள்ளது.

செய்யுள் வடிவாக இருந்த சமயக்கதைகளை வசனரூபமாக ஆறுமுகநாவலர் அவர்கள் முதன் முதலாக எழுதினார். அன்று வாழ்ந்த மக்களுக்கு அந்த வசன நடை மிகவும் எளிதாக இருந்தது. ஆனால் இன்றுள்ளவர்களுக்கு அவை புரியாதனவாக உள்ளன. அந்தளவில் தமிழின் அறிவு மிகவும் குறைந்துள்ளது. தற்போதய மாணவ சமூகம் பல அரிய தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மிகவும் இலகு தமிழில் தரம் ஒன்றைச் சேர்ந்த மாணவர் கூடப் படித்துப் பயன் பெற வேண்டுமென்பதற்காக எமது சமய வரலாறுகளை எழுதி வருகிறேன். அத்துடன் திருக்குறளுக்கும் மிகவும் இலகுவான உரை எழுதியுள்ளேன். இத்துடன் கந்தபுராணம், திருவிளையாடல் புராணம் போன்றவற்றையும் இலகுவாக வாசிக்கும் நூலாக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டு.

ஓம்என்ற பிரணவ மந்திரத்திற்குரியவர் விநாயகர் ஓம் என்ற பிரணவமந்திரம் ஓதிய பின்பு தான் மந்திரங்கள் ஓதுதல் வேண்டும். இல்லாவிட்டால் எந்த மந்திரங்களுக்கும் சக்தியில்லை. 'தத்துவமசி' என்ற மகா வாக்கியத்தின் வடிவம் மகா கணபதி என்றும் கூறப்படுகிறது.

கணேசர் ஐந்தொழில்களையும் செய்வதாக விநாயகர் புராணம் கூறுகிறது. எழுத்தாணி பிடித்தகரம் படைத்தலையும், மோதகம் ஏந்திய கை காத்தலையும், அங்குசம் கொண்ட கரம் அழித்தலையும், பாசம் கொண்டிருக்கும் கரம் மறைத்தலையும் அமுதகலசம் ஏந்திய துதிக்கை அருளலையும் புரிகிறதாகக் கூறுகிறது.

நினைத்த மந்திரத்தில் நினைத்த இடத்தில் விநாயகரை வைத்து வணங்க முடியும். பசுவின்சாணம், மஞ்சள்மா, அரிசிமா, வெல்லம், களிமண் போன்றவற்றில் அறுகம் புல்லை நாட்டி விநாயகரை உருவாக்கலாம். இது தவிர கல்லிலும், பொன்னாலும் வெள்ளியிலும், செம்பிலும் விநாயகரை உருவாக்கலாம். எது எப்படி இருந்த போதும் பசுவின் சாணியில் உருவாக்கும் விநாயகருக்கே சக்தி அதிகம். பசுவின் சாணகத்திலிருந்து பெறும் நீறு எல்லாக் கடவுள்களிலும் மேம்பட்டது, திருநீற்றை கடவுள், மனிதர்கள், தேவர்கள்,அசுரர்கள், முனிவர்கள், பூதகணங்கள் யாவும் அணிந்து விமோசனம் பெற்றதை வைதீக சமயங்களின் புராணங்கள் மிகவும் விரிவாகக் கூறுகின்றன. அத்துடன் விநாயகருக்கு அர்ச்சிக்கப்படும் பொருட்கள் யாவற்றிலும் அறுகே மேலானது. அந்த வகையில் சாணமும் அறுகும் சேர்ந்த விநாயகரை உருவாக்கி வணங்குவோர் சகல இன்பங்களையும் பெறுவர். மஞ்சள், வெல்லம், அரிசிமா, களிமண் போன்றவற்றால் சாணம் இல்லாத போதே விநாயகரை உருவாக்குதல் வேண்டும். எல்லாத் தெய்வங்களும், புனித கங்கைகளும், தேவர்களும், முனிவர்களும், ஜீவராசிகளும் அடங்கியுள்ள பசுவின் சாணகத்தில் பிள்ளையார் உறைந்திருக்கிறாரென்றால் அவர் எல்லாத் தெய்வங்களுக்கும் மேலானவர் என்பது புரியும். அத்துடன் கோயிலில்லா ஊரும், பசுவில்லா ஊரும் பாழ்பட்ட ஊராகும்.

விநாயகரை ஆகம விதிப்படி கட்டிடமமைத்து பிரதிஷ்டை செய்ய வேண்டு மென்ற விதி இல்லை. யாரும் நினைத்த மாத்திரத்தில் நினைத்தவாறு உருவாக்கி வணங்கலாம். அறுகம் புற்களை எடுத்து விநாயகரின் மேல் இட்டாலே முத்தி கிடைக்கும் என்று கணேசபுராணமும் முத்கல புராணமும் கூறுகின்றன.

எந்தத் தொழிலை ஆரம்பிக்கும் போதும் நாம் பிள்ளையாரை வணங்கித் தான் தொழிலை ஆரம்பித்தல் வேண்டும். அவர் தான் ஆதிபரம் பொருள். கிறிஸ்துக்கு முன்பிருந்தே விநாயக வணக்கம் இருந்ததாக அறிய முடிகிறது. இந்தியாவில் மட்டு மல்லாது இலங்கை, சீனா, பர்மா, இந்தோனேசியா, மலேசியா, யப்பான் போன்ற நாடுகளிலும் விநாயக வணக்கம் இருந்ததற்கான ஆதாரங்கள் உண்டு. கிறிஸ்துக்கு முற்பட்ட காலத்தில் உலகில் வாழ்ந்தோர் சூரியனையும், தீயையும், மரங்களையும், ஆறுகளையும், மிருகங்களையும் வணங்கியதற்கான குறிப்புக்கள் உண்டு. இவையெல்லாவற்றையும் படைத்தவர் ஆதிபரம் பொருளான விநாயகர் என்று விநாயகபுராணம் சொல்கிறது. இராமாயணத்தில் இராவணன் கொண்டு சென்ற சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யாமல் தடுத்தவர் விநாயகர், அத்துடன் இராமன் விநாயகரை வணங்கியதாகவும், இலங்கையிலும் விநாயகர் சிலையை இராமன் பிரதிஷ்டை செய்ததாகவும் கதைகள் உண்டு. அதை விட பாரதக்கதையை வேதவியாசர் கூற விநாயகர் தனது கொம்பை முறித்து எழுதியதாகவும் ஒரு கதை உண்டு. ஆரியர் வருகைக்கு முன்பு இந்தியாவில் வாழ்ந்த மக்கள் விநாயகரை வழிபட்டதற்கு ஆதாரங்கள் இருப்பதாகச் சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். சங்கரரால் வகுக்கப்பட்ட ஆறு வைதீக சமயங்களிலும் விநாயக வழிபாடு உண்டு. வைணவர்கள், விஷ்வசேனர், சேனைமுதலி, தும்பிக்கை ஆழ்வார் என்று போற்றி வணங்குகிறார்கள். சாக்த சமயத்தினர் விநாயகன், விக்னராஜன், கணேசன் என்று போற்றி வணங்குகிறார்கள். கௌமாரசமயத்தினர் விநாயகர் என்றும் சைவர்கள் பிள்ளையார், விநாயகர், கணேசர் என்றும் போற்றி வணங்குகின்றார்கள். அதை விடப் பௌத்த மதத்திலும் விநாயகர் வழிபாடு உண்டு. பௌத்தர்கள் புத்த நாயகர் என்றும் ஜைனர்கள் அருகநாயகர் என்றும் போற்றி வணங்குகின்றனர். புத்தர், கிறிஸ்துக்கு முற்பட்டவர். அத்துடன் புத்தர் சைவ சமயத்தில் இருந்து பிரிந்து சென்று தான் பௌத்தத்தை ஸ்தாபித்தார். புத்தரின் பெற்றோர் சைவர்கள். அதனால் விநாயக வணக்கம் புத்தருக்கு முற்பட்டது என்று துணிந்து கூறலாம். அசோக மன்னனின் சகோதரி நேபாளத்தில் விநாயகருக்குக் கிறீஸ்து பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு கோயிலைக் கட்டியதாக டாக்டர் பந்தர்க்கார் கூறுகிறார். மஹாயனம் என்ற புத்த நூல் புத்தர், தனது சீடர்களுக்கு விநாயகரின் மந்திரங்களை உபதேசித்ததாகக் கூறுகிறது.

விநாயகர் புராணத்தை விட விநாயகரின் சரித்திரத்தை லிங்கபுராணமும் கூறுகிறது. அசுரர்கள் தேவர்களைக் கொடூரமாகத் தண்டித்த போது தேவர்கள் சிவனிடம் சென்று முறையிட, சிவன் தனது சக்தியால் விக்னேஸ்வரரை உருவாக்கி அசுரர்களை அழித்ததாக லிங்கபுராணம் கூறுகின்றது.

பார்வதிதேவியார் நீராடும் போது தனக்குக் காவலாக இருப்பதற்காகத் தனது ஊத்தையை உருட்டி அதற்கு ஓர் உருவம் கொடுத்துக் காவலுக்கு வைத்தார். அதை அறியாது அங்கு வந்த சிவனை யாரென அறியாத அக்காவல்காரன் பார்வதி நீராடும் மண்டபத்தின் உள்ளே செல்லவிடவில்லை. அதனால் கோபம் கொண்ட சிவன் அவனது தலையை வெட்டினார். அதை அறிந்து கவலைப்பட்ட பார்வதிதேவியாரின் கவலையைப் போக்குவதற்காகச் சிவன் வடக்கே சென்று இறந்து கிடந்த யானையின் தலையைத் துண்டித்து அவ்வீரனின் கழுத்தில் பொருத்தித் தேவகணங்களுக்குத் தலைவராக்கியதாகச் சிவபுராணம் கூறுகிறது.

ஒரு சமயம் முனிவர்களுக்கு தாம் செய்யும் செயல்கள் சரியா பிழையா என்ற சந்தேகமேற்பட்டது. அதைச் சிவனிடம் முனிவர்கள் முறையிட்டனர். உடனே சிவன் அழகான குமாரன் ஒருவனைத் தோற்றுவித்தார். அவனின் அழகில் பார்வதிதேவியே மையல் கொண்டாள். அதனால் பார்வதிதேவி அக்குமாரனைப் பருத்த வயிறும் யானைத் தலையும் கொள்ளுமாறு சபித்தாள். சிவன் அக்குமாரனை அழைத்து; ‘‘எனது கணங்களுக்குத் தலைவனாக இரு. வெற்றிக்கும் தோல்விக்கும் நீயே காரணகர்த்தாவாக இருப்பாய். எந்தக் காரியமும் உன்னை வணங்கிய பின்பு தான் தொடங்கப்படல் வேண்டும். இல்லாவிட்டால் அது நிறைவேறாது. உன்னை இன்று முதல் மக்கள் ‘கணேசன்’ என்றும், ‘விநாயகன்’ என்றும், ‘விக்கினராஜன்’ என்றும் அழைப்பர் என்று அருளியதாக வராக புராணம் கூறுகிறது.

மத்ஸ்ய புராணமும் இதே கதையைக் கூறுகிறது. ஆனால் விநாயகர் யானைத்தலையுடன் சிவனால் தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறுகிறது. இதே புராணம் பார்வதிதேவி நீராடும் போது அவரின் உடலில் இருந்து வெளியேறிய கழிவுகளுடன் எண்ணெய்யைச் சேர்த்து விநாயகரின் உருவத்தைச் செய்து கங்கைநீர் தெளித்து உயிர் கொடுத்ததாகவும் கூறுகிறது.

துவாபரயுகம் முடிந்து கலியுகம் ஆரம்பித்த போது மக்கள் அனைவரும் சோமேஸ்வரனின் ஆலயத்துள்ச் சென்று அவரைத் தரிசித்தனர். அங்கு சென்று தரிசித்த பாவிகள் நீசர்கள் எல்லோரும் சோமேஸ்வரனின் அருளால் தேவலோகத்திற்குச் சென்றனர். இதனால் தேவருலகம் நிரம்பியது. சோமேஸ்வரனைத் தரிசித்தால் எல்லாப் பாவங்களும் நீங்கி விடும். இதனால் மக்கள் தொகை நாளுக்கு நாள் தேவருலகில் அதிகரிப்பதைக் கண்ட இந்திரன் மகேஸ்வரனிடம் முறையிட, மகேஸ்வரன் பார்வதியிடம் முறையிடுமாறு கூறினார்.

இந்திரனின் முறைப்பாட்டைக் கேட்ட பார்வதிதேவி தனது உடலைக் கைகளால் தடவினார். அப்பொழுது நான்கு கரங்களோடும் ஆனை முகத்தோடும் விநாயகர் தோன்றினார்; ‘‘விநாயகா, நீ சென்று சோமேஸ்வரனைத் தரிசிக்க வருவோர்க்கு எல்லையில்லாத இன்பங்களைக் கொடுத்துச்

சோமேஸ்வரனைத் தரிசிக்காமல் செய். எவனொருவன் தனக்கு ஏற்படும் இன்பங்களைத் தவிர்த்து சேமேஸ்வரனைத் தரிசிக்கிறானோ, அவன் சொர்க்கத்திற்கு வரட்டும். பூவுலக வாழ்க்கையை வெறுத்து விண்ணுலக வாழ்வை விரும்புவோர் உன்னைப் பிரார்த்தித்தால் அவர்களது கஷ்டங்களை நீக்கி இன்பத்தைக் கொடு'' என்றாள். இப்படி ஸ்கந்தபுராணம் கூறுகிறது. அத்துடன் திணைப்புலத்தில் காவல் காத்த வள்ளியை அடைய விநாயகர் உதவிய கதையையும் கூறுகிறது. பிரமாண்ட புராணம் விநாயகரைப் பற்றிப் பல்வேறு பட்ட கதைகளைக் கூறுகிறது. ஒரு சமயம் சந்திரன் சாபம் காரணமாகத் தேய்ந்து கொண்டிருந்தான். அதைக்கண்ட விநாயகர் சந்திரனைத் தனது நெற்றியில் பொட்டாக எடுத்து அணிந்தார். அதனால் அவருக்குப் பாலச்சந்திரவிநாயகர் என்ற பெயர் உண்டானது.

இன்னொரு சமயம் அக்கினி தேவனுக்கு ஏற்பட்ட சாபத்தை நீக்க விநாயகர் தனது இரு காதுகளாலும் காற்று வீசி அக்கினியைக் கொழுந்து விட்டெழச் செய்தார். இதனால் சூர்ப்பகர்னர் என்ற பெயரைப் பெற்றார்.

பரசுராமன், பரமேஸ்வரனால் தனக்கு அளிக்கப்பட்ட பரசு என்ற ஆயுதத்துடன் பரமேஸ்வரனைச் சந்திக்கச் சென்றார். வாசலில் இருந்த விநாயகர் அவரை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அதனால் கோபம் கொண்ட பரசுராமர் பரசால் விநாயகரைத் தாக்கினார். தகப்பன் அளித்த ஆயுதத்தைச் செயலிழக்க வைக்க விரும்பாத விநாயகர் தனது இடது தந்தத்தால் அதைத் தாங்கிக் கொள்ள அத்தந்தம் முறிந்தது. அதனால் அவருக்கு ஏகதந்தன் என்ற நாமம் உண்டானது.

பக்தர்களினால் நிவேதிக்கப்பட்ட கொழுக்கட்டைகள் முழுவதையும் உண்ட விநாயகர் மூஞ்சூறில் ஏறிப் புறப்பட்டார். வழியில் பாம்பு ஒன்று குறுக்கிட, மூஞ்சூறு விநாயகரைத் தள்ளி விட்டு ஓடி மறைந்து விட்டது. உடனே விநாயகர் அப்பாம்பைப் பிடித்துத் தனது அரையில் கட்டிக் கொண்டார். வானவீதியில் உலாவிக் கொண்டிருந்த சந்திரன் மூஞ்சூறால் விழுந்து அவலப்பட்ட விநாயகரைக் கண்டு சிரித்தான். அதனால் கோபம் கொண்ட விநாயகர் தனது தந்தத்தை முறித்துச் சந்திரனுக்கு எறிந்தார். இதனால் சந்திரன் தேய ஆரம்பித்தான். அதனால் உலகம் இருளடைந்தது. தேவர்கள் விநாயகரை இரந்து வேண்டினர். அதனால் மனமிரங்கிய விநாயகர் பதினைந்து தினங்கள் சந்திரன் தேய்ந்து ஒளி மங்கவும் பதினைந்து தினங்கள் அவன் வளர்ந்து ஒளி பெறவும் அருளினார். விநாயகர் நடனமாடச் சந்திரன் சிரித்ததால் சந்திரன் தேய்ந்ததாகவும் ஒரு கதை உண்டு. இப்படிப் பிரமாண்ட புராணம் கூறுகிறது.

விநாயகருக்கும் சுப்பிரமணியருக்கும் திருமணம் செய்ய விரும்பிய பரமேஸ்வரனும் பார்வதியும் இருவரையும் அழைத்து உலகை யார் முதலில் வலம் வருகிறாரோ அவருக்குத் தான் முதலில் திருமணம் செய்து வைக்கப்படு மென்று கூற விநாயகர், தாயையும் தந்தையையும் சுற்றி வந்தார். அதனால் சிவனும் பார்வதியும் மனம் மகிழ்ந்து அவருக்குச் சித்தி, புத்தி என்ற இருவரையும் மணம் முடித்து வைத்ததாகச் சிவமகா புராணம் கூறுகிறது. நாரதர் கொடுத்த மாங்கனிக்காக இருவரும் உலகை வலம்வந்ததாக இன்னொரு கதை கூறுகிறது.

இத்தனை பழம் பெருமை வாய்ந்த விநாயகரின் தலங்கள் இலங்கை முழுவதும் உள்ளன. மட்டக்களப்பில் உள்ள மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் இராமனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இராவணனோடு விநாயகரைத் தொடர்புபடுத்திக் கதையொன்றும் உண்டு. இந்த வகையில் ஆறுமுகநாவலர் அவர்களால் நிறுவப்பட்ட கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் ஒரு விநாயகரைப் பிரதிஷ்டை செய்ய வேண்டு மென்ற விருப்பம் வெகு நாட்களாக எனது மனதில் இருந்தது. அவ்வெண்ணம் 2003. 02. 14.திகதி நிறைவேறியது.

இவ்விநாயகர் ஆலயத்திற்கு நாவலர் ஸ்ரீ வித்தியா மஹாகணபதி ஆலயமெனப் பெயர் சூட்டியுள்ளேன்.

இப்புராணத்தை நல்ல முறையில் கணனியில் பதித்துத் தந்த செல்வி க.சுகந்தினிக்கும் இப்புராண நூலை வெளியிடும் ஸ்ரீலங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

அன்புடன்
கே.வி.குணசேகரம்

***அறுகம் புல்லின் மகிமை***

அவந்தி நாட்டைச் சுலபன் என்ற அரசன் ஆட்சி செய்து வந்தான். அவனது மனைவியின் பெயர் சுபத்திரை. சுலபனது ஆட்சியில் மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். நீதி நெறி தவறாது அவன் ஆட்சி செய்தமையால் அவனது புகழ் கடல் கடந்த நாடுகளிலும் பரவியிருந்தது. அதனால் பல நாடுகளிலிருந்தும் ஏழைகள், புலவர்கள், அறிஞர்கள், பிராமணர்கள் வந்து தமது நிலைகளைக் கூறி உதவிகள் பலவும் பெற்றுச் சென்றனர்.

ஒரு நாள் மதுசூதனன் என்ற அந்தணன் சுலபனது அரண்மனைக்கு வந்தான். அவனது கோலம் மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருந்தது. வறுமையால் அவனது உடல் மெலிந்திருந்தது. தசை இல்லாமல் எலும்புக் கூட்டின் மேல் தோலைப் போர்த்தியிருப்பதைப் போன்ற உருவத்தை உடைய அவனைக் கண்டதும் அரசன் திகைத்து விட்டான்; ‘‘எனது நாட்டில் உணவு உண்ணாமல் வாழ்வோரும் இருக்கிறார்களா’’? என்ற எண்ணம் அவனது மனதில் எழுந்தது. இப்படி ஒரு மனிதன் எனது நாட்டில் இல்லை. இவன் வேற்றூரவன். எனது நாடு செல்வ வளம் மிக்கது’’ என்ற செருக்கோடு சிரித்தபடி; ‘‘என்ன வேண்டும்?’’ என்று கேலியாகக் கேட்டான்.

வறுமை காரணமாக இரக்க வந்த மதுசூதனனுக்கு அரசனின் செயல் கோபத்தைக் கொடுத்தது; ‘‘அரசே, தாங்கள் ஏழைகளுக்குத் தான தர்மங்கள் செய்வதாகப் பல நாடுகளிலும் பேசப்பட்டதைக் கேட்டு உன்னிடம் யாசிக்கலாமென்று வந்தேன். ஆனால் நீயோ எனது உருவத்தைக் கண்டு கேலியாக நகைத்தாய். எளியவர்களைக் கண்டு இரக்கம் கொள்வதற்குப் பதிலாகக் கேலி செய்த நீயும் உனது வம்சத்தினரும் சொல்லொணாத் துன்பங்களுக்காளாவீர்கள். நீ எருதாகப் பிறந்து வயல் உழுவாய்’’ என்று சபித்தான் மதுசூதனன்.

தனது கணவனைச் சபித்த அந்தணனான மதுசூதனைப் பார்த்து கோபத்துடன் சுலபனின் மனைவி சுபத்திரை கூறினாள்; ‘‘அந்தணரே யாசிக்க வந்த நீர் கோபம் கொள்வது எந்தளவில் நியாயமானது. அத்துடன் அரசனைச் சபித்தும் விட்டீர். பொறுமையைக் காக்காது அவசரப்பட்டு அரசனைச் சபித்தமையால் நீர் கழுதையாகப் பிறந்து அழுக்குத் துணிகளைச் சுமக்கக் கடவீர்’’ என்று சபித்தாள்.

மதிசூதனனுக்குக் கோபம் அதிகரித்தது; ‘‘அரசியாரே, முனிவர்களால் சபிக்கப்பட்டவர்கள் தமது தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டு சாப விமோசனம் பெற வேண்டுமே தவிர, ஆத்திரப்பட்டு யாசிக்க வந்தவனைச் சபிக்கக் கூடாது. அரசர் தனது தவறை உணர்ந்து பேசு முன், நீ, ஒரு பெண்ணாக இருந்தும் பெண் தன்மையற்று என்னைச் சபித்தமையால் நீ சண்டாளப் பெண்ணாக மாறித் துன்பங்களை அனுபவிப்பாய்’’ என்று கூறி விட்டு வெளியே சென்றான் மதுசூதனன்.

சாபங்களின் பயனாக மூவரும் மூன்று உருக்களையும் பெற்றனர். சுலபன் எருதாக மாறி அவ்வூர் உழவனிடஞ் சென்றடைந்தான். மதுசூதனன் கழுதையாக மாறி அவ்வூர் வண்ணானைச் சென்றடைந்தான். சுபத்திரை சண்டாளப் பெண்ணுருக் கொண்டு அவ்வூர் சேரியை அடைந்தாள்.

ஒரு நாள் உழவன் எருதை அவிழ்து நுகத்தில் பூட்டி வயலை உழுது விட்டு மேய்வதற்காக புற்தரையில் கட்டினான். அப்புற்றரை யெங்கும் அறுகம் புற்கள் காடாக வளர்ந்திருந்தன. அதன் அருகே ஒரு குளமிருந்தது. வண்ணான் புற்தரையில் கழுதையைக் கட்டி விட்டு அக்குளத்தில் அழுக்குத் துணிகளைத் தோய்த்தான் அப்பொழுது சண்டாளப் பெண்ணாக மாறிய சுபத்திரை தனது பசுக்களுக்குப் புல் வெட்ட வந்திருந்தாள். அப்பொழுது பெரும் இடி மின்னலுடன் மழை பெய்ய ஆரம்பித்தது. கழுதையும் எருதும் சண்டாளப் பெண்ணும் மழைக்காக அருகில் இருந்த விநாயகர் கோயிலில் ஒதுங்கினர். சண்டாளப் பெண் அறுத்து வந்த அறுகம் புல்லைக் கோயிலுள் கொண்டு சென்று வைத்தாள். அறுகம் புல்லைக் கழுதையும் எருதும் இழுத்துத் தின்றன. இழுத்து உண்ணும் போது அறுகம் புற்கள் அருகில் இருந்த விநாயகர் மீது பட்டன. புற்களைக் கழுதையும் எருதும் உண்பதைக் கண்ட சண்டாளப் பெண் ஒரு தடியை எடுத்து கழுதைக்குப் பலமாக அடித்தாள். கழுதை மிரண்டு ஓடும் போது எருதைத் தனது பின்னங் கால்களால் உதைத்தது. அதனால் இரண்டும் கோபமுற்றுச் சண்டையிட்டன. அச்சண்டையின் போது சண்டாளப் பெண் காயப்பட்டாள். அவள் அறுத்து வைத்திருந்த அறுகம் புற்கள் விநாயகரின் மேல் கொட்டிக் கிடந்தன.

மாலைநேரப் பூசைக்காக வந்த அந்தணன், முட்டி மோதும் கழுதையையும் எருதையும் சண்டாளப் பெண்ணையும் வெளியே துரத்தினான். மழை முன்பை விட அதிகரித்ததோடு பலத்த புயற் காற்றும் வீசியது. மூவரும் கடும் மழையில் ஒதுங்க இடமின்றித் தவித்தனர். சண்டாளப் பெண் கொண்டு வந்த அறுகம் புற்கள் விநாயகர் மீது பட்டமையால் தீட்டுப்பட்டு விட்டதென்று உணர்ந்த அந்தணன் அப் புற்களை நீக்கிச் சுத்தம் செய்து விட்டுப் பூசை செய்தார். இரவு முழுவதும் மழை பெய்தமையால் கழுதையும் எருதும் சண்டாளப் பெண்ணும் மழையில் நனைந்து விறைத்து இறந்து விட்டனர்.

விடிந்ததும் வெளியே வந்து பார்த்த அந்தணனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இறந்து கிடந்த மூவரையும் அழைத்துச் செல்ல விநாயகப் பெருமான் தனது பூத கணங்களோடு வந்திருந்தார். அந்தணன் வியப்போடு விநாயகரை வணங்கி; ‘‘ஐயனே, விதி முறைப்படி பூசை செய்து வணங்குவோர் இறந்தாலும் வந்து அழைத்துச் செல்லாத நீங்களும் உங்கள் கணங்களும் தீட்டுள்ள சண்டாளப் பெண்ணையும் அறிவற்ற ஜீவன்களான எருதையும் கழுதையும் அழைத்துச் செல்ல வந்த காரணத்தை எனக்குச் சொல்லவேண்டும்’’என்றான்.

‘‘அந்தணரே! கழுதையும் எருதும் உண்ணும் போது என்மீது பட்ட அறுகம் புற்களால் அவர்கள் பெற்ற சாபம் நீக்கியது. சண்டாளப் பெண் அறுகம் புல் கட்டை என் அருகில் வைத்ததால் தான்

இவ்வளவும் நடை பெற்றது''. என்று கூறிய விநாயகப் பெருமான் அறுகம் புல்லின் மகிமையைப் பற்றி அந்த அந்தணனுக்குக் கூறினார்; ''தாபரம் என்ற நாட்டின் தென்பகுதியில் பனை மரங்கள் நிறைந்த தோப்பு ஒன்று உண்டு. அத்தோப்பில் கவுண்டின்யர் என்ற முனிவர் தவஞ் செய்து வந்தார். அவரது மனைவியின் பெயர் ஆசிரியை. கவுண்டின்னியர் தினமும் அறுகம் புற்களாலேயே விநாயகருக்கு அர்ச்சனை செய்து வந்தார். அவரது மனைவியார் விதம் விதமான அழகுள்ள நறுமணமுள்ள மலர்களால் மாலைகள் கட்டிக் கொடுப்பாள். அர்ச்சிப்பதற்காகப் பலவர்ணப் பூக்களைப் பறித்து வந்து கொடுப்பார். ஆனால் கவுண்டின்யர் அவற்றைப் பூசைக்குப் பயன்படுத்தாது அறுகம் புல்லில் மாலை கட்டி விநாயகருக்குப் போட்டு அறுகம் புல்லாலேயே அர்ச்சனை செய்வார். இதனால் கவலை கொண்ட ஆசிரியை தனது கணவனை அணுகி; ''சுவாமி நான் கட்டித்தரும் மாலைகளை நீங்கள் ஒரு போதும் விநாயகருக்குச் சாத்துவதில்லை. அத்துடன் விநாயகரை மலர்களாலும் அர்ச்சிப்பதில்லை. இதன் காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டாள்.

அதற்கு முனிவர் சொன்னார்; ''யமதர்மராஜனின் சபையில் தேவருலகின் தலை சிறந்த நாட்டியத் தாரகையான திலோத்தமை நடனமாடிக் கொண்டிருந்தாள். யமதர்மராஜனும் அவையில் இருந்த தேவர்களும் அவளின் அற்புதமான நடனத்தைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவளது மேலாடை நழுவிக் கீழே விழுந்தது. திலோத்தமை நாணமுற்றுச் சபையை விட்டு ஓடினாள். அவளது மேனியழகைக் கண்டு மயங்கிய யமதர்மராஜன் நாணமுற்று ஓடும் திலோத்தமையைத் துரத்திக் கொண்டு அந்தப் புறத்திற்குச் சென்றான். அதற்கு முன் விரததாபமடைந்த அவனின் உடலில் இருந்து சுக்கிலம் வெளியேறியது. அதிலிருந்து அனலாசுரன் என்ற கொடிய அரக்கன் தோன்றினான். அவன் தேவருலகில் இருந்த தேவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். அனலாசுரனின் கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் நாராயணனிடம் அடைக்கலம் புகுந்தனர். அனலாசுரனின் பலத்தை அறிந்த நாராயணன் தேவர்களை அழைத்துக் கொண்டு விநாயகரிடம் சென்று முறையிட்டார். அனலாசுரன் தேவர்களுக்குப் பாதுகாப்பளித்துக் காப்பாற்ற முற்பட்ட விநாயகரைத் தாக்குவதற்காக அவரை நெருங்கி வந்தான். விநாயகர் தும்பிக்கையினால் அவனைத் தூக்கித் தனது வாய்க்குள் வைத்து விழுங்கினார்.

அனலாசுரன். விநாயகரின் வயிற்றுக்குள்ச் சென்றதும் அளவுக்கதிகமான வெப்பம் தோன்றியது. அதனால் விநாயகர் துன்பப்பட்டார். தேவர்கள் அவ் வெப்பத்தை நீக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பால், தயிர், இளநீர், குளிர்ந்தநீர் ஆகியவற்றால் அபிஷேகம் செய்தனர். இவற்றால் அபிஷேகம் செய்தும் விநாயகரின் வெப்பம் தணியவில்லை. விநாயகரின் வயிற்றுக்குள்ளிருந்த அனலாசுரன் அங்கிருந்து அட்டகாசங்கள் பலவும் செய்தான். அதனால் துன்பப்பட்ட விநாயகரின் உடலெங்கும் சந்தனத்தையும் வீபூதியையும் தேவர்களும் முனிவர்களும் பூசினர். இருந்த போதும் விநாயகரின் உடல் வெப்பம் குறையவில்லை. அப்பொழுது முனிவர்கள் அறுகம் புல்லைக் கொண்டு வந்து அவரின் உடலெங்கும் போட்டு வணங்கினர். அறுகம் புற்கள் விநாயகரின் மீது பட்டதும் அவரைத் துன்புறுத்திய வெப்பம் நீக்கிவிட்டது அதனால் மகிழ்ந்த விநாயகப் பெருமான் மனம் மகிழ்ந்து அங்கிருந்தவர்களுக்குச் சொன்னார்; ''முனிவர்கள் அறுகம் புல்லால் என்னை அர்ச்சித்தமையால் எனது வெப்பம் தணிந்து விட்டது. இனிமேல் என்னை அறுகம் புல்லால் அர்ச்சியுங்கள். அது தான் எனக்கு விருப்பமானது'' என்றார். அதனால் தான் நான் தினமும் விநாயகரின் விருப்பப்படி அறுகம் புல்லால் அவரை அர்ச்சிக்கிறேன்'' என்றார் கவுண்டின்யர். அவரின் மனைவி அதைக் கேட்டு ஆச்சரிய மடைந்து தினமும் அறுகம் புல்லால் மாலை கட்டி விநாயகருக்குப் போட்டு வந்தாள்.

***மூசிகம் வாகனமானது***

சபரி என்றொரு முனிவர் காட்டில் பன்னசாலை அமைத்துத் தவஞ் செய்து கொண்டிருந்தார். அவரின் மனைவி மனோமயை மிகவும் அழகானவள். அவள் ஒரு நாள் பன்னசாலையின் வெளியே இருந்த பூந்தோட்டத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்தாள். ஆற்றிற்கு நீராடச் சென்ற முனிவர் வரு முன் விநாயகருக்கு மாலை கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அவளது மனதில் பதிந்திருந்தது. அப்பொழுது ஆகாயமார்க்கமாகச் சென்று கொண்டிருந்த விநாயக பக்தனான கிரவிஞ்சன் என்னும் காந்தர்வன் பூப்பறித்துக் கொண்டிருந்த மனோமயையின் பேரழகால் கவரப்பட்டு பூந்தோட்டத்தில் வந்து இறங்கி அவளது கையைப் பிடித்தான்.

மனோமயை கடுங் கோபங் கொண்டு; ''இந்த இடத்தை விட்டு உடனே ஓடிப் போய்விடு. நான் சபரி என்ற பெரு முனிவரின் மனைவி. காந்தர்வனானாலும் உன்னை என்னால் எரித்துச் சாம்பராக்க முடியும். ஆனால் நான் அதை விரும்பவில்லை. முனிவர் வந்தால் உன்னைச் சபித்து விடுவார்'' என்றாள். அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போது முனிவர் அவ்விடத்திற்கு வந்து விட்டார்; ''துட்டனே இன்னொருவரின் மனைவி என்று தெரிந்தும் அவள் மீது மோகங் கொண்டமையால் நீ மண்ணைத் தோண்டி வாழும் மூசிகமாக மாறக் கடவாய்'' என்று சபித்தார்.

அதைக் கேட்ட கிரவிஞ்சன் தனது தவறை உணர்ந்து முனிவரின் பாதங்களில் விழுந்தான்; ‘‘முனிசிரேஷ்ரரே அறியாமல் நான் செய்த தவறை மன்னித்து, எனக்குச் சாப விமோசனம் தந்தருளல் வேண்டும்’’ என்று மன்றாடினான்.

அதனால் மனமிரங்கிய முனிவர்; ‘‘காந்தர்வனே இன்னும் சில தினங்களில் விநாயகப் பெருமான் பரராச முனிவரின் ஆச்சிரமத்தில் அவதரிக்கவுள்ளார். நீ அங்கு சென்று விநாயகரைத் தரிசித்துப் பேறு பெறுவாயாக’’ என்று கூறினார். உடனே கிரவிஞ்சன் மூசிகமாக மாறினான்.

கிரவிஞ்சன் மூசிகமாக மாறி மண்ணைத் துளைத்துக் கொண்டு திரியும் நாளில் ஒரு நாள் நாரதர் தேவேந்திரனது சபைக்கு வந்து; ‘‘தேவேந்திரா, கேமவதி என்ற நாட்டு அரசனான அபிநந்தனன், இந்திரப் பதவியை அடைவதற்கான யாகம் ஒன்றைச் செய்கிறான். அந்த யாகத்தை இதுவரை யாரும் செய்யாதளவிற்கு மிகவும் பெரியதாகவும் சிறப்பானதாகவும் செய்கிறான். மூவுலகங்களிலுமுள்ள முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் ஞானிகளுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறான். ஆனால் உன்னை அழைக்கவில்லை. இது உனக்குப் பெரும் அவமானமாகும். அத்துடன் யாக வலிமையால் அவன் இந்திரப் பதவியை அடைந்தால் உனது நிலை என்னாகும்?’’ என்று கேட்டார்.

நாரதரது வார்த்தைகளைக் கேட்ட இந்திரனுக்குக் கடுங் கோபம் வந்தது. செய்வதறியாது தடுமாறிய அவன் காலநேமியைத் தியானித்தான். மறுகணம் காலநேமி உக்கிரமான வடிவமெடுத்து இந்திரன் முன் தோன்றி; ‘‘தேவரீர் என்னை அழைத்த காரணம் என்ன?’’ என்று கேட்டான்.

‘‘சகல வல்லமையும் பொருந்திய தேவனே! பூவுலகில் இந்திரப் பதவியை விரும்பி அபிநந்தனன் என்ற அரசன் மாபெரும் யாகம் ஒன்றைச் செய்கிறான். அந்த யாகத்தை அழித்து அவனையும் கொன்று விட்டு வருவாயாக’’ என்றான்.

‘‘கவலையை விடுங்கள் பிரபு. இப்பொழுதே பூவுலகம் சென்று அபிநந்தனைக் கொன்று அவன் செய்யும் யாகத்தையும் அழிக்கிறேன்’’ என்று கூறி விட்டு பூவுலகிற்குச் சென்ற காலநேமியாக யாகசாலைக்குள் புகுந்து அதை அழித்ததோடு யாகம் செய்த அந்தணர்களையும் அங்கு வந்திருந்த முனிவர்களையும் கடுமையாகத் தண்டித்தான். அத்துடன் தன்னை எதிர்த்த அபிநந்தனையும் அவனது படைவீரர்களையும் கொன்று குவித்தான். பயந்து ஓடிய முனிவர்களையும் பிராமணர்களையும் காலநேமி துரத்தித் துரத்தித் தாக்கினான். பயந்து ஓடிய முனிவர்கள் விநாயகப் பெருமானின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்துத் தம்மைக் காப்பாற்றுமாறு வேண்டினர்.

‘‘பயப்படாதீர்கள். நான் உங்களைக் காப்பாற்றுவதற்காக வரேனியன் என்ற அரசனின் மகனாக அவதரிப்பேன்’’ என்றார்.

அதைக் கேட்டு முனிவர்கள் மனமகிழ்வுடன் விநாயகரைத் துதித்து விட்டுச் சென்றனர். மன்னன் வரேணியன் திருமணம் செய்து பல ஆண்டுகள் கழிந்தும் பிள்ளைப் பேறின்மையால் மிகவும் வருந்தி விநாயகரைத் தொழுது வந்தான். அவனது மனைவி புஷ்பகை தினமும் அறுகம் புல்லால் மாலை கட்டி விநாயகருக்குப் போட்டு வணங்கி வந்தாள். அதன் பேறாகஅவளது வயிற்றிலே விநாயகர் திருஅவதாரம் செய்தார்.

குழந்தை நான்கு கால்களும், தும்பிக்கையும், நான்குகரங்களும் பெருத்த தொந்தியும் கொண்டதாக இருந்தது. அதைக் கண்ட புஷ்பகை பயந்து போனாள். தோழியர் ஓடிச் சென்று மன்னனுக்கு அச் செய்தியைச் சொன்னார்கள். குழந்தையைப் பார்க்கும் ஆசையில் காத்திருந்த வரேணியன் தனக்குப் பிறந்த குழந்தை விநாயகன் என அறியாது அவலட்சணமான அசுரக் குழந்தை என்று நினைத்துக் கவலைப் பட்டான். சோதிடர்கள் அக் குழந்தையால் அரசனுக்குக் கேடு வருமென்று கூறினர். அதனால் அரசனின் கட்டளைப்படி அக் குழந்தையை வீரர்கள் எடுத்துச் சென்று பரராச முனிவரது ஆச்சிரமத்திற்கு அருகில் இருந்த குளக்கரையில் விட்டு விட்டு வந்தனர்.

நீராட வந்த பரராச முனிவர் குழந்தையைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார். அக்குழந்தை விநாயகன் என்று அவருக்குத் தெரியும். அக்குழந்தையை ஆசையோடு அணைத்தெடுத்துத் தனது ஆச்சிரமத்திற்குக் கொண்டு சென்ற பரராச முனிவர் அதை அன்போடு வளர்த்தார். விநாயகன் வளர்ந்து பரராச முனிவரது ஆச்சிரமத்தில் இருந்த பூஞ்சோலையில் ஓடி விளையாட ஆரம்பித்தான்.

ஒருநாள் விநாயகன் பூந்தோட்டத்தில் ஓடி விளையாடிக் கொண்டிருக்கும் போது சபரி என்ற முனிவரால் மூசிகமாகச் சபிக்கப்பட்ட கிரவிஞ்சன் அங்கு நின்ற மரங்களினது வேர்களை அறுத்து நாசஞ் செய்தான். அதைக் கண்ட பரராசர் துயருற்றார். பரராச முனிவரின் துயரைப் போக்க எண்ணிய விநாயகர், மூசிகனை நோக்கித் தனது பரசத்தை ஏவினார்.

பரசு மூசிகனைத் தாக்க வந்தது. அதனால் மூசிகன் நிலத்தைத் துளைத்துக் கொண்டு ஓடினான். பரசு அவனைத் தொடர்ந்து சென்றது. மூசிகன் பாதாள உலகம் வரை சென்றான். பரசு அவனைத்

துரத்திக் கொண்டு பாதாள உலகிற்குச் சென்றது. அதற்கு மேல் அவனால் ஓட முடியவில்லை. அதனால் அவன் விநாயகரை நினைத்துத் தன்னைக் காப்பாற்றுமாறு வணங்கினான். விநாயக பக்தனான அவன் சபரி முனிவரின் சாபத்தால் மூசிகனானதை அறிந்த விநாயகர் அவனைத் தனது வாகனமாக ஏற்றுக் கொண்டார்.

மூசிகனின் மேலமர்ந்து வந்த விநாயகனைக் கண்டு மகிழ்ந்த பரராச முனிவர் அவரை வணங்கி; ‘‘சர்வேஸ்வரனான விநாயகரே, இந்திரன் அபிநந்தனனின் யாகத்தை அழிக்கும் படி பூவுலகிற்கு அனுப்பிய காலநேமி என்னும் அரக்கன் பூவுலகில் எங்கெல்லாம் யாகங்கள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் சென்று யாகங்களையும் அழித்து முனிவர்களையும் கொன்று வருகிறான். அவனது கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை’’ என்றார். அப்போது தேவர்கள் பலர் கூட்டமாக வந்து விநாயகரை வணங்கி; ‘‘தேவரீர், காலநேமி, தேவருலகிலும் யாகங்களை அழித்து எம்மைத் தண்டிக்கிறான். அவனை அழித்து எம்மையும் காப்பாற்றுங்கள்’’ என்று வேண்டினர்.

விநாயகர் தனது கையிலிருந்த அங்குசத்தை எடுத்து காலநேமியைக் கட்டி இழுத்து வரும்படி ஏவினார். உடனே அங்குசம் விரைந்து சென்று காலநேமியைக் கட்டி இழுத்து வரும்படி ஏவினார். உடனே அங்குசம் காலநேமியைக் கட்டி இழுத்து வந்து விநாயகரின் முன் விட்டது. இனித் தப்ப முடியாது என்றுணர்ந்த காலநேமி தான் செய்த குற்றங்களை மன்னிக்குமாறு அவரது பாதங்களைப் பணிந்து கேட்டான். விநாயகர் காலநேமியை மன்னித்தார் தமது தவறை உணர்ந்த வரேணியனும் அவனது மனைவி புஷ்பகையும் பரராச முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்து விநாயகரை வணங்கினர். பின் விநாயகர் அவர்களுக்கு அருள் பாலித்து வரமருளி மறைந்தார்.

### *சதுர்த்தி விரதம்*

பிரமதேவனின் மகனான தக்கன் யாகம் ஒன்றைச் செய்தான். அதற்கு பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலான தேவர்கள் அனைவரையும் அழைத்தான். மூவுலகிலும் உள்ள முனிவர்கள் எல்லோரும் யாகத்திற்கு வந்திருந்தனர். ஆனால் தக்கன் மகளின் கணவனான சிவபெருமானை அழைக்கவில்லை. என்ன தான் முழு முதற் கடவுளாக இருந்தாலும் சிவபெருமான் தனது மருமகன் ஆகையால் தனக்குக் கீழ்பட்டவரோ என்று செருக்கடைந்திருந்தமையாலே தான் அவன் சிவபெருமானை மதித்து அழைக்கவில்லை. தகப்பனான தக்கன் செய்யும் யாகத்திற்கு செல்ல, சிவபெருமானிடம் தாட்சாயணி அனுமதி கேட்டாள். தாட்சாயினிக்கு தகப்பனின் மீதிருந்த பாசத்தை அறிந்து கொண்ட சிவபெருமான் நியாயத்தை எடுத்துக் கூறித் தன்னை அவமதித்த தக்கனின் யாகத்திற்குச் செல்ல வேண்டா மென்று கூறினார். அங்கு சென்றால் நீ அவமானப் படுவாய் என்று எடுத்துரைத்தார். ஆனால் தாட்சாயணி சிவனின் சொல்லைக் கேளாது தந்தையான தக்கன் நடத்திய யாகத்திற்கு சென்றாள்.

யாகத்திற்குச் சென்ற தாட்சாயிணியை யாரும் மதிக்கவில்லை. ஒப்புக்குக் கூட தக்கன் அவளை வா என்று அழைக்கவில்லை. அதனால் கோபங் கொண்ட தாட்சாயணி யாகசாலையைச் சுடலையாக மாறும்படி சபித்து விட்டுக் கைலாயத்திற்குச் சென்று சிவபெருமானிடம் தான் செய்த தவறிற்கு மன்னிப்புக் கோரினாள். சிவபெருமான் ருத்திரமூர்த்தியானார். அவரது நெற்றிக் கண் நெருப்புச் சுவாலையாகப் பிரகாசித்தது. அதிலிருந்து வீரபத்திரர் தோன்றினார்; ‘‘வீரபுத்திரா, தக்கன் அகந்தையுடன் செய்யும் யாகத்தை அழித்து யாகத்தில் கலந்து கொண்டோரைத் தண்டித்து வா’’ என்றார்.

ருத்திரமூர்த்தியாகச் சென்ற வீரபுத்திரர் தக்கனைக் கொன்று விட்டு, அவ்யாகத்தில் கலந்து கொண்டோரில் பலரைக் கொன்றார். சிவபெருமான் பின்னர் கோபந்தணிந்து தக்கனால் அழிக்கப்பட்டவர்களை உயிர்ப்பித்தார். யாகசாலையில் வெட்டப்பட்டிருந்த ஓர் ஆட்டின் தலையை எடுத்து தக்கனின் முண்டத்தில் வைத்து அவனை உயிர் பெறச் செய்தார்.

தனது கணவனை மதிக்காது சென்ற தாட்சாயினியின் மனம் நிம்மதியில்லாமல் தவித்தது. தக்கனின் மகளாகப் பிறந்தது அவமானமெனக் கருதித் தாட்சாயிணி யோகாக்கினியில் கலந்து தக்கனால் தனக்களிக்கப்பட்ட உடம்பை அழித்தாள். பின் பார்வதராஜனுக்கு புத்திரியாகப் பிறந்தாள். சிறுவயது முதல் கைலாயநாதனை வணங்கி வந்த பார்வதி தன் தந்தையிடம் கைலாயநாதரைக் கணவனாக அடைய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?’’ என்று கேட்டாள்.

‘‘மகளே, ஆதிபரம் பொருளான விநாயகப் பெருமானைக் குறித்து சதுர்த்தி விரதம் மேற்கொள்ளல் வேண்டும். ஆவணி மாதத்தில் வரும் சுக்கிலபட்ச சதுர்த்தியன்று சுத்தமான மண்ணாலும் பொன்னாலும் இரண்டு விநாயக உருவங்களைச் செய்து பொற் கும்பத்தின் அருகில் இரு உருவங்களையும் வைத்து ஆகம முறைப்படி பூசை செய்தல் வேண்டும். இப்பூசை புரட்டாதி மாதம் வரும் சுக்கிலபட்ச சதுர்த்தி வரை தினமும் செய்தல் வேண்டும். பின் மண்ணால் செய்யப்பட்ட விநாயகரை மேள தாளங்களுடன் எடுத்துச் சென்று நதியிலோ அல்லது குளத்திலோ கரைத்தல் வேண்டும். இவ்வாறு செய்தால் நீ நினைத்ததை அடையலாம்’’ என்றான் பர்வதராஜன்.

அதைக் கேட்டு மகிழ்ந்த பார்வதிதேவி முறைப்படி விநாயக சதுர்த்தி விரதத்தை அனுட்டித்து கைலாயநாதரின் கரம் பற்றினாள்.

பார்வதி தேவி விநாயக சதுர்த்தி விரதம் அனுட்டிப்பதைக் கண்டு அதிசயித்த முருகன் தனது தந்தையிடம் சென்று; ''தந்தையே, எனது தாயார் விநாயக சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து வருகிறார். சர்வலோக நாயகரான தங்களின் விரதங்கள் பல இருக்க மக்களும், எனது தாயும் விநாயக சதுர்த்தி விரதத்தை அனுஷ்டிப்பதேன்'' என்று கேட்டார்.

''குழந்தாய் விரதங்கள் எல்லாவற்றிலும் மேலான விரதம் சதுர்த்தி விரதமே. விநாயகன் தான் ஆதியான பரம் பொருள். அவர் தான் மும்மூர்த்திகளையும் உருவாக்கி அவர்களுக்கான சக்தியைக் கொடுத்தார். அவர் தேவையான வேளைகளில் தேவையான உருவங்களை எடுக்கிறார். அவ்வுருவங்களில் ஒன்று தான் எனது பிள்ளையாக அவதரித்தது. எனவே நீயும் விநாயகனைத் தொழுது விரதமிருந்து வேண்டியதைப் பெறலாம்'' என்றார். அதனால் தான் முருகன் வள்ளியைத் திருமணம் செய்யும் வேளையில் வினாயகனைத் துதித்து தனது எண்ணத்தை நிறைவேற்றினார்.

கார்த்தமன் என்றொரு அரசன் இருந்தான். அவன் நீதி நெறி முறை தவறாது தனது நாட்டை ஆண்டு வந்தான். ஒரு நாள் பிருகு முனிவர் அவனது ஆச்சிரமத்திற்கு வந்தார். மன்னன் அவரை அன்புடன் வரவேற்று ஆசனத்தில் இருத்தி பணிவிடைகள் பலவும் செய்தான். அதனால் பிருகுமுனிவர் மனம் மகிழ்ந்தார். அப்பொழுது கார்த்தமன் பிருகுமுனிவரிடம் தனது முற்பிறப்பைப் பற்றிக் கூறும்படி கேட்டான்.

''மன்னா, நீ முற்பிறப்பில் வைசிகனாக இருந்தாய். எனினும் உன்னிடம் அதிக செல்வம் இருக்கவில்லை. அதனால் உனது குலத்திற்குரிய தான தர்மங்களை உன்னால் செய்ய முடியவில்லை. அதனால் உறவினர்கள் உன்னை வெறுத்தொதுக்கினர். மனமுடைந்த நீ காட்டு வழியால் செல்லும் போது சவுபரி முனிவரைக் கண்டு வணங்கி உனது மனக் குறைகளைக் கூறினாய். முனிவர் உன்மீது இரக்கப்பட்டு விநாயகரின் மகா மந்திரத்தை உனக்கு உபதேசித்து அதை ஓதும் முறைகளையும் விபரமாகக் கூறினார். அன்று சதுர்த்தி தினம். முனிவரோடு சேர்ந்து நீயும் விநாயகரின் மகா மந்திரத்தை உச்சரித்து சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்தாய். அதனால் பெருஞ் செல்வந்தனானாய். நீ வீடு திரும்பியதும் உன்னை வெறுத்த உறவினர்கள் எல்லோரும் உன்னை மகிழ்வுடன் வரவேற்றனர். அதன் பின் நீ தொடர்ந்து சதுர்த்தி விரதத்தை அனுஷ்ட்டித்துப் பெரும் பேறு பெற்றாய். முற்பிறவியில் நீ சதுர்த்தி விரதத்தை அனுஷ்ட்டித்த பலனே இப்பிறப்பில் உன்னை அரசனாக்கியது. சதுர்த்தி விரதத்தை அனுஷ்ட்டிப்போர் எடுக்கும் பிறவிகளெல்லாவற்றிலும் இன்பத்தை அனுபவிப்பார்'' என்றார் பிருகு முனிவர்.

இதே போல நிடதநாட்டரசனான நளமகாராஜன் சதுர்த்தி விரதத்தை அனுஷ்ட்டித்துப் பெரும் பேறடைந்தான். ஒரு நாள் நளமகாராஜனது அரண்மனைக்கு கௌசிக முனிவர் வந்தார். கௌசிக முனிவரை வரவேற்று உபசரித்த நளன்; ''மாமுனிவரே, நான் பேரின்பப் பேற்றை அடைய விரும்புகிறேன். அதற்கு எந்த விரதத்தை அனுட்டித்தல் வேண்டும்'' என்று கேட்டான்.

''மன்னா, நீ சென்ற பிறவியிலே கவுடதேசத்து அரசனாக இருந்தாய். ஒரு சமயம் எதிரியின் நாட்டிற்குப் படையெடுத்துச் சென்ற சமயம் நீ கௌசிக முனிவரைச் சந்தித்து ஆசி பெற்றாய் அவர் நீ பெரும் பேறடைய வேண்டு மென்பதற்காக விநாயகரின் மகா மந்திரத்தை உபதேசித்து சதுர்த்தி விரதத்தை அனுஷ்ட்டிக்கும் படி கூறினார். ஆகம விதிப்படி நீ சதுர்த்தி விரதத்தை அனுஷ்ட்டித்தமையால் பெரும் பேறடைந்தாய். அதன் பயனால் நீ இப்பொழுதும் சதுர்தி விரதத்தை அனுட்டிக்கிறாய். அதனால் நீ பெரும் பேறடைவாய்'' என்றார்.

மளவதேசத்தை சந்திரகாந்தன் என்னும் மன்னன் நீதி நெறி தவறாது ஆண்டு வந்தான். அவனிடம் சக்தி வாய்ந்த சூலாயுதம் ஒன்றிருந்தது. ஒரு நாள் அவன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். காட்டில் உள்ள அரக்கர்கள் பலர் அவனைக் கொல்ல வந்தனர். சந்திரகாந்தன் தனது சூலாயுதத்தால் அரக்கர்கள் அனைவரையும் கொன்றான். அப்பொழுது அக்காட்டில் வாழ்ந்த அரக்கி ஒருத்தி அவனுடன் போர் செய்ய வந்தாள். அவள் பெண்ணாகையால் அவளுடன் போரிடுவது தர்மமாகாது என உணர்ந்த சந்திர காந்தன் ஒரு குளக்கட்டின் அருகே மறைந்திருந்தான்.

அக்குளத்திற்கு நீராட வந்த நாக கன்னியர்கள் அவனைக் கண்டு அவனின் அழகில் மயங்கி அவனை நாகலோகத்திற்கு அழைத்துச் சென்றனர். பன்னிரண்டு ஆண்டுகள் சந்திரகாந்தன் நாக லோகத்தில் வாழ்ந்தான். ஒரு நாள் அரண்மனைக்கு நாரதர் வந்தார். அவனது மனைவியான இந்துமதி அவரை வரவேற்று உபசரித்துத் தனது கணவன் காணாமற் போனது பற்றி கவலையுடன் சொல்லித் தனது கணவனைத் தேடித்தருமாறு அழுதாள்.

‘‘உனது கணவனை நாககன்னியர்கள் அழைத்துச் சென்று நாகலோகத்தில் அடைத்து வைத்திருக்கின்றனர். நீ முறைப்படி சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்தால் நாக கன்னியர் உனது கணவனை விடுவிப்பர்’’ என்று கூறி அவளுக்கு ஏகாட்சர மந்திரத்தை உபதேசித்தார். இந்துமதி ஆகம விதிப்படி ஏகாட்சர மந்திரத்தை உச்சரித்து சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்தார். அதன் பயனாக பெருஞ் செல்வங்களுடன் சந்திரகாந்தனை அழைத்து வந்த நாக கன்னியர் அவனை இந்துமதியிடம் ஒப்படைத்தனர்.

தாருக்கன் என்ற அசுரன் சிவபெருமானை நோக்கிக் கடுந் தவம் செய்து, நூற்றெட்டுயுகம் அரசாளும் வரம் பெற்றான். அதன் பின் அவன் சகல லோகங்களையும் கைப்பற்றித் தேவர்களை அடிமைப்படுத்தி சிறையில் அடைத்தான். அசுரனிடம் அகப்படாத இந்திரன் பிரம தேவரிடம் சென்றான். பிரமதேவரும் இந்திரனும் பயத்துடன் சிவபெருமானிடம் ஓடிச் சென்றனர். அப்பொழுது வானில் அசரீதி ஒன்று ஒலித்தது; ‘‘தேவர்களே உங்கள் துயர் தீரவேண்டுமானால் சுப்பிரமணியர் தோன்ற வேண்டும். அதற்காகச் சிவனைப் பிரார்த்தியுங்கள்’’.

அதைக் கேட்ட இந்திரனும் பிரமதேவனும் சிவபெருமானிடம் சென்றனர். வழியில் உலகமாதாவான பார்வதிதேவி எதிர்ப்பட்டாள். இந்திரன் பார்வதிதேவியை வணங்கித் தமக்கேற்பட்ட துன்பங்களைத் துயரத்துடன் கூறினான்.

பார்வதிதேவியார் மனமிரங்கி; ‘‘தேவனே சிவபெருமான் கோளகிரியில் முனிவர்களுக்கு ஞான உபதேசம் செய்கிறார். அவரைச் சென்றடைந்து பிராத்தியுங்கள்’’ என்று கூறிவிட்டுச் சென்றாள்.

கோளகிரியில் சிவபெருமான் யோகநிலையில் இருந்தமையால் அவரின் யோக நிலையைக் குழப்ப அவர்களால் முடியவில்லை. சுப்பிரமணியர் தோன்ற வேண்டுமானால் சிவனுக்கு விரக தாபத்தைத் தூண்ட வேண்டும். அதற்காக இந்திரனும் பிரமதேவரும் மன்மதனின் துணையை நாடினர். முதலில் மன்மதன் பயந்த போதும்; ‘‘பின் தேவர்களின் வேண்டு கோளுக்கிணங்கி மன்மத பாணங்களை சிவனின் மீது விடுத்தான். யோகம் கலைந்து கோபா வேஷத்துடன் விழித்த சிவனது கண்களிலிருந்து வெளியேறிய அக்கினி மன்மதனை எரித்துச் சாம்பராக்கியது.

பின் அவ் அக்கினி சரவணப் பொய்கையில் விழுந்து ஒரு குழந்தையாகியது. அக்குழந்தையைக் கார்த்திகைப் பெண்கள் வளர்த்தனர். அக் குழந்தையைப் பார்வதிதேவி அனைத்தெடுத்துச் சுப்பிரமணியனெனப் பெயரிட்டார்.

சரவணப் பொய்கைக்கு வந்த நாராயணனும் பிரமாதி தேவர்களும் தமக்கு தாருக்கனால் தினமும் உண்டாகும் துன்பங்களை சுப்பிரமணியருக்கு எடுத்துக் கூறித் தம்மைக் காத்தருளுமாறு வேண்டிக் கொண்டனர். சுப்பிரமணியர் காட்டுக்குச் சென்று விநாயகரின் சடாச்சர மந்திரத்தைத் தியானித்து வணங்கினார். அப்போது விநாயகர் அவரின் முன் தோன்றி; ‘‘ஈசனின் புத்திரனான உனக்குச் சகல சக்திகளையும் அளிக்கின்றேன். அத்துடன் எனது வாகனமான மயில் இன்று முதல் உனது வாகனமாகட்டும். அதில் ஏறித் தேவர்களின் துயரைத் தீர்ப்பாயாக’’ என்றார்.

சுப்பிரமணியர் விநாயகரின் உருவத்தைப் பிரதிஷ்டை செய்து அறுகம் புற்களால் அர்ச்சித்து சதுர்த்தி விரதம் அனுஷ்டித்தார். அதன் பின் ஆயுதங்களுடன் மயிலின் மீது ஏறிச் சென்று தாருகாசுரனை கொன்றார். சுப்பிரமணியர் பிரதிஷ்டை செய்த விநாயகருக்கு இலக்கண விநாயகர் என்றும் அத்தலத்திற்கு மயூரேசம் என்றும் பெயரேற்பட்டது.

தனது கணவனான மன்மதன் எரிந்து சாம்பரானதைக் கேள்விப்பட்ட அவனது மனைவியான ரதிதேவி தலை விரி கோலத்துடன் சிவபெருமானிடம் சென்று தனது துயரை எடுத்துரைத்தார். அதற்கு இரங்கிய சிவபெருமான்; ‘‘மங்கையே, உனது துயரம் எனக்குப் புரிகிறது. இன்று முதல் உனது கணவன் உனது கண்களுக்கு மட்டும் புலப்படுவான்’’ என்று அருள மன்மதன் அங்கு தோன்றித் தனது செயலுக்கு மன்னிப்புக் கோரி, தனக்கு உருவம் தருமாறு வேண்டினான்.

‘‘மன்மதா நீ உருவம் பெற வேண்டுமானால் தேவர்களுக்கு ஆதிபரம் பொருளாக விளங்கி நிற்கும் விநாயகனை தியானித்து ஆராதனை செய்து விரதம் அனுஸ்டிப்பாயாக’’ என்று கூறினார்.

மன்மதன் தனது மனைவியோடு சுப்பிரமணியரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட இலக்கண விநாயகரின் ஆலயத்திற்குச் சென்று அவரை வணங்கி விரதம் அனுஷ்டித்தான். மன்மதனது விரதத்தின் மகிமையை உணர்ந்த விநாயகர் அவன் முன் தோன்றினார்; ‘‘மன்மதா, எனது மகாமந்திரத்தை உச்சரித்து சதுர்த்தி விரதத்தை மேற்கொண்டமையால் உனது விருப்பம் நிறைவேறும். விரைவில் நாராயணன் கண்ணனாக அவதாரம் எடுக்கவுள்ளார். அவருக்கு மகனாகப் பிறந்து உன் சுய உருவத்தை நீ அடைவாய்’’ என்று அருளி மறைந்தார்.

அதன் பின் மன்மதன் விநாயகருக்கு ஓர் ஆலயம் அமைத்து அதில் மகோற்கட விநாயகரைப் பிரதிஷ்டை செய்து வணங்கியதன் பலனாக மகா விஷ்ணு பூவுலகில் அவதரிக்க, அவரின் புத்திரனாக, ருக்மணியின் வயிற்றில் பிரதியும்மணன் என்ற பெயரில் பிறந்தான்.

மன்மதனின் மனைவியான ரதிதேவி சம்பாசுரனின் வளர்ப்பு மகளாக அவதரித்தாள். இதை நாரதர் மூலம் அறிந்து கொண்ட பிரதியும்மணன் சம்பாசுரனோடு போர் தொடுத்தான். பல வருடங்கள் கழித்தும் போர் முடியவில்லை. அதனால் கவலைப்பட்ட ருக்மணி விநாயகரின் மகா மந்திரத்தை உச்சரித்து சதுர்த்தி விரதத்தை மேற்கொண்டாள். ஆறாவது நாள் பிரதியும்மணன் சம்பாசுரனைக் கொன்று ரதிதேவியை மணந்து கொண்டான்.

அவர்களுக்கு அழகிய ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதற்குப் பிரதியும்மணன் அனிருத்தன் என்று நாமஞ்சூட்டினான். அனிருத்தன் வளர்ந்து வாலிபனானான். அவனின் அழகில் மயங்கிய உஷை என்ற இராஜகுமாரி அவனை நினைத்து மனமுருகி உடல் மெலிந்தாள். தனது தோழியின் நிலையைக் கண்ட சித்திரசேனை என்ற தோழி ஏவலாளர்களை அனுப்பி அரண்மனையில் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த அனிருத்தனைக் கட்டிலோடு தூக்கி வரச் செய்து அந்தப்புரத்தில் உஷையுடன் இன்பமாக வாழ ஏற்பாடு செய்தாள். உஷையின் அழகில் மயங்கிய அனிருத்தன் அவளே தஞ்சமெனக் கிடந்தான். அதனால் அவன் தன் பெற்றோரை மறந்து விட்டான்.

மகனைக் காணாத பிரதியும்மணன் உலகெங்கும் மகனைத் தேடினான். ஆனால் அவனது இருப்பிடத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. இதனால் அவன் பெரும் துயரடைந்தான்.

இரகசியமாக மணவாழ்க்கை வாழ்ந்த உஷை கர்ப்பமுற்றாள். இதை அறிந்த உஷையின் தந்தை அனிருத்தனைப் பாதாளச் சிறையில் அடைத்தான்.

புத்திர பாசத்தால் கவலையுற்றிருந்த ருக்மணி தனது மகனின் நிலையை உணர்ந்து; ''மகனே நீ முன்பு சம்பாசுரனுடன் போர் செய்த போது, நீ பல நாட்களாகத் திரும்பாததால் நான் விநாயகப்பெருமானைத் தியானித்துச் சதுர்த்தி விரதம் மேற் கொண்டேன். அதன் பயனாக ஆறுதினங்களில் நீ போரில் வென்று திரும்பினாய். எனவே சர்வ வல்லமை பொருந்திய விநாயகனைத் தொழுது சதுர்த்தி விரதம் மேற்கொள். உனது துயரம் யாவும் தீரும்'' என்றாள்.

பிரதியும்மணன் விநாயகரை ஆராதித்துச் சதுர்த்தி விரதத்தை மேற்கொண்டான். அதன் பயனாக நாதமுனிவர் கிருஷ்ணனிடம் சென்று அனுருத்தனனுக்கு நேர்ந்த துன்பங்களை எடுத்துக் கூறினார். உடனே கிருஷ்ணபகவான் போர் தொடுத்துச் சென்று அவ்வரசனைக் கொன்று அனிருத்தனை சிறையில் இருந்து மீட்டார்.

தினமும் கைலாயத்திற்கு வரும் தேவர்களும் முனிவர்களும் பரமேஸ்வரனை வணங்கி ஆசிபெற்றுச் செல்வது வழக்கம். பார்வதி சமேதராக எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் ஜடாமகுடத்தில் இருந்த ஆதிசேஷன் தன்னையும் தேவர்களும் முனிவர்களும் பணிந்து வணங்கி மரியாதை செய்வதாக நினைத்துக் கர்வங் கொண்டான். இதை உணர்ந்த சிவபெருமான் ஆதிசேஷனைத் தனது கையில் பிடித்து இழுத்து தரையில் அடித்தார். இதனால் ஆதிசேஷசன் ஆயிரம் துண்டுகளானான்.

ஒரு நாள் அவ்விடத்திற்கு வந்த நாரதர் ஆதிசேஷனது பரிதாப நிலையை உணர்ந்து; ''நீ உனது பழைய நிலையை அடைய வேண்டுமானால் விநாயகரின் சடாச்சர மந்திரத்தை உச்சரித்து சதுர்த்தி விரதம் மேற்கொள்வாயாக'' என்று கூறி விட்டுச் சென்றார்.

ஆதிசேஷன் துயரம் நீங்கிப் பிரவாள நகரஞ் சென்று விநாயகரை நினைத்து சடாச்சர மந்திரத்தை உச்சரித்து சதுர்த்தி விரதத்தை மேற்கொண்டான். விநாயகர் ஆனை முகத்தோடு பத்துக்கைகளில் ஆயுதங்களேந்தி தனது இருபுறமும் சித்தி புத்தியர் எழுந்தருளியிருக்கச் சிங்க வாகனத்தில் தோன்றினார்; ''ஆதிசேஷா, கர்வத்தால் நீ இழந்த சக்திகள் யாவும் உன்னை வந்தடையும். அத்துடன், பிளவுண்ட ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு தலையாக மாறும். முன் போல நீ இப்புவனம் முழுவதையும் தாங்கும் சக்தியை உனக்கு அருளுகிறேன்'' என்று அருளிய விநாயகர் விஸ்வரூபம் கொண்டு ஆதிசேஷனை எடுத்துத் தனது இடுப்பிலே சுற்றி அணிந்து கொண்டார்.

### *சங்கட சதுர்த்தி விரதம்*

ஸஹஸ்ரபுரம் என்ற நாட்டை சூரசேனன் என்ற அரசன் நீதி வழுவாது ஆண்டு வந்தான். ஒரு நாள் வான்வழியாக வந்த பேரொளி மிக்க விமானம் ஒன்று அவனது நாட்டில் தரையிறங்கியது. அதைக் கண்ட மன்னவனும் பிரதானிகளும் அவ்விடத்திற்கு ஓடிச் சென்றனர். விமானத்தில் தேவேந்திரனான இந்திரன் இருந்தான். சூரசேனன் இந்திரனை பணிந்து வணங்கினான்.

‘‘சூரசேனா, நாரதர் பூவுலகில் தான் ஓர் அதிசயத்தைக் கண்டதாகச் சொன்னார். ப்ருசுண்டி என்பவர் விநாயகரின் அனுக்கிரகம் பெற்று அவரின் தோற்றத்துடன் உலாவுவதாகச் சொன்னார். அதனால் அவரைச் சந்தித்து அனுக்கிரகம் பெற்று வரும் வழியில் பெரும்பாவியான ஒருவனின் கண்பட்டு இவ்விமானம் தரையிறங்கி விட்டது. உனதுநாட்டில் சங்கட சதுர்த்தி விரதம் மேற்கொண்டு விநாயகரின் அனுக்கிரகம் பெற்ற யாராவது ஒருவன் இருந்தால் அவனை அழைத்து வா. அவனது பார்வை பட்டால் தான் இவ்விமானம் மேலெழும்பும்’’ என்றான்.

‘‘தேவராஜனே, தயவு செய்து ப்ருசுண்டியைப் பற்றிய வரலாற்றை எனக்குச் சொல்லுங்கள்’’ என்று இரந்தார் சூரசேனர்.

‘‘தண்டகாருண்ணியத்தில் நந்துரம் என்ற நகரில் வேடர்களின் குடியிருப்பு ஒன்று உண்டு. அங்கே விப்ரதன் என்ற வேடனொருவன் இருந்தான். அவன் மிகவும் கொடியவன். காண்போரைக் கொலை செய்பவன் ஒரு நாள் அவன் ஒரு அந்தணனைக் கொலை செய்யும் நோக்குடன் துரத்திச் சென்றான். அந்த அந்தணன் அவனிடமிருந்து தப்புவதற்காக வேகமாக ஓடினான். அப்பொழுது குளம் ஒன்று தென்பட்டது. அதன் கரையில் விநாயகர் ஆலயம் ஒன்றிருந்தது. பிராமணன் விநாயகரை வணங்கும் போது மகா முனிவரான முற்கல முனிவர் அவ்வாலயத்திற்கு வந்தார். விப்பிரதன் முற்கல முனிவரைக் கொல்வதற்காக வாளை ஓங்கினான். முனிவர் விப்பிரதனைப் பார்த்தார். அவரது பார்வையின் சக்தியால் விப்பிரதனின் கையில் இருந்த வாள் தரையில் விழுந்தது. முனிவரின் முகத்தில் தோன்றிய ஒளிப்பிரவாகம் அவனைக் கவர்ந்தது; ‘‘முனிசிரேஷ்டரே வேடனான நான் அறியாமையால் உயிர்களுக்குப் பல தீங்குகளைச் செய்து விட்டேன். அதற்காக என்னை மன்னித்து எனக்குப் பிறவியில்லாத நிலை உருவாக வழி சொல்லல் வேண்டும்’’ என்று இரந்தான்.

முற்கல முனிவர் அவனுக்கு விநாயகரின் திருநாமத்தை உபதேசித்து காய்ந்த கட்டை ஒன்றைக் கொடுத்து; ‘‘இதை நட்டுத் தினமும் விநாயகரின் திருநாமத்தை உச்சரித்து நீரூற்றிவா. உன் எண்ணம் கைகூடும்’’ என்று கூறி விட்டுச் சென்றார்.

விப்பிரதன் மகிழ்ந்து அந்தப் பட்ட கட்டையை நட்டுத் தினமும் நீராடி, அதற்கு நீரூற்றி, விநாயகரின் திருநாமத்தை உச்சரித்து வந்தான். இப்படி ஆயிரம் வருடங்கள் செய்தும் அக்கட்டை துளிர்க்கவில்லை. விப்பிரதன் நம்பிக்கையை இழக்காது தினமும் விநாயகரின் திரு நாமத்தை உச்சரித்து நீரூற்றி வந்தான்.

ஒரு நாள் அக்கட்டை துளிர் விட்டது. அப்பொழுது முற்கல முனிவர் அங்கு வந்தார். பட்ட கட்டை தளிர்த்திருப்பதைக் கண்ட முற்கல முனிவர் மனம் மகிழ்ந்து தனது கமண்டலத்தில் கொண்டு வந்த நீரை விப்பிரதனின் முகத்தில் தெளித்தார். உடனே விப்பிரதனின் முகம் விநாயகரின் உருவைப் பெற்றது. முற்கல முனிவர் அவனுக்கு ஏகாஷர மந்திரத்தை உபதேசித்தார். விநாயகரின் உருவத்தைப் பெற்ற விப்பிரதன் ப்ருசுண்டி என்ற நாமத்தைப் பெற்று ஆயிரம் வருடங்களாக வாழ்ந்து வருகிறான்’’ என்றான் தேவேந்திரன்.

அதன் பின் ப்ருசுண்டி சங்கட சதுர்த்தி விரதத்தை மேற்கொண்டு, தனது முன்னோர்களையும் மேற்கொள்ளச் செய்து விநாயகரின் திருவடியை அடைந்தார்.

காவிரி நதிதீரத்தில் உள்ள நாட்டை கிருந்தவீரியன் என்ற அரசன் ஆட்சி புரிந்து வந்தான். அவனது மனைவியின் பெயர் சுகந்தை. அவர்களுக்குப் புத்திர பாக்கியமில்லாததால் காட்டிற்குச் சென்று கடுந்தவம் செய்தனர். நாரத முனிவர் ஒரு நாள் கிருத்த வீரியனது தந்தையிடம் வந்து சொன்னார்; ‘‘மன்னா உனது மகன் அன்ன ஆகாரமின்றிக் கடுந்தவஞ் செய்கிறான். அதனால் பயனில்லை. நீ பிரம்ம தேவனைச் சந்தித்து அதற்கான வழிவகைகளைச் செய்’’ என்றார்.

நாரதரின் சொற்படி கிருத்தவீரியனது தந்தை பிரம்ம தேவரைச் சந்தித்தார். தனது நிலையை கவலையுடன் சொன்னார். அதற்குப் பிரம்மதேவன்; ‘‘மன்னா உனது மகன் கிருத்த வீரியன் முற்பிறப்பில் சாம்பன் என்ற பெயரோடு அந்தணனாக இருந்தான். அவனுக்குக் கணேசன் என்றொரு மகன் இருந்தான். வறுமை காரணமாக அவன் வழிப்பறி செய்து வாழ்ந்து வந்தான். ஒரு நாள் அவர்களுக்கு உண்ண உணவேதும் கிடைக்கவில்லை. அதனால் வழிப்பறி செய்யச் சென்றான். அப்பொழுது அவ்வழியால் வந்த பன்னிரண்டு அந்தணர்களைச் சாம்பன் அடித்துக் கொன்று விட்டு அவர்கள் கொண்டு வந்த பொருட்களைக் கொள்ளையிட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்தான். வீட்டுக்கு வந்த சாம்பன் ‘கணேசா, கணேசா, கணேசா’ என அழைத்துக் கொண்டு வீட்டுள் சென்றான். வீட்டுள் பசியால் வாடிய கணேசன் இறந்து கிடந்தான். அதைக் கண்ட சாம்பன் புத்திர சோகத்தால் ‘கணேசா கணேசா’ எனக் கதறியபடி இருந்து விடியற்காலையில் மரணமானான். அன்று சங்கடசதுர்த்தி, அன்று முழுவதும் அன்ன ஆகாரமின்றிக் கணேசா, கணேசா என விநாயகரின் நாமத்தைச் சொன்னதால் அவன் இப்பிறப்பில் கிருத்த வீரியன் என்ற பெயரோடு ஒரு நாட்டின் அரசனாகப் பிறந்திருக்கிறான். அவன் முற்பிறப்பில் பிராமணரைக் கொன்றமையால் பிரமஹத்தி தோஷம் அவனைச் சூழ்ந்துள்ளது.

அதனால் அவனுக்குப் பிள்ளைப் பாக்கியம் கிடையாது. அவனுக்குப் பிள்ளைப் பாக்கியம் கிடைக்க வேண்டுமானால் சங்கட சதுர்த்தி விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்'' என்றார்.

''அதை எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்று சொல்லுங்கள்'' என்று கிருத்தவீரியனின் தந்தை கேட்டார்.

''மாசி மாதம் அமரபட்சத்தில் செவ்வாய்கிழமை கூடும் சதுர்த்தியில் இவ்விரதத்தை ஆரம்பித்தல் வேண்டும். அதிகாலையில் எழுந்து நீராடி, கணேசருடைய பாதக் கமலங்களை மனத்தில் தியானித்து ஏகாட்சர மந்திரத்தை உச்சரித்தல் வேண்டும். மாலையில் சந்திரோதயம் ஆனதும் விநாயகரை எழுந்தருளச் செய்து சந்திரனுக்குப் பூசை செய்தல் வேண்டும். இவ்வாறு ஒரு வருடம் செய்தால் புத்திரபாக்கியம் உண்டாகும்'' என்றார் பிரம்மதேவர்.

இவ்வாறு கிருத்தவீரியன் சங்கடசதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்துப் புத்திர பாக்கியம் பெற்றான்.

பரத்துவாச முனிவர் ஒரு நாள் நர்மதை நதியில் நீராட வந்தார். கங்கையில் அழகிய பெண்ணொருத்தி தனது தோழியர்களுடன் நீராட வந்தாள். அவளின் அழகில் மயங்கிய பரத்துவாச முனிவரின் உள்ளம் பேதலித்தது. விரததாபம் ஏற்பட்டு அவரது சுக்கிலம் பூமியில் விழுந்து அழகிய ஆண்மகனாக மாறியது. அக்குழந்தையை பூமாதேவி எடுத்து வளர்த்து வந்தாள். குழந்தை வளர்ந்ததும் பூமாதேவியிடம் தனது தந்தை யார் எனக் கேட்டது. பூமாதேவி அக்குழந்தையைப் பரத்துவாசமுனிவரிடம் அழைத்து வந்து அவர் தான் உனது தந்தை எனக் கூறி அவரிடம் அவனை ஒப்படைத்து விட்டுச் சென்றாள்.

பரத்துவாச முனிவர் தனது மகனான அங்காரகனுக்கு உபநயனம் செய்து விநாயகரின் மந்திரத்தை உபதேசித்தார். அதன் பின் அங்காரகன் காட்டுக்குச் சென்று ஆயிரம் வருடங்கள் விநாயகரை நோக்கித் தவஞ் செய்தான்.

அவனின் தவப்பயனாக விநாயகர் அவனின் முன் தோன்றி; ''அங்காரகா இன்று சங்கட சதுர்த்தி தினம். அத்துடன் மாசி மாதத்தில் வரும் அமரபட்சத்தில் செவ்வாய்க்கிழமை சதுர்த்தி வந்தமையால் இத்தினத்தில் விரதம் அனுஷ்டிப் போர் சகல சௌபாக்கியங்களும் பெறுவார்கள். இன்று நீ விரதம் அனுஷ்டித்ததால் 'மங்களன்' என்ற பெயரைப் பெறுவாய். அத்துடன் நவக்கிரகங்களில் ஒருவனாக இடம்பெறும் பாக்கியத்தையும் உனக்குத் தருகிறேன்'' என்று அருளி மறைந்தார்.

நாரதர் கைலாயத்திற்குச் சென்று மாங்கனியைச் சிவபெருமானுக்குக் கொடுத்த வேளையில் பிரம்மதேவர் கைலாயத்தில் சிவபெருமானோடு கூட இருந்தார். விநாயகரும் சுப்பிரமணியரும் இருக்கும் போது மாங்கனியை யாருக்குக் கொடுக்கலாம் என்று சிவபெருமான் பிரம்மதேவரைக் கேட்டார். அதற்குப் பிரமதேவர் இளையவரான சுப்பிரமணியருக்குக் கொடுக்குமாறு கூறினார்.

அதைக் கேட்டதும் விநாயகருக்கு அளவுக்கதிகமான கோபம் உண்டானது. விநாயகரின் கோபத்தால் விபரீத முண்டாகும் என்பதை உணர்ந்த பிரம்மதேவர் ஆசனத்தை விட்டெழுந்து விநாயகரின் பாதங்களைப் பற்றி; ''அடியேன் சொன்னது பிழையானால் மன்னித்தருளல் வேண்டும்'' என்று இரந்தார்.

பிரம்மதேவரின் நிலையைப் பார்த்த சந்திரனுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது. பலமாகச் சிரித்தான். அதைக் கண்ட விநாயகர்; ''சந்திரா இந்தச் சபையில் நீ யாரையும் மதிக்காமல் சிரித்தமையால் உனது ஒளி மங்கட்டும். அத்துடன் உன்னைப் பார்ப்போர் துன்பம் அடைவார்கள்'' என்று சபித்தார். அதனால் பூவுலகும் தேவருலகும் இருளடைந்தது. தேவர்கள் விநாயகரிடஞ் சென்று சந்திரனை மன்னிக்குமாறு வேண்டினர்.

விநாயகர் மனமிரங்கிச்; ''சந்திரா ஆவணிமாதத்தில் பூர்வ பட்சத்தில் வரும் சதுர்த்தி தினத்தில் மட்டும் யாரும் உன்னைப் பார்க்காதிருக்கட்டும் அதை மீறி யாராவது பார்த்தால் அவர்கள் பெருங்கஷ்டத்துக்குள்ளாவார்கள்'' என்று சொன்னார். அதனால் துன்பப்பட்ட சந்திரன் ஏகாஷர மந்திரத்தை இருபத்திரண்டு வருடகாலம் உச்சரித்து விநாயகரை வணங்கினான். அதனால் மனம் மகிழ்ந்த விநாயகர்; ''சங்கட சதுர்த்தியன்று நீ உதயமாகும் நேரத்தில் என்னைப் பூஜிப்பவர்கள் உன்னையும் பூஜித்து அருள் பெறுவார்கள். அத்துடன் உன்னை அனைவரும் வணங்கும் படியாக உனது கலைகளுள் ஒரு கலை எனது திருமுடியில் எப்போதும் இருக்கும்'' என்றார்.

மனம் மகிழ்ந்த சந்திரன் விநாயகருக்கு ஒரு ஆலயம் எடுப்பித்து அதில் பாலச்சந்திர விநாயகரை பிரதிஷ்டை செய்தான்.

***காமந்தன்***

விந்திய மலைக்கு அருகில் கொல்வம் என்றொரு நகரம் இருந்தது. அங்கு சித்ரூபன் என்றொரு வணிகன் வாழ்ந்து வந்தான். அவனது மனைவியின் பெயர் சுலோச்சனை. அவ்வணிகனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்குச் சித்ரூபன் காமந்தன் எனப்பெயரிட்டு வளர்த்து வந்தான். காமந்தன் திருமண வயதை அடைந்ததும் சித்ரூபன் அவனுக்குக் குடும்பினி என்ற பெண்ணைத் திருமணம் செய்து வைத்தான். அவர்களுக்கு ஏழு ஆண்பிள்ளைகளும் ஐந்து பெண் பிள்ளைகளும் பிறந்தனர்.

காமந்தனின் பெற்றோர் இறந்ததும் காமந்தன் கட்டுப்பாடுகள் இன்றி வாழத் தொடங்கினான். தீய நண்பர்களுடன் சேர்ந்தான். விலை மாதர்களின் வீடுகளுக்குச் செல்லத் தொடங்கினான். அதனால் அவனது பெருஞ் செல்வம் குறைந்தது. வறியவனான காமந்தன் கொள்ளைகளில் ஈடுபட்டான். வழிப்பறிகள் செய்தான். இதை அறிந்த அரசன் அவனை நாடு கடத்தினான். அதனால் காமந்தன் காட்டுக்குச் சென்று திருடர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ளைகளிலீடுபட்டான். ஒரு நாள் காட்டு வழியே வந்த கணவர்த்தனன் என்ற பிராமணனைக் கொன்று அவன் கொண்டு வந்த பொருட்களைக் கொள்ளையடித்தான். அதனால் காமந்தனைப் பிரமகத்தி தோஷம் பற்றிக் கொண்டது. அதன் பின் நோய் அவனைப் பற்றிப் பிடித்தது. எழுந்து நடமாட முடியாது படுத்த படுக்கையில் பல நாட்கள் கிடந்தான். அப்பொழுது அவனுக்குத் தனது மனைவியின் யோசனை வந்தது. அவன் தனது மனைவியைத் தன்னுடன் வந்து இருக்கும்படி கூறிக் கையாள் ஒருவனை அவளிடம் அனுப்பினான். அவள் அதற்கு மறுத்து விட்டாள். அதனால் மனம் வருந்திய காமந்தன் நோயின் உபாதையைத் தாங்க முடியாது துடிதுடித்தான்.

ஒரு நாள் ஏழைப் பிராமணன் ஒருவன் அவ்வழியால் செல்லும் போது காமந்தனின் இருப்பிடத்திற்கு வந்தான். அவ் ஏழைப் பிராமணனை அன்புடன் உபசரித்த காமந்தன் ஏராளமான பொருட்களை அவனுக்குக் கொடுத்தான். காமந்தனிடம் ஏராளமான பொருட்கள் குவிந்து கிடந்தன அவற்றை காமந்தன் அந்த ஏழைப்பிராமணனுக்குக் காட்டி; ‘‘இவற்றை வருவோர்க் கெல்லாம் தானமாகக் கொடுப்பேன்’’ என்று கூறினான் காமந்தன்.

அதைக் கேட்ட ஏழைப் பிராமணன் தனது நாட்டிற்குச் சென்று பலரை அழைத்து வந்தான். வந்தவர்களில் ஒருவர் காமந்தனை அடையாளம் கண்டு கொண்டான்; ‘‘சண்டாளா, உன்னிடம் தான் இரக்க வருகிறோம் என்று முன்பே தெரிந்திருந்தால் நான் இங்கு வந்திருக்கவே மாட்டேன். தான் உழைத்துச் சம்பாதித்த பொருட்களைத் தான் தானதர்மம் செய்தல் வேண்டும். கொலை செய்து, கொள்ளையடித்த பொருட்களை நான் தானமாகப் பெற்றால் எம்மை பழியும் பாவம் வந்தடையும்’’ என்று கூறி விட்டுச் சென்றான். அவனுடன் கூட வந்தவர்களும் பொருட்கள் எதுவும் பெறாமல் திரும்பிச் சென்றான்.

காமந்தன் வேதனையால் துடிதுடித்தான்; ‘‘பெரியவர்களே, நான் செய்த பாவங்கள் தீரவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்? நான் அவற்றைச் செய்கிறேன்’’ என்று இரந்தான்.

பெரியவர் ஒருவர் சொன்னார்; ‘‘இக்காட்டில் விநாயகர் ஆலயமொன்று பலகாலமாகப் பாழடைந்துள்ளது. அதைப் புனருத்தாரணஞ் செய்து வழிபாட்டிற்கு வழி செய். அதனால் உனது பாவங்கள் குறையும்’’.

காமந்தன் மனம் மகிழ்ந்து விநாயகரின் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்வித்தான். பெருந்தொகையான மக்கள் கும்பாபிஷேகத் திருவிழாவில் கலந்து கொண்டனர். அதன் பின் தினமும் பூசை வழிபாடுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. அதன் பின் காமந்தன் விநாயகரைத் தொழுது விரதங்கள் அனுஷ்டித்துக் கொண்டு கோயிலிலேயே தங்கியிருந்தான்.

காமந்தன் வயோதிபமடைந்து மரணமானதும் யமதூதர்கள் அவனைக் கொண்டு சென்று யமதர்மராஜனின் முன்நிலையில் நிறுத்தினர். சித்திரகுப்தனார் அவன் செய்த பாவ புண்ணியங்களை ஒவ்வொன்றாகச் சொன்னார். அவற்றைக் கேட்ட யமதர்மராஜன்; ‘‘காமந்தா நீ பல பாவகாரியங்களைச் செய்துள்ளாய். இருப்பினும் பாழடைந்திருந்த விநாயகராலயத்தைப் புணருத்தாரணம் செய்து பூசை வழிபாடு செய்தமையால் உனது தீவினைகள் மறைந்து விட்டன. எனினும் நீ செய்த பாவங்களுக்கான பயனை அனுபவித்தல் வேண்டும் அதை நீ உன் விருப்பத்தின் படி அனுபவிக்கலாம்’’ என்றான்.

அதைக் கேட்ட காமந்தன் புண்ணியத்திற்கான பயனையே முதலில் அனுபவிக்க விரும்புகிறேன்’’ என்றான்.

‘‘காமந்தா, உன் விருப்பப்படி அடுத்த பிறவியில் முதலில் இன்பத்தை அனுபவிக்கலாம். அதன் பின் தீவினைகளுக்கான பயனை அனுபவிப்பாய்’’ என்றான்.

காமந்தன் சௌராஷ்டிர தேசத்தின் அரசனுக்குச் சோமகாந்தன் என்ற பெயரோடு மகனாக வந்து பிறந்தான்.

அவன் வளர்ந்து திருமண வயதை அடைந்ததும் சுதன்மை என்ற பெண்ணை மணந்தான். தந்தை இறந்ததும் நாட்டின் ஆட்சியுரிமையைப் பெற்று நீதி நெறி தவறாது ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு ஏமகண்டன் எனப் பெயரிட்டு அன்போடு வளர்த்து வந்தான்.

பூர்வஜென்மத்தில் செய்த நல்வினைக்கான காலம் முடிவடைந்ததும் சோமகாந்தனுக்குக் குஷ்டநோய் பிடித்தது. அதுகுணமாகாது நாளுக்கு நாள் அதிகரித்தது. அதனால் வேதனைப்பட்ட சோமகாந்தன் தனது மகனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டுக் காட்டுக்குச் சென்று தவம்புரிந்தான். அவனுடன் அவனது மனைவியும் இரண்டு அமைச்சர்களும் கூடச் சென்றனர்.

காட்டுக்குச் சென்ற சோமகாந்தன் அங்குள்ள ஒரு சோலையில் தங்கியிருந்தான். அமைச்சர்கள் உணவு தேடச் சென்றனர். அச் சோலையின் அருகே ஒரு குளம் இருந்தது. கணவன் கண்ணயர்ந்தமையால் சுதன்மை குளக்கரையில் நின்றாள். அப்பொழுது ஒரு சிறுவன் தடாகத்தில் நீர் எடுப்பதற்காக வந்தான். அவனைக் கண்ட சுதன்மை அவனை அழைத்து; ‘‘நீ யார்?’’ என்று கேட்டாள்.

‘‘அம்மணி, நான் பிருகுமுனிவரின் மகன் சிவனன். இங்கு ஆச்சிரமம் அமைத்து இருக்கிறோம்’’ என்றான்.

சுதன்மை தனது வரலாற்றை சிவனனுக்குக் கூறினான். சிறுவன் அவளிடம் விடைபெற்றுச் சென்றான். அதை அவன் ஆச்சிரமத்திற்குச் சென்று தனது தந்தையான பிருகுமுனிவருக்குச் சொன்னான்.

‘‘மகனே எமது ஆச்சிரமத்தின் அருகில் வந்திருப்போரை உபசரிக்க வேண்டியது எமது கடமை. எனவே நீ சென்று அவர்களை அழைத்து வா’’ என்றார் பிருகுமுனிவர்.

சிவனன் குளக்கரைக்குச் சென்று அரசனையும் அரசியையும் அமைச்சர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு அச்சிரமத்திற்கு வந்தான். அரசனும் அரசியும் அமைச்சர்களும் பிருகுமுனிவரை வணங்கி ஆசிபெற்றனர்.

‘‘மன்னா, முற்பிறப்பில் நீ செய்த தீவினையின் காரணமாக கொடிய நோய் உன்னைப் பற்றிப் பிடித்திருக்கிறது’’ என்று கூறி விநாயகரைத் தியானித்து தனது கமண்டலத்தில் உள்ள நீரை எடுத்து அவன் மீது தெளித்தார். நீர்பட்டதும் அரசனைப் பற்றிப் பிடித்திருந்த பிரமகத்தி வெளிப்பட்டது. அதைக் கண்ட பிருகு முனிவர்; ‘‘ பூதமே நீ யார்?’’ என்று கேட்டார்.

‘‘மாமுனிவரே, முற்பிறவியில் இவன் ஒரு பிராமணனைக் கொன்றதால் இவனைப் பிரமகத்தியாகப் பிடித்துக் கொண்டிருந்தேன். எனக்குக் கடுமையாகப் பசிக்கிறது. இவர்களை விழுங்க அனுமதி கொடுங்கள்’’ என்றது.

‘‘உனது கோரப்பசிக்கு ஆகாரம் நான் தருகிறேன். அதுவரை அதோ அந்த மரத்தில் இருக்கும் பொந்தில் தங்கியிரு’’ என்றார் பிருகுமுனிவர்.

பூதம் மகிழ்வுடன் மரப் பொந்துள் நுழைந்தது. பிருகுமுனிவரின் சக்தியால் அம்மரம் தீப்பற்றி எரிந்தது. அத்துடன் பூதமும் எரிந்து சாம்பரானது. பிரமகத்தியில் தங்கியிருந்த ஆன்மா எழுந்து வந்து முனிவரை வணங்கியது; ‘‘முனிவரே தங்களது திவ்விய தரிசனத்தால் அரசனது தோஷமும் நீங்கியது, எனது பூத சரீரமும் மறைந்தது’’ என்றது அந்தஆன்மா.

‘‘சுவாமி என்னைப் பற்றிப் பிடித்திருந்த பிரமகத்தி நீங்கி விட்டது. ஆனால் நோயும் பாவங்களும் நீங்கவில்லை. அவை நீங்க அருளல் வேண்டும்’’ என்றான் சோமகாந்தன்.

‘‘சோமகாந்தா, உனது விருப்பம் நிறைவேற வேண்டுமானால் முழுமுதற் கடவுளாகிய விநாயகரின் திவ்விய சரித்திரத்தைக் காது குளிரக் கேட்டல் வேண்டும். அச்சரித்திரத்தை சைலாசபதி நான்முகனுக்கு உபதேசித்தார்; நான்முகன் அதை வேதவியாசருக்கு உபதேசித்தார்; வேதவியாசர் அதை எனக்கு உபதேசித்தார். இப்பொழுது அதை நான் உனக்கு உபதேசிக்கிறேன். அவ் உபதேசத்தைப் பெற்றதும் உனது நோய் குணமாகும்’’ என்றார் பிருகுமுனிவர்.

அதைக் கேட்டு மனம் மகிழ்ந்த அரசன் முனிவரைப் பணிந்து விநாயகரை நினைந்தவாறு முனிவரின் அருகில் அமர்ந்தான். பிருகுமுனிவர் விநாயகரின் திவ்விய சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கினார்.

***வேதவியாசர்***

பூவுலகில் ஒரு சமயம் வேதம் ஓதுவது குறைவடைந்தது. பிராமணரும் மக்களும் ஒழுக்கம் தவறி வாழத் தொடங்கினர். இதைக் கண்ட விஷ்ணுவும் பிரமனும் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் பூவுலகை நல்வழிப்படுத்தும் பொறுப்பை விஷ்ணுவிடம் ஒப்படைத்தார்.

கங்கைக் கரையில் பரராசர் என்றொரு மாமுனிவர் வாழ்ந்து வந்தார். ஒரு நாள் அவர் கங்கையைக் கடந்து மறு கரைக்குச் செல்ல விரும்பிக் கங்கைக் கரைக்கு வந்தார். வழமையாகப் படகோட்டுபவன் அன்று அங்கிருக்கவில்லை. அவனது மகளான மச்சகந்தி என்பவளே படகோட்டினாள். அவளது அழகில் மயங்கிய பரராசமுனிவர் தனது விருப்பத்தை அவளுக்குத் தெரிவிக்க அவளும் அவரை விரும்பினாள். தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த மகா விஷ்ணு அவளது கர்ப்பத்தில் மாய உருவில் தண்டக மண்டலங்களுடன் குழந்தையாக அவதரித்தார். பரமசிவனின் கிருபையால் அக்குழந்தை கற்க வேண்டியவற்றையுக் கற்றுத் தேர்ந்து, வேதங்களை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்று நான்காகப் பிரித்து மற்றவர்களுக்கு உபதேசித்தது அதன் காரணமாக அக்குழந்தைக்கு வேதவியாசர் என்ற பெயர் உண்டானது.

பின் வேதவியாசர், சனத்குமாரரை அடைந்து பதினெண் புராணங்களைப் பற்றிய உபதேசங்களைப் பெற்றார். அதன் பின் அப்புராணங்களை எல்லோரும் புரிந்து கொள்ளும்படி இலகுவான சுலோகங்களாக்க முயன்றார். ஆனால் அவரால் முடியவில்லை. சகலநூல்களையும் கற்ற அவரால் புராணங்களைச் சுலோகமாக ஆக்க முடியாமையை எண்ணி வருந்திய வேதவியாசர் பிரமதேவனம் சென்றார்.

‘‘வியாசா, வேதங்களையும் புராணங்களையும் சரிவர உணராமையால் தான் மக்கள் தவ வாழ்வை விட்டு ஒழுக்கம் தவறி நடக்கிறார்கள் என்பதற்காக உன்னை அவர்களுக்குப் புரியும் படியாக இலகுவான சுலோகங்களாக்க பரமசிவனே அனுப்பினார். அப்படியிருக்கத் தடுமாற்றம் ஏன் வந்தது என்று எண்ணுகிறாய். சகலதையும் உணர்ந்த நீ ஆதிபரம் பொருளான பிரணவரூபனை மறந்து விட்டாய். எக்கருமங்களைத் தொடங்கு முன்பும் விநாயகனைத் தொழ வேண்டும் என்பதற்காகத் தானே மகேஸ்வரன் வேத மோது முன் பிரணவ மந்திரத்தை உச்சரிக்கிறார். மும்மூர்த்திகளான நாமும் தேவர்களும் விநாயகனை வணங்காமல் எக்காரியமும் செய்ததில்லை’’. என்றார்.

‘‘சுவாமி எனது தவறு இப்பொழுது தான் புரிகிறது. என்னைப் பீடித்திருந்த மாயையை நீங்கள் விலக்கி விட்டீர்கள். தயவு செய்து விநாயகரின் லீலாவிநோதங்களை எனக்கு எடுத்துச் சொல்லுங்கள்’’ என்றார் வேதவியாசர்.

‘‘ஒரு சமயம் வெப்பம் அதிகரித்து நீர் நிலைகள் யாவும் வற்றி விட்டன. மக்களும் மிருகங்களும் பறவைகளும் நீரின்றிக் கஷ்டப்பட்டனர். கோயில்கள் பூசைகள் செய்வாரின்றிப் பாழடைந்தன. மக்கள் வறுமையால் இறக்கத் தொடங்கினர். ஆதிசேஷன் வெப்பத்தைத் தாங்க முடியாது விசத்தைக் கக்கினான். அதன் பின்னர் பெரு மழை பெய்தது. அதனால் எங்கும் வெள்ளப் பெருக்கேற்பட்டது. இந்திரன் அழிந்து போனான். மும்மூர்திகளான பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோர் தமக்குள் ஒன்றாக ஐக்கியமாகினர். உலகம் சூனியமானது.

இச்சமயத்தில் ஆதிபரம் பொருளான விநாயகப் பெருமான் வக்கிர துண்டராகத் தோன்றினார். பிரளயத்தால் அழிந்து போன உலகை மீண்டும் உண்டாக்குவதற்காக மும்மூர்த்திகளையும் தோற்றுவித்தார். மும்மூர்த்திகளும் தம்மைப் படைத்த பரம் பொருள் யாரென அறியத் தவஞ் செய்தனர். அப்பொழுது விநாயகர் அவர்களுக்குக் காட்சி கொடுத்தார். கோடி சூரியப் பிரகாசம் கொண்ட முடியைத் தலையில் அணிந்து, நான்கு கைகளிலும் ஆயுதங்களுடனும் யானை முகத்துடனும் தோன்றிய விநாயகரைக் கண்டு மும்மூர்த்திகளும் தொழுதனர்.

விநாயகர் அவர்களுக்கு அருள் பாலித்து; ‘‘மும்மூர்த்திகளே நீங்கள் மூவரும் பிரளயத்தால் அழிந்து போன உலகத்தை உருவாக்குங்கள். பிரமதேவனுக்கு படைத்தல் சக்தியையும், விஷ்ணுவுக்கு யாகத்தினால் சகலரையும் ரட்சிக்கும் சக்தியையும், உருத்திரனுக்கு அனைவரையும் சம்ஹரிக்கும் சக்தியையும் தந்தோம்’’ என்றார்.

‘‘இச் சக்திகளைக் கொண்டு நாம் எவ்வாறு இயங்குவது’’ என்று பிரமதேவன் கேட்டான். அப்பொழுது விநாயகர் பிரம்மதேவனைத் தனது தும்பிக்கையால் தூக்கி விழுங்கினார். விநாயகரின் வயிற்றுள் சென்ற பிரம்ம தேவன் அங்கு எல்லா ஜீவராசிகளும் இருக்கக் கண்டு ஆச்சரிய முற்றான். அதைப் பார்த்த விஷ்ணுவும் உருத்திரனும் தாங்களும் அவற்றைக் காணும் பாக்கியம் பெற வேண்டும் என்று கூற விநாயகர் அவர்களிருவரையும் தும்பிக்கையினால் தூக்கி விழுங்கினார். ஈரேழுலோகங்களும், மும்மூர்த்திகளும், தேவகணங்களோடு வீற்றிருக்கும் பரமேஸ்வரனும், ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டிருக்கும் நாராயணனும் நான்கு வேதங்களும், இந்திரன் முதலான தேவர்களும், தேவமாதர்களும் முனிவர்களும் சூரிய சந்திரர்களும் நவக்கிரகங்களும் அட்ட திக்குப் பாலகர்களும் இன்னும் பலரும் அவரது வயிற்றுள் இருப்பதை மும்மூர்த்திகளும் கண்டு ஆச்சரியப்பட்டனர்.

சிருஷ்டியின் தன்மையை உணர்த்திய விநாயகன் மும்மூர்த்திகளையும் பார்த்து; ''முக்குணமுடைய மும்மூர்த்திகளே சிருஷ்டியின் இரகசியத்தைப் புரிந்துள்ளீர்கள். இனி உங்களுக்கிட்ட தொழில்களைச் செய்யுங்கள்'' என்று அருளி மறைந்தார்.

### *பிரம்ம சிருஷ்டி*

விநாயகரின் சொற்படி பிரம்மதேவர் படைப்புத் தொழிலில் ஈடுபட்டார். உயிர்களை ஒவ்வொன்றாகப் படைத்தார். அவர் படைத்த உயிர்கள் எவையும் சரியாக அமையவில்லை. ஒன்றுக்கொன்று முரண்பட்ட தோடு பிரம்ம தேவரையும் எதிர்த்து நின்றன. அதனால் கவலைப்பட்ட பிரம்மதேவர் விநாயகரை மனதில் நினைத்துப் பிரார்த்தித்தார். அவரின் மனதில் காட்சி ஒன்று தோன்றியது. பெரியதொரு கடலில் இலை ஒன்று தோன்றியது. அவ் இலையில் அழகான குழந்தை ஒன்று நித்திரையில் ஆழ்ந்திருந்தது. பிரம்மதேவர் ஆச்சரியத்துடன் அக்குழந்தையை எழுப்பினார். அக்குழந்தை வேழமுகத்துடன் அவருக்குக் காட்சி கொடுத்தது. பிரம்ம தேவர் அக்குழந்தையை வணங்கி தனக்கேற்பட்ட அவலத்தை எடுத்துச் சொன்னார்.

''பிரம்ம தேவா எக்காரியங்களையும் செய்ய முன் முழுமுதற் கடவுளாகிய என்னை வணங்க வேண்டும். நீ என்னை மறந்து செருக்குடன் படைத்தற் தொழிலில் ஈடுபட்டதால் தான் உன்னால் படைக்கப்பட்ட உயிர்கள் ஒழுங்கு முறைப்படி அமையவில்லை'' என்று அருளி மறைந்தார்.

பிரமதேவன் தனது தவறை உணர்ந்து தாமரைப்பூவில் ஒற்றைக் காலில் நின்று பன்னிரண்டு வருடகாலம் ஏகாஷர மந்திரத்தை ஜபித்துக் கடுமையாகத் தவஞ் செய்தார். முடிவில் விநாயகர் அவர் முன் தோன்றி தன்னிடமிருந்த ஞானம், கிரிகை என்னும் இருசக்திகளையும் அவருக்களித்து அவற்றைப் பக்தியோடு தியானித்து அவற்றின் உதவியோடு படைப்புத் தொழிலைத் தொடங்குமாறு அருளினார்.

முதலில் பிரமதேவர் சித்தி புத்தியரோடு கற்பகக் கடவுளான விநாயகரை நினைத்து ஏழு மைந்தர்களைத் தோற்றுவித்தார். அவர்கள் பகவானின் பாதார விந்தங்களை அடையும் நோக்குடன் தவஞ் செய்யச் சென்று விட்டனர். பிரமதேவன் மீண்டும் எழுவரைப் படைத்தார். அவர்களும் வனத்திற்குச் சென்று விட்டனர். பின்னர் சனகாதியர் நால்வரையும் நாரதரையும் படைத்தார். பிரம்மாவின் முகத்திலிருந்து அந்தணர்களும், புயங்களில் இருந்து சத்திரியர்களும் தொடையில் இருந்து வைசிகர்களும் கால்களிலிருந்து இதரவருணத்தாரும் தோன்றினர்.

பிரம்மாவின் சிந்தையில் இருந்து சந்திரனும், நாசியில் இருந்து வாயுவும், முகத்திலிருந்து இந்திரனும் திரு முடியிலிருந்து விண்ணுலகங்களும் உதரத்தில் இருந்து ஆகாயமும் பாதங்களில் இருந்து பூலோகமும் தோன்றின. இவ்விதமாக பிரம்மதேவன் விநாயகரின் அனுக்கிரகத்துடன் ஒன்றன் பின் ஒன்றாக அண்டசராசரங்களையும் உயிர்களையும் தோற்றுவித்தார்.

### *திருமணம்*

பிரமதேவனின் புத்திரிகளான சித்தி, புத்தி இருவரும் வளர்ந்து திருமண வயதை அடைந்தனர். தம் புத்திரிகள் இருவரையும் விநாயகப் பெருமானுக்குத் திருமணம் செய்து வைக்கப் பிரமதேவன் விரும்பினான். அவரின் விருப்பத்தை அறிந்த நாரதர் கைலாயத்திற்குச் சென்றார்.

சபா மண்டபத்தில் இருந்த விநாயகரை வணங்கிய நாரதர், பிரம்ம தேவனின் புத்திரிகளான சித்தியையும் புத்தியையும் தாங்கள் மணந்து கொள்ள வேண்டும் என வேண்டினார்.

விநாயகர் மனம் மகிழ்ந்து தனது விருப்பத்தைத் தெரிவித்தார். அதை நாரதர் பிரமதேவனுக்குத் தெரிவித்தார். பிரமதேவர் முறைப்படி கைலாயம் சென்று பரமேஸ்வரனிடத்தில் தனது விருப்பத்தைத் தெரிவித்தார். பரமேஸ்வரன் அவரது விருப்பத்தை ஏற்றுக் கொண்டு திருமண நாளைக் குறித்தார்.

ஆதிபரம் பொருளான முழுமுதற் கடவுளான விநாயகர் மணக் கோலங் கொள்கிறோர் எனக் கேள்விப்பட்ட சகல லோகத்தினரும் பெருமகிழ்வுடன் திருமணத்திற்கென நிர்மாணிக்கப்பட்ட நகரத்தில் கூடியிருந்தனர்.

திருமண நாளன்று புனித நீராடி வந்த விநாயகரை, நந்தி தேவர் அலங்கரித்தார். பார்வதியும் பரமேஸ்வரரும் தேவகணங்களும் பூதகணங்களும் விநாயகருடன் கூட வந்தனர். விநாயகர் மணப்பந்தலில் வந்தமர்ந்தார். ரிஷிகள் வேதகோஷம் செய்ய சரஸ்வதிதேவி கங்காஜலத்தால் நீர்வார்க்க பிரமதேவன் தனது இரு புத்திரிகளையும் விநாயகருக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார். இருபக்கத்திலும் தேவியாருடன் விநாயகர் அங்கிருந்த அனைவருக்கும் காட்சி கொடுத்தார். அனைவரும் விநாயகரின் அருட்கடாச்சம் பெற்றனர்.

### *மது கைடவர்*

திருப்பாற்கடலில் ஒரு நாள் நாராயணன் ஆதிசேஷன் மீது சயனித்திருந்த போது, அவரது செவிகளில் இருந்து மது கைடவர் என்னும் இரண்டு அசுரர்கள் தோன்றினர். பயங்கரமான கோர உருவத்தைக் கொண்டிருந்த அவர்கள் யாரையும் மதிக்காது செருக்குடன் நடந்து கொண்டனர். தேவர்களையும் மக்களையும் கொன்று குவித்தனர். இரேழு உலகமும் அவர்களைக் கண்டு நடுநடுங்கியது. பிரம்மதேவன் விநாயகரை நினைத்துத் தனது உருவை அவர்களிருவருக்கும் தெரியாதவாறு மறைத்துக் கொண்டார்.

தேவர்கள் நாராயணனிடம் சென்று மது கைடவரை அழித்துத் தம்மைக் காத்தருளுமாறு வேண்டினர். அதற்கு உடன்பட்ட நாராயணன் ஆயுதங்களுடன் புறப்பட்டுச் சென்று பல காலம் மது கைடவர்களுடன் உக்கிரமாகச் சண்டை செய்தார். எனினும் அவர்கள் இருவரையும் வெல்ல முடியவில்லை. அதனால் நாராயணன் கைலாயத்திற்குச் சென்று; ''பரமேஸ்வரா, நான் கடுமையாக யுத்தஞ் செய்த போதும் மது கைடவர்களைக் கொல்ல முடியவில்லை. எனவே தாங்கள் தயவு கூர்ந்து அவர்களை அழிக்கும் சக்தியை எனக்குத் தந்தருளல் வேண்டும்'' என்று கேட்டார்.

''நாராயணா! நீ மது கைடவர்களுடன் யுத்தம் செய்யச் செல்லும் போது விநாயகனை வணங்கி அவரது ஆசியைப் பெறவில்லை. நீ அவர்களை வெல்ல வேண்டுமானால் விநாயகனைத் தொழுது அவனின் அருளைப் பெறல் வேண்டும்'' என்ற பரமேஸ்வரன் அவருக்கு விநாயகரின் சடாச்ஷர மந்திரத்தை உபதேசம் செய்தார்.

நாராயணன் விதிப்படிசடாச்ஷர மந்திரத்தை நூறு வருடங்கள் உச்சரித்து வணங்கினார். முடிவில் விநாயகர் அவர் முன் தோன்றி; ''நாராயணா சடாச்ஷர மந்திரத்தை உனக்கு ஈசன் உபதேசித்து என்னை வணங்கும்படி கூறியதை நாம் அறிவோம். நீ யுத்தத்திற்குச் செல்லும் போது என்னை நினைக்காததால் தான் உனக்குத் தோல்வி ஏற்பட்டது. இனிப் போர் தொடங்கும் போது எனது சடாச்ஷர மந்திரத்தை உச்சரித்துத் தொடங்கு வெற்றி பெறுவாய்'' என்று அருளினார்.

மது கைடவர்கள் போருக்கு வரும் நாராயனணைத் தாக்குவதற்காக மாய உருவில் மறைந்திருந்தனர். நாராயணன் தனது சக்கர ஆயுதத்தை எடுத்து விநாயகரைத் தொழுது சடாச்ஷரமந்திரத்தை ஓதி அதை விட்டார். மது கைடவர் இருவரையும் சக்கராயுதம் கொன்றது. தேவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். பிரம்மதேவன் தனது மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு நாராயணனின் வெற்றியைப் பாராட்டினான்.

### *பிணி நீக்கிய பேரருளாளன்*

விதர்ப்பதேசத்திலே கவுண்டியம் என்ற நாட்டை வீமன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனது மனைவி சாகுகாசினி அவர்கள் திருமணம் செய்து பல ஆண்டுகள் கழிந்தும், அவர்களுக்குப் பிள்ளைப் பாக்கியம் கிடைக்கவில்லை. அதனால் வீமன் தனது நாட்டை அமைச்சர்கள் இருவரிடம் ஒப்படைத்து விட்டு மனைவியோடு தவஞ் செய்யக் காட்டுக்குச் சென்றான். அவர்கள் செல்லும் வழியில் ஒரு சோலை இருந்தது. அங்கு வாழ்ந்த மிருகங்களும் பறவைகளும் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்தன. அதைக் கண்ட அரசன் அதிசயித்து அச்சோலையுட்ச் சென்றான். அங்கே விஸ்வாமித்திரர் என்ற மாமுனிவர் இருந்தார். வீமனும் மனைவியும் அவரது பாதங்களைத் தொட்டு வணங்கித் தமது குறையைச் சொன்னார்கள்.

''மன்னா உன் முன்னோர்கள் தினமும் விநாயகரைப் பூசித்து, அவரின் அருளைப் பெற்று வந்தனர். ஆனால் நீ உன் மனைவியின் மீதுள்ள அளவுக்கதிகமான பிரியத்தால் விநாயகனை மறந்து விட்டாய். அதனால் தான் உனக்கு இந்தக் கேடு வந்தது'' என்று கூறிய விசுவாமித்திரர் அவனது முன்னோரைப் பற்றி விபரமாகக் கூறினார்.

''கர்நாடக தேசத்திலே பாணு என்ற நகரத்தை வல்லபன் என்ற அரசன் நீதி வழுவாது ஆண்டு வந்தான். அவனது மனைவி கமலை. அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தை குருடாகவும் செவிடாகவும் ஊமையாகவும் இருந்ததோடு மட்டுமல்லாமல் உடலெங்கும் பெரிய பெரிய புண்கள் இருந்தன. அக்குழந்தைக்குத் தக்கன் என வல்லபன் பெயரிட்டான். பன்னிரண்டு வருடங்கள் அக் குழந்தைக்குச் சிறந்த வைத்தியர்களைக் கொண்டு வைத்தியம் செய்தும் குழந்தையின் புண்கள் மாறவில்லை. அதனால் மனக்கவலை அடைந்த மன்னன் தனது மனைவியை அழைத்து அக்குழந்தையையும் கொண்டு நாட்டை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டான்.

கமலை எவ்வளவோ எடுத்துச் சொன்ன போதும் அரசன் கேட்கவில்லை. அதனால் அவள் மகனுடன் நாட்டை விட்டு வெளியேறினாள். அவர்கள் காட்டுவழியாகச் செல்லும் போது கள்ளர் கூட்ட மொன்று அவளது ஆபரணங்களைக் கொள்ளையிட்டது. அத்துடன் உணவில்லாததால் இருவரும் மிகவும்

கஷ்டப்பட்டனர். பசியோடு இருவரும் குண்டபுரம் என்னும் நகருக்கு வந்தனர். அவ்வூரில் உள்ள ஆலயத்தில் தனது மகனை இருத்தி விட்டு, கமலை ஊருக்குள்ச் சென்று பிச்சை எடுத்து வந்து தானும் உண்டு மகனுக்கும் கொடுத்து வந்தாள். ஒரு நாள் இருவரும் அவ்வூர்த் தெருவழியாகச் செல்லும் போது முற்கலமுனிவர் வந்தார். அவர்கள் முற்கல முனிவரைக் கடந்து செல்லும் போது அவரது காற்றுத் தக்கனின் மீது பட அவனது நோய் குணமானது. கண்கள் பார்வையைப் பெற்றன; செவிகள் கேட்கும் சக்தியைப் பெற்றன; அவன் வாய் திறந்து பேசினான். அதனால் கமலை பெருமகிழ்வுற்றாள். மன்மதனைப் போன்று அழகிய தோற்றம் பெற்ற தனது மகனை அணைத்து முத்தமிட்டாள். குண்டபுரத்து மக்கள் அவர்களிருவரையும் அழைத்துச் சென்று உதவிகள் பலவும் செய்தனர். ஒரு நாள் வேதியர் ஒருவரை இருவரும் வீதியில் கண்டு தொழுதனர். அதனால் மனம் மகிழ்ந்த அந்த வேதியர் விநாயகரைத் தினமும் ஆராதிக்கும் படி கூறி, சடாச்ஷர மந்திரத்தை அவர்களுக்கு உபதேசித்தார்.

தக்கன் தினமும் விநாயகரை நினைத்து சடாச்ஷர மந்திரத்தை ஓதிவந்தான். அதன் பயனாக விநாயகர் முற்கல முனிவரின் உருவத்தில் அவனெதிரே தோன்றினார்; ‘‘தக்கனே, முற்கல முனிவர் எனது பக்தர். அதனால் தான் நான் முன்பு முற்கலமுனிவரின் வடிவில் வீதியால் வந்தேன். எனது காற்றுப்பட்டமையால் தான் உனது நோய் நீங்கியது. எனவே நீ முற்கல முனிவரைச் சென்று சந்தி’’ என்று கூறினார். கமலையும் தக்கனும் முற்கல முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்று அவரை வணங்கினர்.

முற்கல முனிவர் தக்கனை அனைத்து மகிழ்ந்தார்; ‘‘இவ்வளவு காலமும் சடாச்ஷரமந்திரத்தை ஓதும் எனக்கே விநாயகன் காட்சி தரவில்லை. நீ பாக்கியவான். எனவே எல்லாச் சௌகரியங்களும் உனக்குக் கிடைக்கும்’’ என்றார்.

‘‘தாயும் மகனும் முனிவரை மீண்டும் பணித்து விட்டுத் தமது ஊருக்குச் சென்றனர்’’ என்று கூறிய விசுவாமித்திரர் அடுத்து அவனது பூர்வ ஜென்ம விருத்தாத்தங்களைச் சொல்லத் தொடங்கினார்.

### *வல்லாளப் பெருமான்*

சிந்து தேசத்திலே பல்லி என்றொரு பட்டணம் இருந்தது. அப்பட்டணத்தில் கல்யாணன் என்ற வைசிகன் தனது மனைவியான இந்துமதியோடு இன்பமாக இல்லறம் நடத்தி வந்தான். அவனுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு வல்லாளன் எனப் பெயரிட்டான். வல்லாளன் வளர்ந்ததும் தனது வீட்டுக்கு அருகில் இருந்த தோப்பிற்குத் தனது நண்பர்களுடன் சென்று வந்தான். அத்தோப்பில் உள்ள கருங்கல்லொன்றை விநாயகராக நினைத்து அவனும் தோழர்களும் தினமும் தொழுது வந்தனர். நாளடைவில் அவனும் தோழர்களும் வீட்டுக்குத் திரும்பாது விநாயகருக்குப் பூசை செய்து கொண்டிருந்தனர்.

பிள்ளைகள் வீட்டுக்குத் திரும்பாததால் கோபங் கொண்ட ஊரவர் வல்லானனின் வீட்டுக்குச் சென்று சண்டை பிடித்தனர். வல்லாளன், தமது பிள்ளைகளைக் கெடுக்கிறான். அவனைத் திருத்தாவிட்டால் நாம் எல்லோருமாகச் சென்று அரசனிடம் முறையிடுவோம் என்று சொல்லி விட்டுச் சென்றனர். இதனால் மிக்க கோபம் கொண்ட கல்யாணன் மகனைத் தண்டிப்பதற்காகப் பெரிய கம்புடன் தோப்புக்குச் சென்றார். அவரைக் கண்ட அவனது தோழர்கள் பயத்தினால் அவ்விடத்தை விட்டு ஓடி விட்டனர்.

கோபமிகுதியுடன் வந்த கல்யாணன், வல்ளானனை மிருகத்தனமாக அடித்து விட்டு, அவன் பூசித்த விநாயகரைத் தூக்கி எறிந்து விட்டு அவனைத் தரதரவென இழுத்துச் சென்று ஒரு மரத்தில் கட்டினான்; ‘‘நீ வணங்கும் விநாயகன் உன்னை வந்து அவிழ்த்து விட்டு மருந்து கட்டட்டும்’’ என்று ஆத்திரத்துடன் கூறி விட்டுச் சென்றார். வல்லாளனின் உடல் முழுவதும் தழும்புகள் இருந்தன. அதிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

மரத்தோடு கட்டப்பட்ட வல்லபன் விநாயகரைக் கண்மூடித் தொழுதான்; ‘‘வேழமுகத்தோனே, எனது தந்தை எனக்கு அடித்த அடிகள் ஒன்றும் வலிக்கவில்லை. அவர் உன்னை நிந்தனை செய்தது தான் வலிக்கிறது. அவர் எனது தந்தையானாலும் பரவாயில்லை. அவர் அதற்கான தண்டனையைப் பெற வேண்டும்’’ என்று பிரார்த்தித்தான்.

விநாயகர் ஒரு சிறுவனின் உருவில் அவனுக்கருகில் வந்தார். பின் வேழமுகத்துடன் காட்சி தந்தார்; ‘‘விநாயகரே தங்களின் மீதுள்ள ஆசையின் காரணமாகவே பூசை செய்தேன். தாங்கள் நான் வைத்த கல்லில் என்றும் இருத்தல் வேண்டும்’’ என்று கேட்டான்.

தோப்பை விட்டுக் கோபத்துடன் கல்யாணன் வெளியேறிய போது கல்யாணனுக்கு கண்கள் குருடாகின. செவிகள் செவிடாயின. உடல் எங்கும் காயங்கள் ஏற்பட்டன. அவன் தட்டுத் தடுமாறிய படி வீட்டுக்கு வந்தான். அதற்கு முன் இந்துமதி தனது மகன் கணவனால் தாக்கப்பட்டதைக்

கேள்வியுற்றுத் தோப்புக்குச் சென்றாள். அங்கு அயலவர்கள் பலர் கூடி நின்றனர். கல்யாணனால் தூக்கி வீசப்பட்ட கல் உரிய இடத்தில் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. வல்லாளன் எந்தவிதமான காயங்களுமின்றி அக்கல்லின் முன் கண்மூடிய படி அமர்ந்திருந்தான். அதைக் கண்ட இந்துமதிக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்துமதி பதறிய படி தனது கணவனைக் காப்பாற்றும் படி வல்லாளனை வேண்டினாள்.

‘‘அம்மா தெய்வத்தை நிந்தனை செய்தால் அதன் பயனை அனுபவிக்கத்தான் வேண்டும். இந்தப் பழி அவருக்கு அடுத்த பிறவியிலும் தொடரும்’’ என்றான் வல்லாளன்.

‘‘சரி, நீ உனது தந்தையின் கஷ்டத்தைப் போக்காவிட்டாலும் பரவாயில்லை. என்னுடன் வீட்டுக்கு வா’’ என்றாள்.

வல்லாளன் தாயின் சொல்லை மறுத்து விட்டுத் தொடர்ந்து பூசைகள் செய்து கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு விமானம் அவ்விடத்தில் வந்து இறங்கியது. அதிலிருந்து இறங்கிய தேவகணங்கள் வல்லாளனை விநாயகரிடம் அழைத்துச் சென்றன. இவ்வாறு தக்கனின் முற்பிறப்பைச் சொன்ன விசுவாமித்திரர் மேலும் வீமராஜனுக்குத் தக்கன் அரசைப் பெற்ற வரலாற்றை எடுத்துச் சொன்னார்.

### *தக்கனுக்கு அரசு கொடுத்த வரலாறு*

நோய் குணமாகியதும் தக்கனும் கமலையும் முற்கல முனிவரிடம் ஆசி பெற்றுப் புறப்பட்டனர். வழியில் கவுண்டிபுரம் என்றொரு நகரம் வந்தது. ஊருக்கு அருகில் இருந்த குளக்கரையில் விநாயகர் ஆலயம் ஒன்றிருந்தது. அவ்விடம் விநாயகரைத் தரிசிக்க உகந்த இடமென நினைத்துத் தக்கன் பன்னிரண்டு வருடங்கள் அவ்வாலயத்தில் இருந்து ஏகாட்ஷர மந்திரத்தை ஜபித்தான். ஒரு நாள் விடியற்காலை தக்கன் ஒரு கனவு கண்டான். அந்நாட்டுப் பட்டத்து யானை துதிக்கையில் மாலையுடன் வந்து தனது கழுத்தில் போட்டுத் தன்னைத் தூக்கிச் செல்வது போல அக்கனவு இருந்தது.

விடிந்ததும் கவுண்டிபுரத்து மன்னன் இறந்து போனான். அவனுக்கு வாரிசுகள் இல்லாமையால் அமைச்சர்கள் பட்டத்து யானையின் தும்பிக்கையில் மாலையைக் கொடுத்து அதன் பின்னே வந்தனர். பட்டத்து யானை ஊர்வலமாக வந்து விநாயகர் ஆலயத்தில் இருந்த தக்கனின் கழுத்தில் மாலையைச் சூடித் தும்பிக்கையால் அவனைத் தூக்கித் தன் மேல் இருத்தி அரண்மனைக்குக் கொண்டு சென்றது. நல்ல நாளில் முற்கல முனிவர் தக்கனுக்கு முடிசூட்டி வைத்தார். அச்செய்தி வல்லபராஜனுக்கு எட்டியது. அதனால் மகிழ்ந்த வல்லபராஜன் தனது மந்திரி பிரதானிகளுடன் மறுநாள் கவுண்டின்னிய புரத்திற்குப் புறப்பட்டான்.

தந்தையான வல்லபராஜன் தன்னைக் காணவருகிறார் என்பதை அறிந்த தக்கன் தாயுடன் புறப்பட்டுச் சென்று பாதி வழியில் வல்லபனைச் சந்தித்து சகல மரியாதைகளுடனும் அரண்மனைக்கு அழைத்து வந்தான். விநாயகப் பெருமான் தனது பக்தனுக்கு மேலும் அருள் புரிய எண்ணி அயல் நாட்டு மன்னனான வீரசேனனின் கனவில் தோன்றி; ‘‘ வீரசேனா உனது மகளைத் தக்கனுக்குத் திருமணம் செய்துவை’’ என்று அருளினார். வீரசேனன் மனம் மகிழ்ந்து நல்ல நாள் ஒன்றில் தக்கனது திருமணத்தை முடித்து வைத்தான்.

விநாயகரின் அருள் பெற்ற தக்கனுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு பிரகத்பாணு என்று தக்கன் நாமஞ் சூட்டினான். இவ்வாறு அரசனின் பூர்வ புண்ணிய பலன்களைக் கூறிய முனிவர்; ‘‘அரசே உனது வம்சத்தவர்கள் அனைவரும் விநாயகனைத் தொழுது ஏகாஷர மந்திரத்தை உச்சரித்து வந்தனர். நீ விநாயகரை மறந்ததால் தான் உன் வம்சம் விளங்கப் புத்திரன் பிறக்கவில்லை. எனவே நீ நாடு திரும்பி விநாயகரைத் தொழுது ஏகாஷர மந்திரத்தை ஜபித்தாயேயானால் உனக்குப் புத்திரன் பிறப்பான்’’ என்றார்.

வீமராஜனுடன் மனைவியோடு நாடு திரும்பி, தக்கன் பிரதிஷ்டை செய்த விநாயகர் ஆலயத்தில் விரதமிருந்து ஏகாஷர மந்திரத்தை உச்சரித்து அழகிய ஆண்குழந்தைக்குத் தந்தையானான்.

### *முனிபத்தினியின் சாபம்*

வீமராஜன் விநாயகரின் அருளால் பிறந்த குழந்தைக்கு ருக்குமாங்கதன் எனப்பெயரிட்டு வளர்த்து வந்தான். ருக்குமாங்கதனுக்கு உரிய வயது வந்ததும் வீமராஜன் அவனைக் கபில முனிவரிடம் அழைத்துச் சென்று அரசர்க்குரிய சகல வித்தைகளையும் அவனுக்குக் கற்பிக்குமாறு கேட்டுக் கொண்டான். கபில முனிவர் அவனுக்குச் சகல வித்தைகளையும் கற்பித்ததோடு ஏகாஷர மந்திரத்தையும் உபதேசித்தார். ருக்குமாங்கதன் பக்தி சிரத்தையோடு விநாயகரை வணங்கி ஏகாஷர மந்திரத்தை உச்சரித்து வந்தான்.

ருக்குமாங்கதனுக்கு வயது வந்ததும் வீமராஜன் அவனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு விநாயகரின் திருத் தொண்டுகளைச் செய்து வந்தார். ருக்குமாங்கதன் ஆட்சியைச் சிறப்பாக நடத்தி வந்தான். அவனது புகழ் எட்டுத் திசைகளிலும் பரவியது.

ஒரு நாள் ருக்குமாங்கதன் வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்றான். மிருகமொன்றை அவன் கலைத்துச் சென்றமையால் தனியே வெகு தூரம் வந்து விட்டான். அவனுக்குத் தாகமாக இருந்தது. அதனால் நீரைத் தேடிச் சென்றான். வழியில் கலிமுனிவரின் ஆச்சிரமம் இருந்தது. அங்கு அவன் சென்ற போது முனிவர் அங்கிருக்கவில்லை. முனிபத்தினியான முகுந்தை மட்டும் நந்தன வனத்தில் தனித்திருந்தாள். ருக்குமாங்கதன் அவளை வணங்கி; ''தாயே உச்சி வெயிலில் வந்தமையால் எனக்குத் தாகமாக உள்ளது. குடிப்பதற்கு நீர் தாருங்கள்'' என்று கேட்டான்.

முகுந்தை ருக்குமாங்கதனைப் பார்த்தாள். அவனின் அழகு அவளை வசீகரித்தது. அதனால் மோகங் கொண்டு அவனின் அருகே சென்றாள். அவளது மேலாடை நழுவியது. ருக்குமாங்கதனுக்கு அவளின் நிலை புரிந்தது. தனது கண்களை மூடிக் கொண்டு; தாயே, முனிபத்தினியாக நீங்கள் எனது தாய்க்குச் சமமானவர். தாகத்தினால் எனது நாவறண்டு விட்டது. நீர் கொஞ்சம் தாருங்கள்'' என்று கேட்டான்.

அதைக் கேளாத முகுந்தை அவனது கரத்தைப் பிடித்தாள். துடிதுடித்துப் போன ருக்குமாங்கதன் விலகி நின்றான். ஆனால் முகுந்தை விடவில்லை; ''மோகினிப் பிசாசே முனிபத்தினியாக இருப்பதால் நீ பிழைத்தாய். இல்லாவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன்'' என்று ஆத்திரத்துடன் கூறி விட்டு ருக்குமாங்கன் திரும்பினான்.

''மன்னவா, பெண் ஒருத்தி உன் மீது இச்சை கொண்டு தவிக்க, அதைத் தீர்க்காது செல்லும் உனது உடலெங்கும் வெண்குஷ்டம் பரவி உனது பேரழகு கெட்டு ஒழியட்டும்'' என்று சபித்தாள். உடனே அவளிட்ட சாபப்படி அவனது உடலெங்கும் வெண்குஷ்டம் பரவி முகம் விகாரமடைந்தது. அத்தோற்றத்துடன் அரன்மனைக்குச் செல்ல விரும்பாத ருக்குமாங்கதன் காட்டில் உள்ள சோலை யொன்றில் தங்கியிருந்தான். விடிந்ததும் அவன் அங்கிருந்த குளத்தில் நீராடி விட்டு விநாயகரின் ஏகாஷரமந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது நாரதர் வானவெளியூடாகச் சென்று கொண்டிருப்பதைக் கண்ட ருக்குமாங்கதன்; ''நாரதரே இங்குவந்து எனது துயரைப் போக்க வேண்டும்'' என்று வணங்கினான்.

நடந்தவற்றை ஞானசிருஷ்டியால் அறிந்து கொண்ட நாரதர்; ''கணநாதனின் கருணை பெற்ற பக்தனே, கந்தர்ப்பம் என்னும் நகரில் விநாயகப்பெருமானுக்கு இந்திரன் ஓர் ஆலயம் எடுத்தான். அதனருகில் கணேசகுண்டம் என்றொரு தடாகம் இருக்கிறது. அத்தடாகத்தில் குஷ்டரோகமுள்ள ஒருவன் நீராடிக் குணமானதை நான் நேரிற் கண்டேன். நீ கந்தர்ப்பம் என்ற நகருக்குச் சென்று அங்குள்ள ஆலயத்தின் அருகே உள்ள கணேச குண்டம் என்ற தடாகத்தில் நீராடினால் உனது குஷ்டரோகம் மாறும்'' என்றார்.

அதைக் கேட்ட ருக்குமாங்கதன்; ''தேவரிஷியே இந்திரன் விநாயகப் பெருமானை அங்கு பிரதிஷ்டை செய்து பூசித்ததற்குக் காரணம் என்ன? அதைச் சொல்லுங்கள்'' என்று கேட்டான்.

நாரதர் அந்த வரலாற்றை ருக்கு மாங்கதனுக்குச் சொன்னார்.

### *இந்திரனுக்கு வந்த துன்பம்*

ஒரு சமயம் நாரதர் இந்திரலோகம் சென்றார். அப்பொழுது சபையில் தேவமகளிரின் அற்புதநடனம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாரதரைக் கண்ட இந்திரன் எழுந்து வந்து வணங்கினான். பின் நாரதரே, சகல லோகங்களுக்கும் செல்லும் தாங்கள் அங்கு ஏதாவது அதிசயத்தைக் கண்டிருப்பின் எனக்குக் கூறுங்கள்'' என்றான்.

அதைக் கேட்ட நாரதர்; ''இந்திரா பூவுலகிலே கௌதம முனிவரின் ஆச்சிரமத்திற்கு ஒரு முறை நான் சென்றிருந்தேன். அவரது மனைவியான அகலிகை என்னை வரவேற்றாள். அழகில் அவளை மிஞ்ச யாரும் இல்லை. மகாலட்சுமியை விடப் பேரழகி அவள். அவளைப் போன்றதொரு அழகியை நான் எந்த லோகத்திலும் காணவில்லை'' என்று கூறி விட்டுச் சென்றார்.

அதைக் கேட்டதும் இந்திரனுக்கு அவளின் மீது மோகமேற்பட்டது. உடனே புறப்பட்டுப் பூவுலகிற்குச் சென்று கௌதம முனிவரின் ஆச்சிரமத்தை அடைந்தான். அங்கிருந்த அகலிகையின் பேரழகைக் கண்டு அவன் திகைத்து விட்டான். நாரதர் கூறியதை விடப் பல மடங்கு அழகுள்ளவளாக அகலிகை தோன்றினாள்.

கௌதமர் விடியற் காலையில் கங்கைக்குச் சென்று நீராடுவதை வழக்கமாகக் கொண்டவர். அவர் கங்கைக்குச் சென்றதும் அகலிகையைத் தான் அடையலாமெனத் திட்ட மிட்ட இந்திரன், அன்றிரவு கௌதமரின் ஆச்சிரமத்திற்குச் சென்று சேவலைப் போலக் கூவினான். பொழுது விடிந்து விட்டது. என்று நினைத்த கௌதமர் நித்திரை விட்டெழுந்து நீராடக் கங்கைக் கரைக்குச் சென்றார். அதற்காகக் காத்திருந்த இந்திரன் கௌதமரைப் போல உருக் கொண்டு ஆச்சிரமத்துள் நுழைந்து அகலிகையைக் கட்டி அணைத்தான்.

கங்கைக் கரைக்குச் சென்ற கௌதம முனிவர் ஆகாயத்தைப் பார்த்தார். நட்சத்திரங்களைக் கணக்கிட்டுப் பார்த்த போது இன்னும் விடிவதற்கு நேரம் இருக்கிறது. என்று நினைத்து மனம் குழம்பியவாறு ஆச்சிரமத்திற்குத் திரும்பி வந்தார். கதவு மூடப்பட்டிருந்தது. மனைவியை அழைத்தபடி உள்ளே சென்றார். இந்திரனின் அணைப்பில் இருந்த அகலிகை திடுக்கிட்டு எழுந்தாள். நடந்ததை உணர்ந்து கொண்ட அகலிகை முனிவரின் பாதங்களில் விழுந்து அழுதாள்.

''பெண்ணே, என்னைப் போல வந்த இந்திரனின் உருவ அமைப்பில் நீ ஏமாந்தாலும் அவனது ஸ்பரிசத்தில் ஏமாந்திருக்கக் கூடாது. கணவனின் ஸ்பரிசத்திற்கும் மாற்றானின் ஸ்பரிசத்திற்கும் வேறுபாடு அறியாது கல்லைப் போல உன் உடல் இருந்தமையால், நீ கருங்கல்லாக மாறக் கடவாய்'' என்று சபித்தார்.

''சுவாமி, நான் மனமறிந்து இக் குற்றத்தைச் செய்யவில்லை. இதற்காக இப்பெரிய தண்டணையை நீங்கள் எனக்குத் தரலாமா..? இதற்கு விமோசனமில்லையா?'' என்று அழுதாள்.

கௌதமர் அவளின் மீது இரக்கப்பட்டு சாபம் நீங்கும் வழியைக் கூறினார்; ''பெண்ணே, அசுரர்களை அழிப்பதற்காக நாராயணன் தசரதச் சக்கரவர்த்திக்கு மகனாகப் பிறப்பான். அப்பொழுது வசிட்டர் செய்யும் யாகத்தைக் காப்பதற்காக இராமன் காட்டுக்கு வருவான். வசிட்டர் இராமனுக்கு விநாயகரின் ஏகாஷர மந்திரத்தை உபதேசித்து யாகத்தைக் காக்குமாறு கட்டளையிடுவார். இராமன் ஏகாஷர மந்திரத்தின் வலிமையால் அரக்கியை அழித்து விட்டு இவ்வழியால் வரும் போது அவனது திருவடி கல்லாக இருக்கும் உன்மீது படும். அப்பொழுது உனக்குச் சாபவிமோசனம் கிடைக்கும்'' என்ற கௌதம முனிவர் இந்திரனைக் கோபாவேஷத்துடன் தேடினார். இந்திரன் பூனை வடிவம் கொண்டு வெளியே சென்றான். தவவலிமையால் அதைக் கண்டு கொண்ட கௌதமர்; ''தேவேந்திரா நீ செய்தது தகுமா..? உன் பெருமையை உணராது எந்த இன்பத்தை நாடி இக் கீழ்த்தரமான செயலைச் செய்தாயோ, அச் செயலால் உன் உடல் முழுவதும் அச் சின்னங்களாகட்டும்'' என்று சபித்தார்.

இந்திரன் வெட்கத்தால் தலை குனிந்தான். அவனது உடல் முழுவதும் பெண்குறிகளாயின. அதனால் வெளியே நடமாட வெட்கப்பட்ட இந்திரன், ஒரு குளத்தில் உள்ள தாமரைப் பூவினுள் சென்று மறைந்து கொண்டான். இந்திரனைக் காணாத தேவர்கள் கவலையுடன் தேவருலகம் எங்கும் தேடிப் பார்த்தனர். இந்திரனைக் காணவில்லை. அவனில்லா விட்டால் இந்திரவுலகம் இயங்காது என்பதை அறிந்து எல்லா லோகங்களிலும் தேட ஆரம்பித்தனர். எங்கும் இந்திரனைக் காணாமையால் தேவர்கள் பிரகஸ்பதியிடம் சென்று முறையிட்டனர். அதற்குப் பிரகஸ்பதி; ''திரிகால ஞானியான நாரத முனிவர் தான் சர்வலோகமும் செய்பவர். எனவே அவரிடம் சென்று வினாவுங்கள்'' என்று கூறினார்.

தேவர்கள் நாரதரிடம் சென்று அவரை வணங்கி, இந்திரன் காணமற் போன விஷயத்தைக் கூறி அவன் எங்கிருக்கிறான் என அறிந்து செல்லுமாறு கேட்டனர். நாரதர், இந்திரன் கௌதம முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்ற வரலாற்றைக் கூறி அவன் மறைந்திருக்கும் இடத்தையும் சொன்னார். பின் கௌதம முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்று இந்திரனின் சாபவிமோசனம் பெறும் வழியைக் கேட்குமாறு கூறினார்.

தேவர்கள் எல்லோரும் கௌதம முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்று அவரைப் பணிந்து நின்றனர்; ''தேவர்களே, உங்கள் அனைவரையும் ஒன்றாகப் பார்க்கும் பாக்கியத்தை நான் இன்று பெற்றுள்ளேன். உங்கள் குறையைத் தீர்ப்பதற்காக நான் விநாயகரின் ஏகாஷர மந்திரத்தை பிரகஸ்பதிக்கு உபதேசிக்கிறேன். அவர் அதை இந்திரனுக்கு உபதேசிப்பார். அதனால் அவனின் உடலில் உள்ள பெண்குறிகள் யாவும் கண்களாக மாறும்'' என்று கூறிய கௌதமர் ஏகாஷர மந்திரத்தைப் பிரகஸ்பதியின் காதில் ஓதினார்.

தேவர்கள் மனம் மகிழ்ந்து கௌதமரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு கந்தர்ப்பம் என்ற இடத்திலுள்ள தடாகக் கரைக்குச் சென்று தாமரைப் பூவுள் ஒளிந்திருந்த இந்திரனைக் கண்டனர். இந்திரன் அவர்களைப் பார்க்க வெட்கப்பட்டான். பிரகஸ்பதி அவனது காதில் விநாயகரது ஏகாட்ஷர மந்திரத்தை உபதேசித்தார். அக்கணமே இந்திரனது உடலெங்குமுள்ள பெண் குறிகள் மறைந்து கண்களாகின. அதன் பின் இந்திரன் கதம்பவனத்திற்குச் சென்று அங்கிருந்த குளக்கரையில் விநாயகப் பெருமானுக்கு ஆலயம் அமைத்து ஏகாட்ஷர மந்திரத்தை உச்சரித்தவாறு ஆயிரம் வருடங்கள் அன்ன ஆகாரமின்றித் தவஞ் செய்தான். இந்திரனது தவத்தின் வலிமையை மெச்சிய விநாயகர் வேழ முகத்துடன் அவன் முன் தோன்றி; ''உனக்கென்ன வரம் வேண்டும்'' என்று கேட்டார்.

''விக்னேஸ்வரா, என்றும் உன்மீதுள்ள பக்தி எனக்குக் குன்றாதிருத்தல் வேண்டும். அத்துடன் இத்தலத்தில் தாங்கள் சிந்தாமணி விநாயகர் என்ற பெயரில் எழுந்தருளி இருத்தல் வேண்டும். இத்தடாகத்திற்குச் சிந்தாமணித் தீர்த்தம் எனப் பெயர் நிலைக்க வேண்டும். அத்துடன் இத்தலத்தில் வணங்கி இத் தீர்த்தத்தில் நீராடுவோர் தமது குறைகள் நீங்கி சகல சௌபாக்கியங்களோடும் வாழ அருளல் வேண்டும்'' என்றான்.

விநாயகர்; ''அப்படியே ஆகட்டும்'' என்று அருளினார். இவ்வாறு நாரதர் அத்தீர்த்தத்தின் மகிமை ருக்குமாங்கதனுக்குச் சொல்லி அத்தீர்த்தத்தில் சென்று நீராடுமாறு கூறினார்.

### *கிருச்சமதரின் தவம்*

ருக்குமாங்கதனைக் காணாத படைவீரர்கள் காடு முழுவதும் தேடினார்கள். அவர்கள் தேடிக் கொண்டு வருகையில் அரசனும் நாரதரும் குளக்கரையில் இருந்த விநாயகர் ஆலயத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டு அவர்களின் அருகே வந்தார்கள். அரசனின் தோற்றத்தைக் கண்ட வீரர்கள் அதிர்ந்து போனார்கள். படைவீரர்களுக்குத் தனக்கு நேர்ந்த கதியைக் கூறிய ருக்குமாங்கதன் கம்பவனத்திற்குப் புறப்பட்டுச் சென்று கணேச குண்டமான சிந்தாமணி தீத்தத்தில் நீராடி, சிந்தாமணி விநாயகரை வணங்க அவனது வெண் குஷ்டம் நீங்கியது. அப்பொழுது வானத்தில் இருந்து ஒரு விமானம் வந்து கோயிலின் அருகே தரையிறங்கியது. அதிலிருந்து இறங்கி வந்த தேவ கணங்கள் ருக்மாங்கதனை வணங்கி; ''தேவரீரை விநாயகப் ரெுமான் இவ்விமானத்தில் அழைத்து வரச் சொன்னார்'' என்றனர்.

''தேவகணங்களே, உங்கள் வார்த்தைகளைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் எனது பெற்றோரைப் பிரிந்து வர எனக்கு விருப்பமில்லாமல் இருக்கிறது'' என்றான்.

அதைக் கேட்ட தேவகணங்கள்; ''அரசே, தங்கள் விருப்பம் நிறை வேறும். தாங்கள் தாய் தந்தையரை நினைத்துக் கொண்டு சிந்தாமணித் தீர்த்தத்தில் நீராடினீர்களானால் தங்களுக்குக் கிடைத்த பாக்கியம் அவர்களுக்கும் கிடைக்கும்'' என்றனர்.

அரசனும் அரசனுடன் வந்தவர்களும் தமது தாய் தந்தையர் மற்றும் உறவினர்களை நினைத்துக் கொண்டு சிந்தாமணி தீத்தத்தில் மூழ்கி எழுந்தனர். உடனே அவர்களது உறவினர்களும் தாய் தந்தையர்களும் அவ்விடத்திற்கு வந்தனர். விநாயகர் அவர்கள் ஏறிவர மேலும் பல விமானங்களை அனுப்பினார். அவர்கள் எல்லோரும் மகிழ்வுடன் அவ் விமானங்களில் ஏறி விநாயகரது பாதார விந்தங்களை அடைந்தனர்.

ருக்குமாங்கதனால் வெறுத்து ஒதுக்கப்பட்ட முகுந்தை விரகதாபம் மேலிட்டவளாய் ருக்குமாங்கதனைத் தேடித் திரிந்தாள். ஒரு நாள் அவ்வழியால் சென்ற இந்திரன் அவளைக் கண்டு மோகித்து ருக்குமாங்கதனைப் போல உருக் கொண்டு அவளுடன் சேர்ந்திருந்தான். அதனால் முகுந்தை கர்ப்ப முற்றாள். அவளின் வயிற்றில் வளரும் கரு இந்திரனால் ஏற்பட்டது என்பதை அறியாத கவி முனிவர் தனக்குக் குழந்தை பிறக்கப் போவதாக எண்ணி மகிழ்ந்தார்.

சுப வேளையில் முகுந்தை ஓர் அழகான ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். கவி முனிவர் மிகவும் மகிழ்ந்து புத்திரன் பிறந்ததை மிகவும் விமர்சையாகக் கொண்டாடினார். அவனுக்கு கிருச்சமதர் எனப் பெயரிட்டார். கிருத்சமதர் சகல கலைகளையும் கற்று விநாயகப் பெருமானை வணங்கி அவரின் பேரருளைப் பெற்றுக் கீர்த்தியுடன் விளங்கினார்.

ஒரு சமயம் மகத நாட்டு அரசனான சூரனின் அரசசபையில் ஒரு போட்டி நடைபெற்றது. அப்போட்டியில் கிருத்சமருக்கும் அத்திரி முனிவருக்கும் கடும் போட்டி வந்து விட்டது. போட்டியில் தோல்வியடைந்த அத்திரி முனிவர், கிருத்சமரைப் பார்த்துக் கேலி செய்தார்; ''நீ கவி முனிவரின் மகனல்ல ருக்மாங்கதனின் மகன். இச்சபையில் இருக்க உனக்கு அருகதை இல்லை. உடனே வெளியே போ'' என்றார்.

கிருத்சமர் அவமானத்தினால் கூனிக் குறிகினார். பின் அச் சபையை விட்டு வெளியேறித் தனது தாயிடம் சென்று; ''எனது தந்தை யார்?'' என்று கோபாவேசத்துடன் கேட்டார்.

முகுந்தை பயத்தினால் உண்மையை மறைக்காது; ''மகனே உனது தந்தை ருக்மாங்கதரன் தான்'' என்று கூறினாள்.

அதைக் கேட்டு வெகுண்டெழுந்த கிருத்சமகர்; ''நீயும் ஒரு பெண்ணா முனிபத்தினி என்ற நினைப்பில்லாமல் இன்னொரு ஆடவனோடு சேர்ந்த நீ பறவைகள் கூட நெருங்காத இலந்தை மரமாகக் கடவாய்'' என்று சபித்தார். அதன் பின் வாழ்க்கையை வெறுத்து அன்ன ஆகாரமின்றி இருந்து தனது

உடம்பை அழிக்க விரும்பினார். அப்பொழுது வானத்தில் ஓர் அசரீதி எழுந்தது; ‘‘கிருத்சமதா! நீ ருக்குமாங்கதனின் புத்திரன் இல்லை. தேவேந்திரனின் புத்திரன்’’.

அதைக் கேட்டு மகிழ்ந்த கிருத்சமகர், தன்னை அரசகுமாரன் என்று கேலி செய்த முனிவர்கள் தன்னை வந்து வணங்கி அருள் பெற வேண்டும் என்று நினைத்துக் காட்டுக்குச் சென்று விநாயகரை மனதில் தியானித்து பதினாயிரம் வருடங்கள் கோரத் தவம் செய்தார். அதன் பயனாக விநாயகர் யானை முகத்தோடும் பத்துக் கைகளோடும் சித்தி புத்தி இருவரும் அருகில் இருக்க சிங்க வாகனத்தில் தோன்றினார். அவரை வணங்கிய கிருத்சமகர்; ‘‘தேவாதி தேவா, நான் தங்களை நினைத்துத் தவம் செய்த இவ்வனத்திற்கு புஷ்பகநகரம் என்னும் பெயருண்டாக வேண்டும். அத்துடன் தங்கள் திருவடியை அடையும் பாக்கியத்தையும் தரல் வேண்டும்’’ என்றார்.

விநாயகரின் அருள் பெற்ற கிருத்சமகர் அவ்விடத்தில் விநாயகப் பெருமானுக்கு ஓர் ஆலயம் அமைத்து அதில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்தார்.

### *முப்புரங்களையும் எரித்தல்*

ஒரு நாள் கிருத்சமக முனிவர் தியானத்தில் இருந்து விட்டுக் கண்களைத் திறந்தார். யோகாக்கினி வீசும் அவரது பார்வையில் இருந்து முகுந்தையின் சாபங்காரணமாக ஓர் அசுரன் தோன்றினான். அவனைக் கண்டு அதிசயித்த கிருத்சமகர்; ‘‘நீர் யார்?’’ என்று கேட்டார்.

‘‘தந்தையே இது என்ன கேள்வி? நான் தங்கள் பார்வையில் இருந்து தோன்றிய புத்திரன் எனது பெயர் பலி’’ என்றான்.

அதைக் கேட்ட கிருத்சமக முனிவர் அவனது காதில் விநாயகரின் மகாமந்திரத்தை உபதேசித்து; ‘‘நீ விநாயகரை நோக்கித் தவஞ் செய்து உனது விருப்பத்தைப் பூர்த்தி செய்’’ என்றார்.

பலி உடனே காட்டுக்குச் சென்று கடுந்தவம் புரிந்தான். அவனது தவத்தால் மனம் மகிழ்ந்த விநாயகர் அவனின் முன் தோன்றினார்; ‘‘ஆதிபரம் பொருளே மூவுலகையும் நான் வெற்றி கொள்ள வேண்டும். தேவர்கள் எனக்கு ஏவல் செய்ய வேண்டும்’’ என்று கேட்டான்பலி.

விநாயகர் மனம் மகிழ்ந்து; ‘‘பக்தனே மூவுலகங்களும் உனக்குப் பணிந்து ஏவல் செய்யும். உனக்குப் பாதுகாப்பாகக் கரும்பொன், வெண்பொன், பசும்பொன் ஆகிய மூன்று உலோகங்களால் ஆகிய மூன்று கோட்டைகளையும் அளித்தோம். கைலாயபதியாகிய பரமசிவனால் அன்றி உன்னை யாரும் அழிக்க முடியாது’’ என்றார்.

விநாயகரைப் பூசித்துப் பலி பெற்ற வரங்களைக் கேள்விப்பட்ட தேவர்கள் பயத்தால் நடுநடுங்கினர். பலி பூலோகத்தையும் பாதாள உலகத்தையும் கைப்பற்றித் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தான். பின்தேவருலகைக் கைப்பற்றுவதற்காகத் தேவேந்திரனுடன் கடுமையாகப் பல நாட்கள் போரிட்டான். தேவேந்திரன் பலியுடன் சண்டையிட முடியாமல் தப்பி ஓடிக் கைலாயத்தில் ஒளித்துக் கொண்டான். பின் அவன் சத்தியலோகத்திற்குச் சென்றான். பிரம்ம தேவனும் நாராயணனும் விநாயகரின் அருட்க்கடாச்சம் பெற்ற பலியை வெல்ல இயலாது என்று நினைத்துக் கைலாயத்திற்குச் சென்று விட்டனர். அதனால் மகிழ்ந்த பலி விநாயகரைத் தொழுது தனக்குத் தருவதாகக் கூறிய கோட்டைகளைத் தருமாறு கேட்டுப் பெற்றுக் கொண்டான்.

ஒரு நாள் நாரதர் கைலாயத்திற்குச் சென்ற போது தேவேந்திரன் அவரைச் சந்தித்துப் பலியால் தமக்கு ஏற்பட்ட துன்பங்களை எடுத்துக் கூறினர். அதற்கு நாரதர்; ‘‘தேவேந்திரனே விநாயகரின் அருட்கடாட்சம் பெற்ற அவனைப் பரம சிவனாலன்றி வேறொருவராலும் அழிக்க முடியாது. அவனுக்குப் பாதுகாப்பாக விநாயகர் வழங்கிய திரிபுரங்களையும் அழிக்கும் சக்தியும் பரமசிவனுக்கே உண்டு. அந்த சக்தியை விநாயகர் பரமசிவனுக்கு அளித்துள்ளார். எனவே நீங்கள் விநாயகரைத் தொழுது அவரிடம் முறையிடுங்கள்’’ என்றார்.

தேவேந்திரனும் தேவர்களும் விநாயகரைத் தொழுது மகாமந்திரத்தை உச்சரித்தனர். அப்பொழுது விநாயகர் அவர்கள் முன் தோன்றினார்; ‘‘தேவர்களே பலி மிகவும் கடுமையான தவத்தை மேற்கொண்டமையால் தான் நான் அவனுக்கு வரமளித்தேன். அவனைக் கைலாயநாதர் ஒருவரால் தான் வெற்றி கொள்ள முடியும். எனவே அவரிடம் சென்று முறையிடுங்கள். நான் பலியின் அழிவுக்கான ஆயத்தங்களைச் செய்கிறேன்’’ என்றார்.

தேவர்கள் கைலாசபதியிடம் முறையிடச் சென்ற போது விநாயகர் ஒரு கிழப்பிராமண வடிவம் கொண்டு பலியிடம் சென்றார். அவரை மதிப்புடன் வரவேற்ற பலி, மகிழ்வுடன் அவர் வந்த

காரணத்தைக் கேட்டான்; “அசுரேந்திரா! எனது பெயர் கலாதரன். நான் எல்லா லோகங்களுக்கும் சென்று வந்துள்ளேன். எங்கும் உனது புகழ் பரவியுள்ளது. நான் கைலாயத்திற்கு மகேஸ்வரனைப் பார்க்கச் சென்றேன். அவரும் பார்வதிதேவியும் சிந்தாமணி விநாயகரைப் பூசித்துக் கொண்டிருந்தனர். சிந்தாமணி விநாயகர் சகல வல்லமையும் பெற்றவர். அவரைப் பூசிப்பவர்கள் உன்னை விட அதிகமான வரங்களைப் பெறுவார்கள். அதை உன்னால் தான் எடுக்க முடியும் அதை எடுத்து வந்து எனக்குத் தருவாயா” என்று கேட்டார்.

“சுவாமி என்னைப் பற்றி கேள்விப் பட்டதாகக் கூறுகிறீர்கள். மூவுலகையும் வென்று விட்டேன். பிரமனும் நாராயணனும் இந்திரனும் எனக்குப் பயந்து ஒளித்து விட்டனர். மகேஸ்வரன் எனக்கொரு கேடா. அதுவரை தாங்கள் எனது அரண்மனையில் தங்கியிருக்கலாம்” என்று கூறி விட்டுப் புறப்பட்டான் பலி.

தேவர்கள் விநாயகர் கூறியதை பரமசிவனுக்குச் சொல்லி அவனை அழிக்குமாறு வேண்டினர். சிவபெருமான் பக்தி சிரத்தையோடு விநாயகப் பெருமானைத் தொழுதார். சிவபெருமானின் முகத்திலிருந்து பஞ்ச முகங்களோடு விநாயகர் தோன்றினார்; “மகேஸ்வரா பலி என்ற அசுரனை அழிப்பதற்கான சக்தியை உனக்குத் தந்தோம்” என்று அருளி மறைந்தார்.

கைலாயத்தில் நந்திதேவர் தலைமையில் தேவகணங்கள் யுத்தத்திற்குத் தயாராகின. பிரமதேவன் தேரை ஓட்டிச் செல்ல, ஈசன் தேரில் ஏறிப் புறப்பட்டார். தேவேந்திரன் ஐராவதத்திலும், சுப்பிரமணியர் மயிலிலும், வீரபுத்திரர் இன்னொருரதத்திலும் ஏறிப் புறப்பட்டனர்.

அசுரன் திரிபுரங்களில் ஏறி மாயத் தோற்றங்களில் வந்து ஈசனது சேனைகளோடு கடும் யுத்தம் செய்தான். யுத்தம் பல நாட்கள் நீடித்தது. அதனால் ஈசன் தோற்று விடுவாரோ எனத் தேவர்கள் கலங்கினார்கள். அவர்களுக்குப் பயமாக இருந்தமையால் பார்வதிதேவியைப் பிரார்த்தித்தனர். பார்வதிதேவி அங்கு எழுந்தருளி வந்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார். பின் சிவனிடத்தில் சென்று தேவர்கள் பயப்படுவதை எடுத்துக் கூறினார். சிவன் மிகுந்த கோபங் கொண்டு விநாயகரை மனதில் இருத்தித் தனது சூலாயுதத்தை எடுத்து விட்டார். மறுகணம் மூன்று கோட்டைகளும் எரிந்து சாம்பாராகின. திரிபுரனும் எரிந்து சாம்பரானான். தேவர்கள் பூமாரி சொரிந்து மகிழ்ந்து விநாயகரைத் தொழுதனர்.

### *அறுகை உண்டு பசிதீர்த்த விநாயகர்*

ஒரு நாள் ஜனகராஜனின் அரசசபைக்கு நாரதர் வந்தார். ஜனகராஜன் பகவான் வேறு தான் வேறு என்ற பேதமில்லை. எல்லாம் ஒன்றே என்று நினைத்து வாழ்ந்து வந்தமையால் அவன் நாரதரை மதிக்கவில்லை. அதனால் அவனுக்குப் பாடம் புகட்ட வேண்டு மென்று நினைத்த நாரதர் கவுண்டின்ய முனிவரிடம் வந்து, அவர் பூஜிக்கும் விநாயகரிடம் தனது குறையைச் சொன்னார். ஜனகனின் அறியாமையைப் போக்க எண்ணிய விநாயகர் கடும் நோயுள்ள பிராமண வடிவம் தாங்கி ஜனகனுடைய அரண்மனைக்குச் சென்றார். நோயாளியான பிராமணனைக் கண்டு அதிசயித்த அரசன்; “உமக்கு என்ன வேண்டும் என்று சொல்லும் உடனே நான் தருவேன்” என்றான்.

“பசியை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை அரசே எனக்கு உணவு தாருங்கள்” என்றார் கிழப்பிராமணர்.

அரசன் உடனே அவருக்கு உணவு கொடுக்கும்படி சொன்னான். ஏவலாளர்கள் தலைவாழை இலை போட்டு உணவுகளைப் பரிமாறினர். அந்த அந்தணன் அவர்கள் உணவு வைக்க வைக்க உண்டு கொண்டே இருந்தான். அரண்மனையில் இருந்த உணவுப் பண்டங்கள் முழுவதையும் வீரர்கள் கொண்டு வந்து வைக்க வைக்க விநாயகர் உண்டு கொண்டிருந்தார். அரசனது உணவுக் களஞ்சியம் காலியானது. அதனால் அந்நாட்டிலுள்ள வீடுகளில் உள்ள உணவுப் பொருட்கள் யாவும் கொண்டு வரப்பட்டன. முழுவதையும் உண்ட விநாயகர்; “பசிக்கிறது இன்னும் கொண்டு வாருங்கள்” என்றார்.

அரசன் செய்வதறியாது கலங்கிப் போனான்; “பெரியவரே இனிக் கொடுப்பதற்கு என்னிடம் எதுவும் இல்லை” என்றான்.

பிராமண உருவில் வந்த விநாயகர் வாய்விட்டுச் சிரித்தார்; “மன்னனே பகவான் வேறு நான் வேறு இல்லை என்று சொன்னாய். இப்பொழுது எனது பசியைத் தீர்க்க முடியாது தடுமாறுகிறாய். நீ பகவானா? சொல்” என்று கேட்டு விட்டு அரண்மனையை விட்டு வெளியேறினார் கிழப்பிராமணர்.

அங்கிருந்து விநாயகர் ஓர் ஏழைப்பிராமணனான திரிசரனது வீட்டுக்குச் சென்றார். அவரைக் கண்டதும் திரிசரனும் அவனது மனைவி விரோசனையும் அவரை வரவேற்று உபசரித்து அவரது பாதங்களை நமஸ்கரித்தனர். அவர்கள் இருவரும் விநாயகரின் பக்தர்கள்.

''திரிசரா பசியால் நான் ஜனகமகாராசாவின் அரண்மனைக்குச் சென்றேன். அவர் எனக்குப் போதிய உணவு அளிக்கவில்லை. தந்த சிறிதளவு உணவு எனது பசியை அதிகரிக்கச் செய்து விட்டது. எனது பசியைப் போக்க உணவு தா'' என்றார்.

திரிசரனும் விரோசனையும் திகைத்துத் திகிலடைந்து விட்டனர்.

''பெரியவரே, அரசனால் தீர்க்க முடியாத உமது பசியைத் தினமும் யாசித்து வாழும் இந்த ஏழையால் எப்படித் தீர்க்க முடியும். நேற்று யாசித்துப் பெற்ற பொருட்கள் யாவும் முடிந்து விட்டன. ஒரே ஒரு அறுகம் புல்லு மட்டும் எஞ்சியிருக்கிறது'' என்று கலங்கினான் திரிசரன்.

விநாயகப் பெருமான் சிரித்தார். பின்பு; ''அன்பனே அந்த அறுகம்புல்லை அன்போடு எடுத்து வந்து தா'' என்றார்.

அதைக் கேட்ட விரோசனை அன்போடு அந்த அறுகம் புல்லை எடுத்து வந்து விநாயகரிடம் கொடுக்க அவர் அதை உண்டார். அவரின் பசி அடங்கியது. உடனே திரிசரனது வீடு மாடமாளிகையாகி அங்கு பொன்னும் பொருளும் குவிந்தன. அதே போல அரண்மனையிலும், நாட்டிலும் உள்ளவர்களின் வீடுகளிலும் குவிந்தன.

திரிசரனும் விரோசனையும் தங்கள் முன் வந்திருப்பவர், தாங்கள் தினமும் விருப்புடன் பூசை செய்யும் விநாயகர் என்றுணர்ந்து அவரின் பாதங்களைத் தொழுதனர். விநாயகர் அவர்களுக்குக் காட்சி கொடுத்தார்.

இக் கதையை கவுண்டிய முனிவர் தனது மனைவியான ஆசிரியைக்குக் கூற ஆசிரியை கவுண்டிய முனிவரைக் கேட்டாள்; ''சுவாமி ஓர் அறுகு கொடுத்ததால் விநாயகரின் அடங்காத பசி அடங்கியது என்று கூறினீர்கள். நாம் தினமும் பதினாயிரம் அறுகுகளால் விநாயகரை அர்ச்சிக்கிறோம். எனினும் எமக்குப் பொன்னும் மணியும் கிடைக்கவில்லையே'' என்றாள்.

''நான் மீண்டும் பிறவாத நிலையை எண்ணிப் பதினாயிரம் அறுகுகளால் விநாயகரை அர்ச்சிக்க, இவள் பொன்னும் மணியும் கிடைக்கவில்லை யெனக் கவலைப்படுகிறாள். இவளுக்கு ஓர் அறுகின் மகிமையை எடுத்துக் காட்ட வேண்டும் என நினைத்த கவுண்டிய முனிவர் விநாயகரை அர்ச்சித்த ஓர் அறுகை எடுத்துக் கொடுத்து; ''இதைத் தேவேந்திரனிடம் கொண்டு சென்று கொடுத்து இதன் நிறைக்குச் சமனான பொன்னைப் பெற்றுவா'' என்றார்.

அவள் தேவேந்திரனிடம் சென்றாள். தேவேந்திரன் அவளைக் குபேரனிடம் அனுப்பினான். குபேரன் முனிபத்தினியை வரவேற்று உபசரித்தான். பின்பு அவள் கொண்டு வந்த அறுகம்புல்லை தராசின் ஒரு பக்கத்தில் வைத்து விட்டு மறுகரையில் ஒரு சிறிய பொற்கட்டியை வைத்தான். அறுகம் புல் வைத்த பக்கம் தாண்டு இருந்தது. அதனால் குபேரன் மறுகரையில் பொன்னும் மணியும் இரத்தினங்களையும் வைத்தான். எனினும் அதுசமமாகவில்லை. அதனால் தனது களஞ்சியத்தில் உள்ள அனைத்துப் பொருட்களையும் கொண்டு வந்து வைத்தான். அப்படியிருந்தும் அது சமப்படவில்லை. அதனால் குபேரனின் மனதில் சந்தேகம் எழுந்தது. அதனால் தேவர்கள் அனைவரையும் அழைத்து, அவர்களிடமிருந்த பொருட்களை யெல்லாம் கொண்டு வந்து வைக்கச் சொன்னான். அப்படியிருந்தும் தராசு சமப்படவில்லை. உடனே அவன் மும்மூர்த்திகளையும் அழைத்துத் தானும் சேர்ந்து தராசில் ஏறி நின்றான். எனினும் தராசு சமப்படவில்லை. குபேரன் செய்வதறியாது திகைத்தான். கண்களை மூடி விநாயகரைத் தியானித்தான். அவ்அறுகு விநாயகரை அர்ச்சித்த அறுகு என்பது தெரிய வந்தது; ''முனிபத்தினியே இவ் அறுகு விநாயகரை அர்ச்சித்த அறுகு. இதற்கு நிகரானது எதுவும் இல்லை'' என்றான். அப்பொழுது தான் ஆசிரியைக்கு அறுகம் புல்லின் மகத்துவம் புரிந்தது.

### *வன்னியிலையின் மகத்துவம்*

கிருத்திக வீரியனுடைய தந்தை நான்முகனிடம் கேட்டார்; ''சுவாமி அறுகம் புல் கிடைக்கா விடில் விநாயகரை எதனால் அர்ச்சிக்கலாம்''.

''அறுகம் புல் கிடைக்காதவிடத்து வன்னியிலையாலும் மந்தார மலராலும் விநாயகரை அர்ச்சித்தாலும் அறுகம் புல்லால் அர்ச்சிக்கும் பலன் கிட்டும்'' ஆதேயம் என்ற காட்டில் வீமன்

என்றொரு வேடன் வசித்து வந்தான். அவன் மிகவும் கொடியவன். காட்டு வழியால் செல்வோரை வருத்திப் பொருட்களைப் பறித்து வந்தான். ஒரு நாள் ஓர் அந்தணன் அக்காட்டு வழியால் வந்த போது வீமன் அவனைக் கொன்று விட்டு அவனது பொருட்களைப் பறித்தான். இதைக் கண்ட அரக்கன் ஒருவன் அப்பொருட்களை வீமனிடமிருந்து கவர எண்ணி அவனைத் துரத்திச் சென்றான். அவனிடமிருந்து தப்புவதற்காக வேகமாக ஓடிய வீமன் வன்னி மரம் ஒன்றில் ஏறினான். அவ்வன்னிமர அடியில் விநாயகரின் சிலை ஒன்று இருந்தது. வீமன் ஏறும் போது உதிர்ந்த இலை ஒன்று விநாயகரின் மேல் விழுந்தது. வீமனைத் துரத்தி வந்த அரக்கனும் வன்னி மரத்தில் ஏறினான். அப்பொழுதும் ஒரு வன்னியிலை விநாயகரின் மேல் விழுந்தது. பின் இருவரும் மரத்தில் இருந்து சண்டையிட்டுத் தவறி நிலத்தில் விழுந்து இறந்தனர். எனினும் அவர்கள் ஏறும் போது வன்னிமரத்தில் இருந்த இரு இலைகள் விநாயகர் மீது விழுந்தமையால் அவர்கள் திவ்வியரூபம் பெற்று விண்ணுலகம் சென்றனர்'' என்று நான்முகன் கூறினார்.

### *உலகளந்த வாமனர்*

காசிபமுனிவரின் மனைவியான அதிதி என்பவள் விஷ்ணு தனக்கு மகனாகப் பிறக்க வேண்டும் என்று தவஞ் செய்தாள். அதன் பயனாக மகாவிஷ்ணு அதிதியின் வயிற்றில் நான்கு கரங்களுடன் வாமனராக அவதரித்தார். காசிப முனிவரும் அதிதியும் அவரைப் பெருமகிழ்வோடு வளர்த்து வந்தனர்.

ஒரு நாள் வாமனர் தனது தந்தையை நோக்கி; ''தந்தையே இந்திரப்பதவியை விரும்பி மாபலி நூறாவது அஸ்வமேத யாகம் செய்கிறான். அவனை வென்று இந்திரனுக்கு அப்பதவியை நிலை பெறச் செய்ய என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டார்.

''மகனே விநாயகப் பெருமானின் அருளால் தான் அது கைகூடும்'' என்று கூறி விநாயகப் பெருமானின் சடாச்ஷர மந்திரத்தை உபதேசித்து அதை உச்சரிக்கும் முறைகளைச் சொல்லிக் கொடுத்தார்.

வாமணர் அவ்வூரில் வன்னி மரத்திற்குக் கீழ் இருந்த விநாயகப் பெருமானைத் துதித்து சடாச்ஷர மந்திரத்தை உச்சரித்தார். அதனால் விநாயகப் பெருமான் மயில்வாகனத்தில் தோன்றி மகாவலியை வெற்றி கொள்ளும் சக்தியை வாமனருக்கு அளித்தார். பின் வாமனர் அவ்வன்னி மரத்தடியில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்து வணங்கி விட்டு மகாவலி யாகம் செய்யுமிடத்திற்குச் சென்றார். வாமனரை யாரென அறியாது வரவேற்ற மாவலி; ''சுவாமி அடியேனை ஒரு பொருட்டாகக் கருதி வந்ததன் காரணம் யாது?'' என்று கேட்டான்.

''அசுரேந்திரா! நான் தவம் செய்வதற்கு மூன்றடி நிலம் வேண்டும். அதை உன்னிடம் யாசித்துப் பெற வந்தேன்'' என்று கூறினார் வாமனர்.

''தாராளமாகத் தருகிறேன் சுவாமி'' என்ற மாவலியை அசுரர்களின் குருவான சுக்கிராச்சாரியார் அழைத்துச் சென்று; ''அசுரேந்திரா குள்ளமாக வந்திருப்பவர் யார் தெரியுமா? மகாவிஷ்ணுவே குள்ள உருவில் வந்து உனது யாகத்தை அழிக்க வந்துள்ளார். நிலத்தைக் கொடுக்காதே'' என்றார்.

''அப்படியா? பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமன் என்னிடம் யாசிக்க வந்தாரென்றால் அது எனக்குப் பெருமை. கொடுத்த வாக்கைக் காப்பாற்றாது விடுவதை விட கொடுத்து விட்டு அதனால் வரும் துன்பத்தை வெற்றி கொள்வதே வீரனுக்கு அழகு'' என்றான் மாவலியின் அதனால் மனம் வருந்திய சுக்கிராச்சாரியார் ஒரு வண்டின் உருவம் எடுத்து கமண்டலத்துள் நுழைந்து நீர் வரும் துவாரத்தை அடைத்தார். அதை உணர்ந்த வாமணர் ஒரு குச்சியை எடுத்து கமண்டலத்தின் நீர் வரும் துவாரத்துள் விட்டார். அக்குச்சு சுக்கிராச்சாரியாரின் கண்ணைக் குத்திக் குருடாக்கியது. அதனால் சுக்கிராச்சாரியார் அவ்விடத்தை விட்டு அகன்றார்.

மாவலி குள்ளமான வாமனரைப் பார்த்து மூன்றடி நிலத்தை அளந்து எடுக்குமாறு கூற, வாமனர் விசுவரூபம் எடுத்தார். அவரது உருவம் வானத்தைத் தொட்டது. அவர் தனது முதல் அடியால் பூவுலகையும் இரண்டாவது அடியால் வானுலகம் முழுவதையும் அளந்து விட்டு; ''மூன்றாவது அடியை அளக்க இடம் எங்கே உள்ளது'' என்று கேட்டார்.

மகாவிஷ்ணுவின் விஸ்வரூபத்தைக் கண்டு மகிழ்ந்த மாவலி; ''சுவாமி அடியேனின் சிரசில் வையுங்கள்'' என்றார். நாராயணன் மாவலியின் தலையில் தனது மூன்றாவது அடியை வைத்து அமுத்த அவன் பாதாள உலகம் சென்றான். சிவனின் அருட்கடாச்சம் பெற்ற அவன் பாதாள உலகில் இருந்து மகா விஷ்ணுவைத் துதித்துக் கொண்டிருக்கிறான்.

பிரம்மதேவர் வன்னி மரத்தின் மகத்துவத்தை விளக்க இன்னுமொரு கதை சொன்னார்.

***கீர்த்திக் கருளிய விநாயகர்***

பிரியவிரதன் என்ற அரசனுக்கு கீர்த்தி, பிரபை என்று இரு மனைவிகள் இருந்தனர். இருந்த போதும் அவன் பிரபையின் மீதே அளவுக்கதிகமான அன்பு வைத்திருந்தான். அவளுக்கு பதுமநாதன் என்றொரு மகன் இருந்தான். அவனுக்குப் பாஞ்சவன் என்ற அரசனின் மகளைத் திருமணம் செய்து வைத்தான். இதனால் பிரபை, கீர்த்தியை மதிக்காது செருக்குடன் நடந்து வந்தாள்.

ஒரு நாள் பிரபையோடு அரசன் மகிழ்ந்திருந்த வேளை கீர்த்தி அங்கே வந்தாள். அவளைக் காலால் உதைத்த பிரபை, அவளை அவமானப் படுத்தி அனுப்பினாள். அதை அரசன் கண்டு கொள்ளவில்லை. கீர்த்தி துயருடன் இனி உயிர்வாழ்வதில்லை என்ற முடிவுடன் வெளியே வந்தாள். அப்பொழுது அங்கே வந்த புரோகிதன் ஒருவன் அவளின் துயரை அறிந்து அதைப் போக்குவதற்காக விநாயகரைத் தொழுது அவரது திவ்விய மந்திரத்தை உச்சரிக்குமாறு கூறிச் சென்றான். கீர்த்தி அறுகம் புல்லால் விநாயகரை அர்ச்சித்து வந்தாள். ஒரு நாள் அறுகம் புல் அவளுக்குக் கிடைக்கவில்லை. அதனால் அவள் வன்னியிலையால் விநாயகரை அர்ச்சித்து விட்டு கவலையுடன் உணவு உண்ணாது படுத்தாள். அன்றிரவு விநாயகர் அவளின் கனவில் தோன்றி; ''பெண்ணே என்னைப் பார்'' என்றார் அவள் அர்ச்சித்த வன்னி இலைகள் அறுகம் புற்களாகத் தெரிந்தன; ''உனது கவலைகள் இன்றோடு மறைத்து விடும். உனது கணவன் பிரபையை விட்டு வந்து உன்னோடு மகிழ்ந்திருப்பான். அதனால் உனக்கு ஒரு மகன் பிறப்பான். அவனுக்கு கிப்பிரப்பிரசாதன் எனப் பெயரிடு. அவனது நான்காவது வயதில் மாற்றாந்தாய் அவனை விஷமிட்டுக் கொல்ல நினைப்பாள். ஆனால் அவன் தப்பி விடுவான்'' என்று அருளினார்.

விநாயகரின் அருள் வாக்கின் படி பிரபையை வெறுத்தொதுக்கி விட்டு பிரியவிரதன் கீர்த்தியிடம் வந்து சேர்ந்தான். அதன் பயனாக அவனுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அவனுக்குக் கிப்பிரப்பிரதாபன் எனப் பெயரிட்டான். அவனுக்கு நான்கு வயதான போது அவனுண்ணும் உணவில் பிரபை நஞ்சைக் கலந்தாள். அதனால் அவன் மயக்கமடைந்தான். வைத்தியர்களால் விஷத்தை இறக்க முடியவில்லை. விநாயகர் முன்பு கூறியது அவளுக்கு நினைவு வந்தது. அதனால் அவள் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு கிருச்சமரிடம் ஓடிச் சென்றாள். வழியில் பிள்ளை இறந்து விட்டது.

கிருச்சமர் ஞான திருஷ்டியால் நடந்ததை அறிந்து அவ்விடத்திற்கு வந்து; ''பெண்ணே கவலைப்படாதே முன்பு நீ வன்னியிலையால் செய்த பூசையின் பலனை உனது மகனின் கையில் தத்தம் செய். அவன் உயிர் பெறுவான்'' என்றார்.

கீர்த்தி அவ்வாறு செய்ய, அவளது மகன் உயிர்த்து எழுந்தான். அதைக் கண்டு மகிழ்ந்த கீர்த்தி; ''வன்னி இலைக்கு இவ்வளவு மகத்துவம் உண்டா?'' என்று கேட்டாள்.

கிருத்சமர் வன்னி இலையின் மகத்துவத்தைச் சொல்லத் தொடங்கினார்; ''பெண்ணே! வன்னி மரத்தின் பெயரை உச்சரித்தால் வாக்கினால் செய்த பாவங்கள் அணைத்தும் நீங்கி விடும். மனத்தினால் நினைத்தால் நினைவுகளால் செய்த பாவங்கள் அனைத்தும் மறைந்து விடும். வன்னிமரத்தைச் சுற்றி வந்து தொழுதால் செயலால் செய்த பாவங்கள் அனைத்தும் தீர்ந்து விடும்'' என்றார்.

ஒருநாள் மந்தாகரன் என்ற முனி புதல்வனும் அவனது மனைவியான சமி என்ற பெண்ணும் காட்டுவழியாகச் செல்லும் போது விநாயகரின் தும்பிக்கை முகத்தை உடைய ப்ருசுண்டி முனிவரின் உருவத்தைக் கண்டு கேலி செய்து சிரித்தனர். அதனால் கோபங் கொண்ட முனிவர்; ''நீங்கள் எதற்கும் உதவாத மரங்களாகக் கடவீர்கள்'' எனச்சபித்தார். அதனால் மனம் வருந்திய இருவரும் முனிவனின் பாதங்களைப் பற்றிப் பிடித்துத் தமக்கு சாமவிமோசனம் தரும்படி மன்றாடினர். முனிவர் மனமிரங்கி; ''தும்பிக்கைப் பெருமானான விநாயகன் உங்கள் நிழலில் வந்து ஒதுங்கும் போது உங்கள் சாபம் நீங்கிச் சிறப்பு உயரும்'' என்றார்.

சாபப்படி மந்தாரனும் சமியும் வன்னி மரமாகவும் மந்தார மரமாகவும் மாறினர். இதை அறிந்த மந்தாரனது தகப்பனும் சமியும் அவர்களின் சாபம் நீங்குவதற்காக விநாயகனின் சடாச்ஷர மந்திரத்தை உச்சரித்துப் பன்னிரண்டு வருடங்கள் விரதமிருந்தனர். அப்போது அவர்கள் முன் தோன்றிய விநாயகர்; ''பக்தர்களே, எனது பக்தன் கொடுத்த சாபத்தை நீக்குவது அரிதிலும் அரிது. உங்களின் அளவில்லாத பக்தி காரணமாகவும் அவ்விரு மரங்களையும் உலகத்தவர் போற்றுவதற்காகவும் அவ்விரு மரநிழல்களிலும் நான் சென்றமர்கிறேன். அவ்விரு மர நிழல்களிலும் அமர்ந்திருக்கும் என்னைப் போற்றுவோர் பெரும் பயனடைவர்?'' என்றருளினார்.

ஒரு சமயம் பிரமதேவர் ஈசனுக்குப் பெரியதொரு யாகம் செய்தார். தனது இரு மனைவியருள் சாவித்திரிதேவியை விட்டு விட்டு சரஸ்வதியை மட்டும் உடன் அழைத்துச் சென்றார். அதனால் கோபங்

கொண்ட சாவித்திரிதேவி யாகத்திற்கு வந்து விஷ்ணு முதலான தேவர்கள் ஜல உருவாகப் போகுமாறு சபித்தாள். உடனே அனைவரும் ஜலவுருவானார்கள்.

அதைக் கேள்விப்பட்ட இலக்குமி முதலானவர்கள் ஓடி வந்து பிரம்மதேவரைப் பிரார்த்தித்தனர். பிரம்ம தேவர் செய்வதறியாது பரமேஸ்வரனைத் தியானித்தார். பரமேஸ்வரன் அங்கு எழுந்தருளி; "நீங்கள் விநாயகரைத் துதிக்காமையினாலேயே இந்த விபரீதம் நேர்ந்தது. அதனால் மந்தார மரநிழலில் மகா விஷ்ணுவால் பூசிக்கப்பட்ட வக்கிர துண்ட விநாயகரைப் பூசியுங்கள்" என்று சொன்னார் அதன் படி அவர்கள் பூசித்தனர். ஆனால் அவர்களின் எண்ணம் ஈடேறவில்லை. அவ்வேளை; "வன்னி இலையால் அர்ச்சியுங்கள்" என்றொரு அசரீதி எழுந்தது. அதனால் தேவர்கள் மந்தார மரநிழலில் ஏகம்ப கணபதியைப் பிரதிஷ்டை செய்து வன்னியிலையால் அர்ச்சித்துச் சாபவிமோசனம் பெற்றனர்.

காலையில் வன்னிமரத்தைத் தரிசித்தால் சகல பாவங்களும் அகன்று அவர்கள் அந்தணர்களாகப் பிறப்பார்கள். அந்தணர்கள் தரிசித்தால் ஞானிகளாவர்; சத்திரியர் தரிசித்தால் சகல லோகங்களையும் வென்று புகழடைவர்; வைசிகர் தரிசித்தால் சகல செல்வங்களையும் பெறுவர்; "இதர வருணத்தினர் தரிசித்தால் மேலான கதியை அடைவார்கள்" என்று கிருத்சமர் கீர்த்திக்குச் சொன்னார்.

***பாலனுக்கருளிய விநாயகர்***

கீர்த்தியும் கிப் பிரப்பிரசாதனும் காசியில் வன்னி மரத்தின் கீழ் எழுந்தருளியிருக்கும் விநாயகரைத் தரிசிக்கச் சென்றனர். இருவரும் புனித தீர்த்தத்தில் நீராடித் தொழுது வரும் நாளில் மாசி மாதம் அமரபட்சச் சதுர்த்தி வந்தது. அன்று விடியற்காலை இருவரும் நீராடி வன்னிமரத்தடியில் நான்கெழுத்து மந்திரத்தை உச்சரித்து சந்திரோதயமானதும் விநாயகரை அறுகம் புல், வன்னிபத்திரத்தம், மந்தாரை மலர் கொண்டு அர்ச்சனை செய்தனர். அப்போது விநாயகர் ஐந்து முகங்களுடனும் பத்துக்கரங்களுடனும் சிங்க வாகனத்தில் தோன்றினார்; "கணநாதா, எனது மகனுக்கு எந்தக் காலத்திலும் துன்பம் வராமல் காத்தருளல் வேண்டும்" என்று வேண்டினாள் கீர்த்தி.

விநாயகர் மனம் மகிழ்ந்து அவனுக்கு வச்சிராயுதத்தைக் கொடுத்து; "பரசு பாணி என்ற சிறப்புப் பெயருடன், ஆயிரம் யாகங்கள் செய்து சிறப்பாக வாழ்ந்து என்னை வந்தடைவான்" என்று அருளினார். அதனால் மனம் மகிழ்ந்த கீர்த்தி தனது மகனை அழைத்துக் கொண்டு நாடு திரும்பினாள்.

உரிய வயது வந்ததும் கிப்பிரசாதனுக்கு முடிசூட்டி வைத்த பிரியவிரதன் காட்டுக்குத் தவஞ் செய்யப் புறப்பட்டான்.

இவ்வாறு சூரசேனருக்கு விநாயகரின் மகிமைகளையும் சங்கட சதுர்த்தி விரதத்தின் பயன்களைச் சொன்ன தேவேந்திரன்; "சூரசேனரே ஆகாய மார்க்கமாக நான் விமானத்தில் வந்த போது பாவி ஒருவனின் பார்வை பட்டு எனது விமானம் தரை இறங்கி விட்டது. சங்கட சதுர்த்திவிரதம் அனுஷ்டித்த ஒருவர், தனது ஒரு நாள்ப் பயணத்தைத் தந்தால் எனது விமானம் புறப்பட்டு விடும். இல்லாவிட்டால் நான் பெருந்துன்பங்களை அனுபவிக்க வேண்டிவரும்" என்றான்.

***சொர்க்கம் சேர்ந்த சூரசேனர்***

வீரர்கள் சங்கட சதுர்த்தி விரதம் மேற்கொண்டவனைத் தேடித்திரியும் போது இன்னொரு விமானம் தேவருலகில் இருந்து வந்து சண்டாளப் பெண்ணொருத்தியின் வீட்டின் முற்றத்தில் இறங்கியது. வீரர்கள் ஆச்சரியத்துடன் அங்கு சென்றனர்.

தேவகணங்கள் இறந்த சண்டாளஸ்திரியின் வீட்டுக்குச் சென்றனர். ஆச்சரியமடைந்த வீரர்கள் தேவகணங்களைப் பார்த்து; "புண்ணிய சீலர்களின் வீட்டுக்குத் தான் தேவர்கள் செல்வார். சண்டாளப் பெண்ணின் வீட்டுக்கு ஏன் செல்கிறீர்கள்?" எனக் கேட்டார்.

அதற்குத் தேவன் ஒருவன் சொன்னான்; "சித்திரன் என்ற அரசகுமாரனின் மனைவியான சுந்தரி என்பவளே இந்தச் சண்டாளப் பெண். அவள் முற்பிறப்பில் பல ஆண்களுடன் தொடர்புடையவளாக இருந்தாள். அதைக் கண்டித்த தனது கணவனை அவள் கொன்றாள். அதனால் அரசன் அவளுக்கு மரணதண்டனை அளித்தான். அவன் நரகத்தில் பலவித கஷ்டங்களை அனுபவித்த பின் சண்டாள ஸ்திரியாகப் பிறந்து உணவுக்காக அலைந்து திரிந்தாள். அன்று சதுர்த்திதினம் ஒரு வீட்டில் உள்ளவர்கள் தாம் சாப்பிட்ட மிகுதி உணவை வீதியில் கொண்டு வந்து போட்டு விட்டு உள்ளே சென்று; "கணபதி கணபதி" யென விநாயகரின் நாமத்தை உச்சரித்தனர். எச்சில் இலையில் உள்ள உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த சண்டாளப் பெண்ணும் அந்நேரம்; "கணபதி கணபதி" என்று

சொன்னாள். சதுர்த்தியன்று விநாயகரை நினைத்து அவரின் நாமத்தைச் சொன்னதால் அவளை விநாயகர் தமது லோகத்திற்கு அழைத்து வரச் சொன்னார்''.

அதன் பின் தேவர்கள் அவளை தமது விமானத்தில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டனர். அவளது பார்வை இந்திரனது விமானத்தில் பட்டது. உடனே அவ்விமானம் புறப்பட்டு தேவருலகை அடைந்தது.

தாம் கண்டதை வீரர்கள் வந்து கூறக் கேட்ட சூரசேன மகாராஜா தானும் விநாயகரை நினைத்து சங்கட சதுர்த்தி விரதத்தை அனுட்டிக்கத் தொடங்கினார். அதனால் சூரசேன மகாராஜாவை ஏற்றிச் செல்ல தேவர்கள் விமானத்துடன் வந்தனர். சூரசேன மகாராஜா தான் மட்டும் விமானத்தில் செல்ல விரும்பாது தனது சுற்றத்தவர்களையும் அழைத்துச் செல்ல விரும்பினார். அதற்குத் தேவகணங்கள் ஒத்துக் கொண்டன. அதனால் சூரசேன மகாராஜா தனது நாட்டு மக்கள் அனைவரையும் விமானத்தில் ஏறச் சொன்னார். எல்லோரும் ஏறிய பின்பும் விமானம் புறப்படவில்லை. அதனால் துயரமடைந்த சூரசேன மகாராஜா தேவகணங்களிடம்; ''இவ்விமானம் ஏன் புறப்படவில்லை'' என்று கேட்டார்.

''அரசே இவ்விமானத்தில் மகா பாவியான வணிகன் ஒருவன் இருக்கிறான். அவனது பார்வை பட்டமையால் தான் தேவேந்திரனது விமானம் இறங்கியது. அவனை இறக்கி விட்டால் விமானம் புறப்படும்'' என்றனர்.

சூரசேனர் அதற்கு விரும்பவில்லை; ''தேவர்களே இதற்குப் பரிகாரமேதும் இல்லையா? ஏன் அவன் பாவியானான்?'' என்று கேட்டார்.

அதற்குத் தேவகணங்கள்; ''அரசே கௌடத நாட்டிலே தவசீலர் என்றொரு அந்தணர் இருந்தார். அவரது மனைவி ஜானகி. அவர்களுக்குப் புதன் என்றொரு மகன் இருந்தான். அவனுக்குத் தவசீலர் சாவித்திரி என்ற பெண்ணைத் திருமணம் செய்து வைத்தார். அவன் சாவித்திரியை விட்டு விட்டு விலை மாதரின் வீடுகளுக்குச் சென்று வந்தான். காலகதியில் அவன் அங்கேயே தங்கி விட்டான். மகனுக்குப் புத்திமதி கூறச் சென்ற தந்தையையும் தாயையும் கொலை செய்து மறைவிடத்தில் புதைத்தான். அதை மனைவி கேட்டுவர அவளையும் கொன்று புதைத்து விட்டு தனது வீட்டிலுள்ள பொருட்களை எடுத்துக் கொண்டு அந்த வேசியையும் அழைத்துக் கொண்டு காட்டிற்குப் புறப்பட்டான். காட்டில் தாலவான முனிவரின் மனைவி மேல் இச்சை கொண்டு அவளது கையைப் பிடித்தான். அதனால் கோபங் கொண்ட முனிபத்தினி அவனைக் குஷ்டரோகியாகும்படி சபித்தாள். புதன் குஷ்டரோகியானதும் வேசியும் அவனை விட்டுப் பிரிந்தாள். தனிமையாகக் காடு முழுவதும் அலைந்து திரிந்த புதன் ஈற்றில் மரணமானான். அவன் செய்த பாவங்கள் தீராமையால் இப்பொழுதும் குஷ்டரோகியாகப் பிறந்து துன்பப்படுகிறான்'' என்று சொல்லின.

அதனால் கவலைப்பட்ட சூரசேனர் தேவகணங்களை வணங்கி; ''தேவ புரிசர்களே அவன் பாவியானாலும் தற்பொழுது விநாயகரின் தேவகணங்களைச் சந்திக்கும் பேறு பெற்றிருக்கிறான். எனவே அவனது பழிகள் யாவும் நீங்கி விடும். அதனால் அவனை இரட்சித்து அவனது நோயைத் தீருங்கள்'' என்று இரந்தார்.

விநாயக பக்தரான சூரசேனரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய விரும்பிய தேவகணங்கள் அவனுக்கு அனுக்கிரகம் செய்ய, அவனது நோய் நீங்கியது. சூரசேனர் தனது நாட்டு மக்களுடன் விமானத்தில் சென்று விநாயகரை அடைந்தார்.

### இராமனுக்கு அருள் கொடுத்த விநாயகர்

கிருத்த வீரியன் அரசாட்சியைத் தனது மகனை காத்தவீரியனிடம் ஒப்படைத்து விட்டு தவஞ் செய்வதற்காகக் காட்டுக்குச் சென்றான். ஒரு நாள் காத்தவீரியன் வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்ற போது ஜமதாக்கினி என்ற முனிவரின் ஆச்சிரமத்தைக் கண்டு, முனிவரை வணங்குவதற்காக அங்கு சென்றான்.

மதிய வேளையானதும் முனிவர் அரசனுக்கும் ஆயிரக் கணக்கான வீரர்களுக்கும் வேண்டியளவு சுவையான உணவுகளைக் கொடுத்தார். அதனால் வியப்படைந்த அரசன்; ''சுவாமி இவ் ஆச்சிரமத்தில் தன்னந்தனியாக இருக்கும் தாங்கள் இவ்வளவு பேருக்கும் எப்படி உணவளித்தீர்கள்'' என்று கேட்டான்.

அதற்கு முனிவர்; ''அரசே தேவருலகில் இருந்து வந்த காமதேனு என்ற பசு என்னிடமுள்ளது. அது சர்வசக்தியுள்ளது. அதன் மூலம் எதையும் பெற்றுக் கொள்ளலாம்'' என்றார்.

அதைக் கேட்ட அரசன் காமதேனுவைத் தனக்குத் தரும்படி கேட்டான். முனிவர் மறுத்தார். அதனால் கோபம் கொண்ட காத்தவீரியன் முனிவருடன் போர் தொடுத்தான். கோபமடைந்த காமதேனு தனது உடலைச் சிலிர்த்தது. அதிலிருந்து ஆயிரக்கணக்கான வீரர்கள் தோன்றி காத்தவீரியனின்

படைவீரர்களைக் கொன்று குவித்தனர். காத்த வீரியன் தப்பியோடினான். எனினும் அவனின் மனதில் இருந்த காமதேனுவின் ஆசை குறையவில்லை.

காமதேனுவைக் கைப்பற்றுவதற்காக ஒரு நாள் காத்தவீரியன் முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்தான். அப்பொழுது முனிவர் தவத்தில் இருந்தார். காத்தவீரியன் அவரது தலையை வெட்டினான். அது நிலத்தில் விழாது அந்தரத்தில் நின்றது. அதைத் தடுக்க ஓடி வந்த முனிபத்தினி மீது காத்தவீரியன் இருபத்தொரு அம்புகளை விட்டுப் படுகாயப்படுத்தினான்.

அந்த நேரம் நைமிசாரண்யம் சென்றிருந்த முனிவரின் புதல்வன் இராமன் அங்கு வந்து தந்தையினதும் தாயினதும் நிலையைக் கண்டு கொதித்தெழுந்தான். மகனின் வருகைக்காகக் உயிரை வைத்திருந்தரேணுகா காத்தவீரியனின் கொடிய செயலைச் சொல்லி; ''என் அன்பு மகனே உன் தந்தையைக் கொன்று என்மீது இருபத்தொரு அம்புகளை எய்து பழிதீர்த்த காத்த வீரியனின் இருபத்தொரு பரம்பரையை நீ அழித்தல் வேண்டும்'' என்று சொல்லி உயிரை விட்டாள்.

பெற்றோரின் ஈமக்கிரிகைகளைச் செய்த இராமன் பரமசிவனை நினைத்துத் தொழுதான். பரமசிவன் அவனின் முன்தோன்றி; ''இராமா நீ ஆதிபரம் பொருளான விநாயகனைத் தொழுது உனது சபதத்தை நிறைவேற்றுவாயாக'' என்று கூறி அவனது காதில் சடாச்ஷர மந்திரத்தை உபதேசித்தார். இராமன் மயூரம் என்ற இடத்தை அடைந்து விநாயகரை மனதில் தியானித்து அவரைக் குறித்துக் கடுந் தவத்தில் ஈடுபட்டான்.

அதனால் மகிழ்ந்த விநாயகர் அவன் முன் தோன்றி அவனுக்குத் தனது ஆயுதமான பரசுவைக் கொடுத்தார். அன்று முதல் இராமன், பரசுராமன் என அழைக்கப்பட்டான். பரசுராமன் பரசுமூலம் காத்தவீரியனின் இருபத்தொரு பரம்பரையினரையும், அரசர்களையும் அழித்தான். அவர்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி அந்தணர்களுக்கு அளித்தான்.

### *தலையில் குட்டிய இராவணன்*

இராவணன், பரமேஸ்வரனை நினைத்துக் கடுந் தவஞ் செய்தான். அதனால் மகிழ்ந்த பரமேஸ்வரன் அவனின் முன் தோன்றினார். அவரைக் கண்டு மகிழ்ந்த இராவணன்; ''பரமேஸ்வரா எக்காரணங்களாலும் இலங்காபுரி அழியக் கூடாது. அதற்கான வரத்தை எனக்குத் தந்தருளல் வேண்டும்'' என்று பிரார்த்தித்தான்.

பரமேஸ்வரர் சிவலிங்கம் ஒன்றைக் கொடுத்து; ''இதை இலங்காபுரியில் பிரதிஷ்டை செய்து வழிபட்டாயேயானால் இலங்காபுரி அழியாது? என்றார்.

அதை உணர்ந்த தேவர்கள் இலங்காபுரி அழியாவிட்டால் இராவணன் அழியமாட்டானென உணர்ந்து தேசவேந்திரனிடம் முறையிட, அவன் விநாயகரிடம் சென்று தனது எண்ணத்தைக் கூறினான்.

விநாயகர் வருணனை அழைத்து இராவணனுக்கு நீர் உபாதை உண்டாக்குமாறு கூறிவிட்டு இராவணன் சிவலிங்கத்துடன் வரும் பாதையில் சிறுவனாக உருவெடுத்து நின்றார். சிவலிங்கத்துடன் வந்த இராவணனுக்கு நீர் உபாதை ஏற்பட்டது. சிவலிங்கத்தைக் கொடுக்கும் போது பரமேஸ்வரன்; '' நீ எக்காரணங் கொண்டும் இச் சிவலிங்கத்தை நிலத்தில் வைக்கக் கூடாது'' என்று கூறியிருந்தார். அதனால் அவதிப்பட்ட இராவணன் வழியில் சிறுவன் ஒருவன் நிற்பதைக் கண்டு அவனருகே வந்தான்; ''தம்பீ இச் சிவலிங்கத்தைச் சிறிது நேரம் வைத்திரு. எக்காரணங் கொண்டும் நிலத்தில் வைத்து விடாதே என்று இராவணன் கூறினான்.

''பெரியவரே நான் சிறுவன். பாரம் தூக்க மாட்டேன். பாரமாக இருந்தால் மூன்று முறை தங்களை அழைப்பேன் வராவிட்டால் நிலத்தில் வைத்து விடுவேன்'' என்றான்.

அதற்கு உடன்பட்ட இராவணன் சிவலிங்கத்தைச் சிறுவனிடம் கொடுத்து விட்டு சென்றான். சிறிது நேரத்தில் விநாயகர் அவனை மூன்று முறை அழைத்தார். அவன் வராமையால் சிவலிங்கத்தை நிலத்தில் வைத்து விட்டார். இராவணன் பதைபதைப்புடன் ஓடி வந்து நிலத்தில் இருந்த லிங்கத்தைத் தூக்கிப் பார்த்தான். தூக்க முடியவில்லை. அதனால் கோபம் கொண்ட இராவணன் சிறுவனின் தலையில் ஓங்கிக் குட்டினான். மறுகணம் சிறுவனைக் காணவில்லை அவ்விடத்தில் விநாயகர் தோன்றினார். இராவணன் பயத்துடன் நடு நடுங்கியபடி விநாயகரைத் தனது தலையில் குட்டி வணங்கினான்; ''இராவணேஸ்வரா, எனது சன்னிதானத்தில் உன்னைப் போலக் குட்டிக் கும்பிடுவோரின் இடர்களை நான் களைவேன்'' என்று விநாயகர் அருளி மறைந்தார்.

### *காவிரியைப் பெருக்கெடுத்தோடச் செய்த விநாயகர்*

சூரபத்மனின் ஆட்சியின் போது அவனுக்குப் பயந்து இந்திரனும் இந்திராணியும் சீர்காழியில் வந்து மறைந்து வாழ்ந்தனர். இந்திரன் ஒரு பூந்தோட்டம் அமைத்து அதில் பூப்பறித்துப் பகவானுக்குப் பூசை செய்து வந்தான். சூரபதுமனின் கட்டளைக்குப் பயந்த வருணபகவான் எங்கோ மறைந்திருந்ததால் மேகங்கள் மழையைப் பொழியாது விட்டு விட்டன. அதனால் இந்திரன் மனம் வருந்திக் கொண்டிருந்தான். அப்பொழுது அந்த வழியால் நாரதர் வந்தார். அவரைக் கண்டு மகிழ்ந்த இந்திரன் தனக்குள்ள குறையை அவருக்குக் கூறிக் கவலைப்பட்டான்.

அதைக் கேட்ட நாரதர்; ''தேவேந்திரா கைலாயநாதர் காவேரிநதியை அகத்திய முனிவருக்குக் கொடுத்துள்ளார். அந்தப் புனித நீரை அகத்தியர் தனது கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு பொதியமலைக்கு வருகிறார். நீ விநாயகரை வணங்கினால் உனது குறை தீரும்'' என்றார்.

தேவேந்திரன் விநாயகரைப் பிரார்த்தித்தான். விநாயகர் அவன் முன் தோன்றி; ''உனது குறையைத் தீர்ப்பேன்'' என்று அருளி விட்டுக் காகத்தின் உருவம் எடுத்துக் கொண்டு பொதிய மலைச்சாரலுக்குப் பறந்து சென்றார். அகத்திய முனிவர் கமண்டலத்தை வைத்து விட்டு நித்திய கர்மானுஷ்டானங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். காகத்தின் வடிவில் வந்த விநாயகர் கமண்டலத்தைத் சரித்து விட்டுப் பறந்து சென்று அவருக்கருகில் ஒரு சிறுவனாக நின்றார்.

கமண்டலத்துள் அடங்கியிருந்த காவேரி பொங்கிப் பூரித்து நுரை தள்ளியபடி பெருகிப் பாய்ந்தது. கோபத்துடன் சிறுவனைக் குட்டுவதற்காக அகத்தியர் ஓடிச் சென்றார். விநாயகர் ஓட அகத்தியர் அவரைப் பின் தொடர்ந்து ஓடிச் சென்றார் வெகுதூரம் ஓடிய அகத்தியர் களைப்புற்றதும் விநாயகர் தனது உருவத்தை அகத்தியருக்குக் காட்டினார். அகத்தியர் மனம் மகிழ்ந்து; ''எம்பெருமானே நான் பரமேஸ்வரனை அர்ச்சித்து அபிஷேகம் செய்யக் காவிரி நீரை மொண்டு தரல் வேண்டும்'' என்றார்.

விநாயகர் தனது இருகைகளாலும் நீரை அள்ளி அகத்தியரின் கமண்டலத்தில் விட்டார். இந்திரன் மனம் மகிழ்ந்து விநாயகரைத் தொழுதான்.

### *சிந்தாமணி விநாயகர்*

அபிசித் என்றொரு அரசன் இருந்தான். அவனது மனைவி குணவதி நல்ல அழகி. எனினும் அவர்களுக்குப் பிள்ளைப் பாக்கியம் கிடைக்கவில்லை. அதனால் மன்னன் மனைவியையும் அழைத்துக் கொண்டு காட்டுக்குச் சென்றான். காட்டில் வைசம்பாயனர் என்ற முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்று அவரை வணங்கித் தனது குறையைச் சொன்னான். முனிவர் கண்களை மூடி ஞான சிருஷ்டியில் இருந்து அரசனுக்குக் குறையுள்ளதை அறிந்தார். எனினும்; ''உனக்குப் பிள்ளை பிறக்கும்'' என்று ஆசீர்வதித்தார்.

மன்னன் மனம் மகிழ்ந்தான். முனிவர் அவனுக்குப் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து; ''அரசே சமுத்திர நதி சங்கமமாகும் இடத்திற்கு மேற்குத் திசையில் ஒரு வனம் இருக்கிறது. அங்கு சென்று பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து ஹோமங்களை நான்கு மாதங்களுக்குச் செய்து விட்டு உனது நாட்டிற்குச் செல். உனக்குப் புத்திரன் பிறப்பான்'' என்றார்.

அவ்விடத்தில் பிரமதேவன் தவஞ் செய்து கொண்டிருந்தார். அதைக் கண்ட அரசனும் அவனுக்கு அருகிற் சென்று தவஞ் செய்தான். சரஸ்வதியும் குணவதியும் அவர்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தனர். ஒரு நாள் சரஸ்வதி காம அவஸ்தையுடன் பிரமதேவனின் மடியில் படுத்தாள். அதனால் தவங்கலைந்து எழுந்த பிரமதேவனுக்கு விரததாபம் ஏற்பட்டது. சரஸ்வதியுடன் கூடிக்களிக்க விரும்பினான். ஆனால் சரஸ்வதி சம்மதிக்கவில்லை அதனால் அவரது தவத்திற்கு இடையூறு ஏற்படுமெனப் பயந்தாள்.

பிரமதேவர் அவளை வற்புறுத்த அவள் அருகில் இந்திரன் முதலான தேவர்கள் தவஞ் செய்யுமிடத்திற்குச் சென்றாள். பிரமதேவர் சற்று யோசித்துப் பார்த்தார். அற்ப சந்தோஷத்திற்காக தனது தவத்தைக் கலைக்க அவர் விரும்பவில்லை. எனினும் காமத்தால் அவதிப்பட்ட அவரது உடலில் இருந்து சுக்கிலம் வெளிப்பட்டு விட்டது. அதனால் பிரமதேவன் தடாகத்திற்குச் சென்று நீராடி விட்டு வந்து தவத்திலீடுபட்டார்.

அன்று பௌர்ணமி தினம். குணவதி அக்குளத்தில் நீராடச் சென்றாள். அப்பொழுது பிரமதேவரின் சுக்கிலம் அவளது உடலுட் சென்றது. நான்கு மாத முடிவில் அபிசித் மன்னனும் குணவதியும்

நாட்டிற்குத் திரும்பினர். சில மாதங்களின் பின் குணவதி அழகான ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அரசன் அக்குழந்தைக்குக் கணன் என்று பெயர் வைத்தான்.

குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. ஒரு நாள் கீழ்த்திசையில் உதயமான சந்திரனை கணன் பிடித்து விட்டான். இன்னொரு நாள் மதங் கொண்ட யானையை அடக்கினான். மிகுந்த பலசாலியான அவன் தந்தையின் அனுமதியோடு காட்டுக்குச் சென்று கைலை நாதரை நோக்கி ஆயிரம் வருடங்கள் தவஞ் செய்தான். அவனது உடலிலிருந்து வெளிப்பட்ட யோகாக்கினி கைலாயம் வரை சென்றது. அதனால் பரமேஸ்வரன் பார்வதியோடு தோன்றி அவனுக்கு அளவில்லாத சக்திகளையும் நீண்ட ஆயுளையும் கொடுத்தார்.

கணன் பரமேஸ்வரன் கொடுத்த வரத்தின் மூலம் மூவுலகையும் தன்வசப்படுத்தினான். இந்திரன் முதலான தேவர்கள் அவனுக்கு அடிமைகளாகினர். இப்படியிருக்கும் நாளில் வேட்டையாடுவதற்காக வீரர்களுடன் கணன் காட்டுக்குச் சென்றான். அங்கு கபில முனிவரின் ஆச்சிரமம் இருந்தது. கபில முனிவர் அவனை வரவேற்று உபசரித்தார். பின்பு தனது மார்பில் அணிந்திருந்த சிந்தாமணியை எடுத்து ஓர் ஆசனத்தில் வைத்து அதற்குப் பூசை செய்தார். அக்கணம் அங்கு ஓர் அழகிய நகரம் உருவானது. அரசனுக்கும் வீரர்களுக்கும் நல்ல சுவையான உணவுகள் வந்து சேர்ந்தன அப்படி சுவையான உணவை அவன் ஒரு போதும் உண்டதில்லை. அதனால் அவன் முனிவரிடம் அச்சிந்தாமணியைக் கேட்டான். முனிவர் மறுத்தார். அதனால் கோபம் கொண்ட கணன் அவருடன் போரிட்டுப் பலாத்காரமாகச் சிந்தாமணியை அவரிடமிருந்து அபகரித்துச் சென்றான். அதனால் கோபம் கொண்ட முனிவர்; ''துட்டனே நீதியில்லாது எனது சிந்தாமணியைப் பறித்த உன்னை நான் பூசிக்கும் விநாயகப் பெருமான் அழித்தொழிப் பார்'' என்று சாபமிட்டார். பின் விநாயகப் பெருமானை நினைத்து தவமிருந்தார். அப்போது விநாயகப் பெருமான் தோன்றி; ''பக்தனே கணன் கவர்ந்து சென்ற சிந்தாமணியை நான் உனக்கு மீட்டுத் தருவேன்'' என்று வாக்களித்து மறைந்தார்.

பின் விநாயகப் பெருமான் கணனோடு யுத்தம் செய்யப் புறப்பட்டார். அப்போது சித்திதேவியார்; ''சுவாமி, இவனை அழிக்க நீங்கள் செல்ல வேண்டுமா..? நான் சென்று வருகிறேன்'' என்றார். விநாயகர் அதற்குச் சம்மதம் தெரிவிக்க சித்திதேவியார் யுத்தத்திற்குப் புறப்பட்டார்.

சித்திதேவியார் பல்லாயிரம் போர் வீரரை உருவாக்கிக் கணனுடன் உக்கிரமாகப் போரிட்டாள். கணன் ஏவிய ஆயுதமொன்று விநாயகரின் அருகில் சென்று விழக்கோபமுற்ற விநாயகர் தனது மழு ஆயுதத்தை எடுத்து விட்டார். அது கணனின் சிரசை அறுத்தது. அதைக் கண்ட கிரந்தன் என்னும் அமைச்சன் அபிசித் ராஜனிடஞ் சென்று நடந்த சம்பவத்தைக் கூறி; ''அரசே தங்கள் புத்திரன் கவர்ந்து வந்த சிந்தாமணியைக் கொண்டு சென்று கபில முனிவரிடம் கொடுக்காவிட்டால் தங்கள் வம்சம் அழிந்து விடும். தயவு செய்து கொண்டு சென்று கொடுங்கள்'' என்று கூறினான். அதைக் கேட்ட அபிசித்ராஜன் சிந்தாமணியைக் கொண்டு சென்று கபிலமுனிவரிடம் கொடுத்து; ''எனது மகனால் உங்களுக்கேற்பட்ட துன்பத்தை மன்னியுங்கள்'' என்று இரந்தான்.

அப்பொழுது கபில முனிவர் விநாயகரைப் பிரார்த்தித்தார். விநாயகர் சிங்க வாகனத்தில் எழுந்தருளினார்; ''சர்வேஸ்வரா, இச்சிந்தாமணி இந்திரனால் எனக்கு அளிக்கப்பட்டது. அதை நான் தங்களுக்குத் தருகிறேன். அதைப் பெற்றுத் தாங்கள் தங்கள் மார்பில் அணிய வேண்டும்'' என்று வேண்டினார். விநாயகர் அதைப் பெற்றுத் தனது மார்பில் அணிந்து கொண்டார்; ''இன்று முதல் நான் தங்களைச் சிந்தாமணி விநாயகர் என அழைக்க அனுமதி தரவேண்டும்'' என்று கபிலர் கேட்டார். அதற்கு விநாயகர் சம்மதித்தார். கபில முனிவரின் ஆச்சிரமத்திற்கு விநாயகர் மலர்ந்த முகத்துடன் தோன்றியதால் கபில விநாயகர் என்றும் சுமுக விநாயகர் என்றும் அழைக்கப் பெற்றார். இம்மூன்று நாமங்களையும் உச்சரிப்போர் சகல இடையூறுகளும் நீங்கி சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்வர்.

### *சிந்தூரனை அழித்த விநாயகர்*

பிரம்ம தேவர் கொட்டாவி விட்டார். அக் கொட்டாவியில் இருந்து ஓர் அசுரன் தோன்றினான். அவனைக் கண்ட பிரம்ம தேவர்; ''நீ யார்?'' என்று கேட்டார். அதற்கு அவன்; ''என்னைத் தெரியவில்லையா தந்தையே? நான் உங்கள் கொட்டாவியில் இருந்து தோன்றியவன்'' என்றான்.

அதைக் கேட்டு மகிழ்ந்த பிரம்மதேவர் அவன் சிந்தூர நிறமாக இருப்பதைக் கண்டு; ''நீ சிந்தூர நிறமுள்ளதால் சிந்தூரன் என அழைக்கப்படுவாய். எனது புத்திரனான உனக்குச் சகல சௌபாக்கியங்களையும் தருகிறேன். நீ யாரைத் தழுவுகிறாயோ அவர் உடனேயே எரிந்து சாம்பராவர்'' என்றார்.

அதைக் கேட்ட சிந்தூரன் அவரது வரத்தைப் பரீட்சிக்க எண்ணி அவரைத் தழுவச் சென்றான். அதற்குப் பயந்து ஓடிய பிரம்ம தேவர் நாராயணனிடஞ் சென்றார். சிந்தூரன் பிரம்ம தேவரைக்

கலைத்துக் கொண்டு நாராயணனிடம் வந்தான். அவனைக் கண்டு பயந்து நடுங்கிய நாராயணன்; ‘‘சிந்தூரா நாமிருவரும் எளியவர்கள் பரமேஸ்வரன் தான் பல சாலி. அவரிடம் உனது திறமையைக் காட்டு’’ என்று கூறினார். அதைக் கேட்ட சிந்தூரன் கைலாயத்திற்குச் சென்றான். சிந்தூரன் சென்ற போது பரமேஸ்வரன் யோக நிலையில் இருந்தார்.

அங்கிருந்த பார்வதியைக் கண்ட சிந்தூரன் அவளைத் தழுவச் சென்றான். பார்வதி அலறியபடி ஓடிச் சென்று பரமேஸ்வரனைத் தழுவ அவர் யோக நிலை கலைந்து எழுந்து சூலாயுதத்தை எடுத்தார். சிந்தூரன் பரமசிவனைத் தழுவச் சென்றான். அதைக் கண்ட ஆதிபரம் பொருளான விநாயகர் ஒரு பிராமணனாக வடிவமெடுத்து அவர்கள் இருவருக்கிடையேயும் தோன்றி அவர்களை விலக்கினார்; ‘‘நீ வீரன், ஆயுதத்துடன் மோதுவதை விட்டு விட்டு தழுவச் செல்கிறாயே. ஆயுதத்தை எடுத்துப் போராடு’’ என்றார்.

அதற்குச் சம்மதித்த சிந்தூரன் ஆயுதங்களை எடுத்து சிவனுடன் போரிட ஆயத்தம் செய்தான். விநாயகர் தனது பரசை எடுத்து நிறுத்தி விட்டு அவர்கள் போர் செய்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். சிவனும் சிந்தூரனும் மிகவும் உக்கிரமாகப் போர் செய்தனர். போர் முடிவுக்கு வராததால் கோபங் கொண்ட சிந்தூரன் ஈஸ்வரனைத் தழுவ முயற்சித்தான். அப்போது பரசு அவனைத் தாக்கியது. அதனால் சிந்தூரன் போர் செய்வதை விட்டு விட்டு பூமிக்குத் திரும்பினான்.

அதைக் கண்ட பார்வதிதேவி அந்த அந்தணரின் அருகில் வந்து; ‘‘அந்தணரே தாங்கள் யார்?’’ என்று கேட்டாள்.

‘‘தேவி உன்னைப் பிடிக்க வந்த சிந்தூரனை அழிக்க நானே உனது வயிற்றில் வந்து அவதரிப்பேன்’’ என்று கூறி அனுக்கிரகம் செய்து மறைந்தார் விநாயகர்.

அதன்பின் பூவுலகம் திரும்பிய சிந்தூரன் மக்களைத் துன்புறுத்தி வதம் செய்தான். பின் தேவருலகம் சென்று தேவர்களை வருத்தினான். அதனால் மனக்கவலையடைந்த தேவர்கள் பிரம்மனிடம் முறையிட பிரமதேவன் சிவனிடஞ் சென்று முறையிட்டார். தான் அவதரிக்க வேண்டிய நேரம் வந்து விட்தென உணர்ந்த விநாயகர் பார்வதிதேவியின் கர்ப்பத்தில் உருவானார். அதை அறிந்த பரமேஸ்வரன் மிகவும் மகிழ்ந்து பூவுலகில் பரியலி என்னும் இடத்தில் இரத்தின ஒருத்தியான இரத்தின மண்டபம் அமைத்து பார்வதி தேவியையும் தோழியரையும் அங்கே இருக்க வைத்தார். ஒரு நாள் அங்கு கஜமுகாசுரன் வந்தான்.

கஜமுகாசுரன் என்பவன் முற்பிறப்பில் மயேச்சுதன் என்ற அரசனாகப் பிறந்திருந்தான். அவன் பெரும் சிவபக்தன் சிவனைத் தொழுது பல வரங்களைப் பெற்றுச் சிறப்போடு அரசாண்டு வந்தான். ஒரு நாள் அவனது அரசசபைக்குப் பிரகஸ்பதி வந்தார். அவரை அன்புடன் வரவேற்று பெரும் உபசாரங்கள் செய்தான். அதனால் மகிழ்ந்த பிரகஸ்பதி; ‘‘என்னை வணங்கும் அனைவரும் உன்னையும் வணங்குவர்’’ என்று கூறினார்.

அதனால் மிக்க மகிழ்ச்சியடைந்த மயேச்சுதன்; ‘‘தங்கள் வாக்கு எப்போது பலிக்கும்’’ என்று கேட்டான்.

‘‘நீ என்று யானையிடத்துப் பிறக்கிறாயோ அன்றிலிருந்து அப்பலன் உனக்குக் கிடைக்கும்’’ என்றார்.

ஒரு நாள் அவன் தேசசஞ்சாரம் செய்யும் பொருட்டு சேனைகளுடன் புறப்பட்டுச் சென்றான். வழியில் நாரதமாமுனிவர் வந்தார். மயேச்சதன் அவரைக் காணாதவன் போலச் சென்றான். அதனால் கோபங் கொண்ட நாரதர் அவனை; ‘‘யானையாகப் பிறக்கக் கடவன்’’ எனச் சாபமிட்டார். அதனால் அவன் பரியலி என்ற வனத்தில் யானைக் கூட்டங்களிடையே கஜமுகாசுரனாகப் பிறந்தான். சிவபெருமானின் தரிசனம் கிடைத்தால் பிரகஸ்பதியின் வாக்கு நிறைவேறும் என்ற எண்ணத்தில் அங்கு வந்தான். வரும் போது இரத்தின மண்டபத்தில் அவனது உடல் முட்டியதால் அப்பகுதி உடைந்து விட்டது. அதனால் பயந்த பார்வதிதேவி, ஓடிச் சென்று யோகநிலையில் இருந்த பரமசிவனின் மீது விழுந்து கஜமுகாசுரனின் அட்டகாசத்தைத் தெரிவித்தாள். அதனால் கோபங் கொண்ட பரமசிவன் தனது சூலாயுதத்தை ஏவினார். அது அவனின் கழுத்தைத் துண்டித்தது. அப்போது கஜமுகாசுரன் ‘‘சிவாயநம’’ என்று கூறினான்.

அதைக் கேட்ட பரமசிவன் கஜமுகாசுரன் தனது பரமபக்தன் என்பதை உணர்ந்து அவனது நிலையைக் கண்டிரங்கி; ‘‘பக்தனே உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேள்’’ என்றார்.

‘‘ தங்கள் பாதசேவையைத் தவிர எனக்கு வேறு வரம் தேவையில்லை’’ என்றான் கஜமுகாசுரன். அதனால் மகிழ்ந்த பரமேஸ்வரன் அவனது தோலை தனக்கு ஆடையாக்கி விட்டு அவனது தலையை எடுத்து வைத்தார்.

இச்சமயம் பார்வதிதேவி தன்னை அழிக்கவல்ல மைந்தனைக் கருவில் சுமக்கிறாள். என்பதை அறிந்த சிந்தூரன் வாயுரூபம் கொண்டு பரியலி வனத்தில் இரத்தின மண்டபத்தில் உறக்க நிலையில் இருந்த பார்வதியின் வயிற்றுள் நுளைந்து, அக்கருவின் தலையைத் துண்டித்து வந்து நர்மதை நதியில் வீசி விட்டுச் சென்றான்.

பார்வதி தலையில்லாத ஓர் ஆண்குழந்தையைப் பிரசவித்தாள். பிரமனும் இந்திரனும் ஈசனும் தேவர்களும் மிகவும் வருந்தினார்கள். இத் தலையில்லாக் குழந்தை எப்படிச் சிந்தூரனை அழிக்கும் என்று கலங்கினர். இதையுணர்ந்த ஆதிபரம்பொருளான விநாயகர்; ‘‘தேவர்களே அஞ்சாதீர்கள். பிரகஸ்பதியின் அருளைப் பெற்ற மயேச்சுதன் என்ற மன்னன் நாரதரின் சாபத்தால் கஜமுகாசுரனாகிப் பரமேஸ்வரனால் தலை துண்டிக்கப்பட்டான். அவனது தலை பரமேஸ்வரனிடம் உள்ளது. அதைக் கொண்டு வந்து பொருத்துங்கள்’’ என்றார்.

பரமேஸ்வரன் கஜமுகாசுரனின் தலையைக் கொண்டு வந்து குழந்தைக்குப் பொருத்தினார். வேழமுகத்துடன் குழந்தை எழுந்து நடந்தது. இந்திரன் முதலான தேவர்கள் மகிழ்வுடன் பூமாரி சொரிந்து விநாயகரை வணங்கினர்.

சிந்தூரனின் அரசசபைக்கு வந்த நாரதர் பார்வதிதேவியின் வயிற்றிலிருந்து பிறந்த தலையில்லாத முண்டத்திற்குச் சிவன் யானைத் தலையைப் பொருந்திய வரலாற்றைச் சொல்லி , அவனை அழிக்கா விட்டால் உன்னைக் கொன்று விடுவான் என்று கூறினார். அதைக் கேட்ட சிந்தூரன் போர்க் கோலங் கொண்டு விநாயகப் பெருமான் இருக்குமிடத்திற்குச் சென்றான்.

அவனைக் கண்ட விநாயகர் விசுவரூபமெடுத்துத் தும்பிக்கையால் அவனைத் தூக்கி கால்களின் கீழ்ப் போட்டு நசித்து விட்டு அவனைத் தூக்கித் தன்னுடலெங்கும் பூசினார். இதைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து, விநாயகரின் விஸ்வரூபத்தைக் கண்டு கழித்து வணங்கினர்.

***மயில்வாகனர்***

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஒரு சமயம் போர் நடந்த போது அசுரர்கள் தேவர்களைக் கடுமையாகத் தாக்கினார்கள். அசுரரை வெல்ல முடியாதென உணர்ந்த தேவர்கள் வேதசாஸ்திரங்களை அஸ்திரங்களாக்கி அசுரர்களின் மீது ஏவினார்கள். அதனால் தோல்வியடைந்த அசுரர் ஓடி ஒளித்தனர். தோற்று ஓடிய கங்காசுரன் என்ற அசுரன் சங்காசுரன் என்ற அசுரஅரசனிடம் சென்று தேவர்கள் தேவசாஸ்திரங்களை வைத்திருக்கும் வரை தம்மால் தேவரை வெல்ல முடியாது என்று சொன்னான்.

அதற்குச் சங்காசுரன்; ‘‘தம்பி வேதசாஸ்திரங்கள் பிரமதேவரிடம் இருக்கின்றன. நீ மாய உருக் கொண்டு சென்று அவற்றைக் கைப்பற்றி வா’’ என்றான்.

கங்காசுரன் மாய உருக் கொண்டு சென்று வேதசாஸ்திரங்களைக் கைப்பற்றி வந்து கடலுள் மறைத்து வைத்து விட்டு அதற்குப் பலத்த காவல் வைத்தான்.

வேதசாஸ்திரங்கள் தொலைந்து விட்டதால் தம்மை அசுரர்கள் அழித்து விடுவார்கள் என்று அஞ்சிய தேவர்கள் தமது பயத்தைப் பிரம்மதேவரிடம் சொல்ல, பிரம்மன் தேவர்களை அழைத்துக் கொண்டு மகாவிஷ்ணுவிடம் சென்றார். மகா விஷ்ணு நிஷ்டையில் இருந்தார். அதனால் அவர்கள் பரமேஸ்வரனிடம் சென்று முறையிட்டனர்.

அதைக் கேட்ட பரமேஸ்வரன்; ‘‘நான்முகா, விரைவில் மகா விஷ்ணு நிஷ்டையில் இருந்து எழுந்து சங்காசுரனைச் சம்கரிப்பார்’’ என்றார்.

‘‘பரமேஸ்வரா! மகா விஷ்ணுவால் சங்காசுரனைச் சம்கரிக்க முடியாது. அவன் மகா விஷ்ணுவை விட நூறு மடங்கு பலம் மிக்கவன். அவனை அழிக்க ஆதிபரம் பொருளான விநாயகரால் மட்டுமே முடியும்’’ என்றார் பிரம்மதேவன்.

இருவரும் விநாயகரை நினைத்து ஏகாஷரமந்திரத்தை உச்சரித்தனர். அப்போது விநாயகர் அவர்கள் முன்பு தோன்றினார்; ‘‘நீங்கள் கமலாசுரன் வேதங்களை மறைத்து வைத்து விட்டான் என்று கவலைப்படாதீர்கள். எனது மூன்று நேத்திரங்களும் மூன்று வேதங்களாகும்’’ என்று அருளினார். சிவனும் நான்முகனும் மகிழ்ந்து தத்தம் லோகங்களுக்குச் சென்றனர்.

விநாயகப் பெருமான் அந்தண வேடங் கொண்டு ஆயிரக்கணக்கான சீடர்களோடு பூவுலகில் உள்ள சுந்தர ஆச்சிரமத்திற்கு வந்து அங்குள்ள முனிவர்களுக்கு வேதங்களைக் கற்பித்தார். இதை அறிந்த

சங்காசுரன் அவ் அந்தணரை அழிப்பதற்காகச் சுந்தர ஆச்சிரமத்திற்கு வந்தான். அதை முன்பே உணர்ந்த விநாயகர் ஆயிரக்கணக்கான போர் வீரர்களை உருவாக்கி வைத்திருந்தார்.

கமலாசுரனது படைகள் விநாயகரது படையுடன் மோதின. கமலாசுரன் நாகஸ்திரத்தை விட விநாயகரின் வீரர்கள் மயங்கி விழுந்தனர். உடனே விநாயகர் சக்கராயுதத்தை விட மயங்கிய படைவீரர்கள் மயக்கம் தெளிந்தனர். அதைக் கண்ட கமலாசுரன் சக்கராயுதத்தை விட்டான். அது தனது ஆயிரம் முனைகளிலிருந்தும் தீயைக் கக்கியபடி வந்தது. வீரர்கள் உஷ்ணம் தாங்க முடியாது அல்லற்பட்டனர். விநாயகர் புன்னகைத்து விட்டுத் தனது சக்கரத்தை நீட்ட அத்தீ அதனுள் சங்கமமானது. கமலாசுரன் வருணாஷ்திரத்தை ஏவினான். எங்கும் ஒரே வெள்ளம். விநாயகர் மேகங்களை அழைத்தார். அவை வெள்ள நீரை உறிஞ்சிக் குடித்தன. அப்பொழுது சூரியன் மறைய கமலாசுரன் தனது இருப்பிடம் திரும்பினான்.

ஆச்சிரமத்தில் உள்ள முனிவர்கள் விநாயகரைச் சூழ்ந்து நின்று வணங்கினர்; ''முனிவர்களே நான் கமலாசுரனை வெல்வதற்கு ஒரு வழி சொல்லுங்கள்'' என்று விநாயகர் கேட்டார்.

''சுவாமி தாங்கள் எம்மைக் கேலி செய்கிறீர்கள் போலத் தெரிகிறது. இருப்பினும் கமலாசுரன் தேரிலும் யானையிலும் குதிரையிலும் இருந்து போர் செய்கிறான். தாங்களும் ஒரு வாகனத்தில் அமர்ந்து போர் செய்தால் என்ன?'' என்று கேட்டார் கார்க்கியர் என்ற முனிவர்.

விநாயகர் மகிழ்ந்து மயிலை வரவழைத்து அதன்மீது ஆரோகணித்துக் கமலாசுரனுடன் யுத்தம் புரியப் புறப்பட்டார். அப்பொழுது அங்கு வந்த புத்தி தேவியார்; ''சுவாமி நீங்கள் ஆணையிட்டால் நான் அவ்அசுரனை நொடிப் பொழுதில் அழிப்பேன்'' என்றார். விநாயகர் புன்சிரிப்புடன் அனுமதி வழங்கப் புத்தி தேவியார் விமானத்தில் ஏறிப் புறப்பட்டார்.

யுத்த களத்திற்குச் சென்ற புத்திதேவியார் தனது சக்தியால் அளவற்ற போர் வீரர்களை உருவாக்கி உக்கிரமாகப் போர் செய்தாள். அப்போது அவளின் வீரர்கள் தளர்ச்சியடைந்தனர். அதைக்கண்ட புத்திதேவியார் வீரன் ஒருவனைத் தோற்றுவித்தார். பின்பு அவனை நோக்கி; ''மைந்தனே உனது தந்தையான விநாயகர் சுந்தரஆச்சிரமத்தில் மயில் மீது வீற்றிருக்கிறார். அவரிடஞ் சென்று ஆசி பெற்றுப் போருக்கு வா'' என்றாள்.

அவன் சுந்தர ஆச்சிரமத்திற்குச் சென்று விநாயகரைப் பணிந்தான்; ''மைந்தா, நீ பல இலாபங்களைப் பெறப் போகிறாய். அதனால் உனக்கு 'இலாபன்' என்று நாமஞ் சூட்டுகின்றேன். நீ போரில் வெற்றி பெற்று வருவாய்'' என்று ஆசீர்வதித்தார்.

இலாபன் போர்க்களத்திற்குச் சென்று கமலாசுரனுடன் போர் செய்தான். கமலாசுரன் மோகனாஸ்திரத்தை எடுத்து விட்டான். இலாபனது போர் வீரர்கள் அனைவரும் அவ் அஸ்திரத்தினால் மயக்க மடைந்தனர். விநாயகர் தான் அவ்அஸ்திரத்தால் கட்டுப்பட்டவர் போல மயங்கிக் கிடந்தார். இலாபன் மட்டும் மயங்காது போரிட்டான். அவனோடு போரிட முடியாத கமலாசுரன் தப்பி ஓடினான்.

இலாபன் ஆச்சிரமத்திற்கு வந்த போது விநாயகர் மயக்க நிலையில் இருந்தார். அதைக் கண்ட இலாபம் தீமூட்டி அதில் இறங்கத் தயாரானான். அதைக் கண்ட விநாயகர் எழுந்து; ''மகனே உன்னைச் சோதிக்கவே இவ்வாறு இருந்தேன்'' என்று கூறிப் பாசத்தை விட்டார். அது கமலாசுரனைக் கட்டி இழுத்து வந்து அவரின் முன் விட்டது.

விநாயகர் தமது தண்டாயுதத்தால் அவனைத் தாக்கினர். கமலாசுரனின் உடல் பொடிப் பொடியானது. மறுகணம் ஒவ்வொரு துண்டும் ஒவ்வொரு கமலாசுரனானது. அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து விநாயகரைத் தாக்க வந்தனர். விநாயகர் ஒவ்வொருவரையும் தாக்கிச் சிதறடித்தார். சிதறிய இரத்தத்தில் இருந்து கோடிக் கணக்கான கமலாசுரர்கள் தோன்றினார்கள்.

இலாபன் தாயார் இருவரையும் நினைத்துத் தொழுதான். சித்தியும் புத்தியும் பூதங்களை அனுப்பினர். அவை விநாயகரால் தாக்கப்படும் கமலாசுரர்களின் இரத்தத்தைக் குடித்தன. அதனால் ஒரு கமலாசுரன் எஞ்சினான். விநாயகர் அவனைத் தனது சூலத்தினால் தாக்கி அழித்தார். அவனது ஆத்மா விநாயகரின் திருவடியை அடைந்தது. தேவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

***விநாயகரின் திருவிளையாடல்கள்***

மைதல தேசத்து அரசன் சக்கரபாணி. அவனது மனைவி வக்கிரை. அவள் பல முறை கர்ப்பமுற்றாள். பிள்ளைகள் பிறந்ததும் அவர்கள் இறந்து விடுவர். அதனால் மனம் வருந்திய மன்னன் காட்டுக்குச் சென்று தவம் செய்ய விரும்பினான். அப்பொழுது சவுண முனிவர் அரண்மனைக்கு வந்தார்;

‘‘மன்னா நீ சூரிய விரதத்தை அனுஷ்டித்தால் உனக்கு புத்திரன் பிறப்பான்’’ என்று கூறி அவ்விரதத்தை அனுஷ்டிக்கும் முறைகளைக் கூறிச் சென்றார்.

அரசன் முனிவர் கூறியது போல விரதத்தை அனுஷ்டித்தார். இருபத்தோராம் நாள் சூரிய பகவான் அரசன் மலடன் என்பதை அறிந்து அவனுருவில் சென்று வக்கிரையுடன் கூடியிருந்து விட்டுச் சென்றான்.

பத்து மாதம் சென்றதும் வக்கிரை ஆண்பிள்ளையைப் பெற்றாள். குழந்தை பிறக்கும் போது மூன்று கண்களையும், சிவந்த சடையையும் தன் இரு கைகளிலும் சூலங்களையும் ஏந்திப் பிறந்தது. அப்பொழுது வருணன் ஒரு கிழப்பிராமணர் வேடந்தாங்கி அங்கு வந்து அக்குழந்தைக்குச் சிந்து எனப் பெயரிட்டு ஆசிர்வதித்துச் சென்றான்.

சிந்து சிறு வயதிலேயே பராக்கிரமம் மிக்கவனாகத் திகழ்ந்தான். எட்டுத் திசைகளும் சென்று காண்போரையெல்லாம் தாக்கினான். மலைகளை உடைத்தான். சமுத்திரங்களைக் கலக்கினான். சந்திரனைப் பிடித்து விளையாடினான். அதைக் கண்ட அசுரர்களின் குருவான சுக்கிராச்சாரியார் இவனே அசுரர்களுக்குத் தலைமை தாங்கக் கூடியவன் என்றெண்ணி அவனிடம் வந்து; ‘‘சிந்து ராஜனே நீ சிவபெருமானை நினைத்துத் தவம் செய்து சகல பராக்கிரமங்களையும் அடைவாயாக’’ என்று கூறினார்.

சிந்து சிவபெருமானை நினைத்து இரண்டாயிரம் வருடங்கள் தவம் செய்தான். அப்பொழுது சிவபெருமான் அவன் முன் தோன்றி; ‘‘உனக்கு என்ன வரம் வேண்டும்’’ என்று கேட்டார்.

‘‘ஈசனே சகல புவனங்களும் எனக்குரியதாக வேண்டும். அத்துடன் தேவர்களால் எனக்கு அழிவு ஏற்படக் கூடாது’’ என்று கேட்டான் சிந்து.

‘‘அப்படியே ஆகட்டும்’’ என்று அருளி மறைந்தார் சிவபெருமான்.

சிவபெருமானிடம் சக்தி வாய்ந்த வரங்களைப் பெற்ற சிந்து தேவர்களை அடிமைப்படுத்திச் சிறையில் அடைத்தான். அவர்களைக் கொண்டு வேலைகளைச் செய்வித்தான். அதனால் மனம் வருந்திய தேவர்கள் தமது குருவான பிரகஸ்பதியை வணங்கினர். அவர் தேவர்கள் முன் தோன்றி; ‘‘எல்லாம் வல்ல விக்னேஸ்வரப் பெருமானால் தான் உங்களது துயர் தீரும். அவரை வணங்குங்கள்’’ என்று கூறி மறைந்தார். அதைத் தேவர்கள் சிவபெருமானிடமும் பார்வதிதேவியிடமும் கூறினர்.

பரமசிவன் கைலாயத்திற்கு நிகரான ஒரு கோயிலை பூவுலகில் அமைத்தார். அதில் சிவனும் பார்வதிதேவியாரும் தங்கியிருந்தனர். அப்போது சிவன் நிஷ்டையில் இருந்தார். அதைக் கண்ட பார்வதிதேவி அவரைக் கேட்டாள்; ‘‘மானிடர் முதல் தேவர் வரை வணங்கப்படும் தாங்கள் நிஷ்டையில் ஏன் இருக்கிறீர்கள்’’.

‘‘தேவி விஷ்ணு முதலிய தேவர்களால் நான் எவ்வாறு அர்ச்சிக்கப்படுகிறேனோ, அதே போல எல்லாம் வல்ல ஆதிபரம் பொருளான முழுமுதற் கடவுள் விநாயகனை நான் மனதில் இருத்திப் பூசிப்பதற்காகவே நிஷ்டையில் இருக்கிறேன். சிந்துவை அழிக்க வேண்டுமானால் விநாயகன் உனது வயிற்றில் அவதரிக்க வேண்டும். அதற்காக நீ பன்னிரண்டு வருடங்கள் சதுர்த்தி விரதமிருந்து ஏகாஷரமந்திரத்தை உச்சரித்தல் வேண்டும்’’ என்றார்.

பார்வதிதேவி அவ்வாறு பன்னிரண்டு வருடங்கள் சதுர்த்திவிரதம் அனுஷ்டித்து ஏகாஷர மந்திரத்தை உச்சரித்ததன் பயனாக விநாயகர் அவளின் முன் விஸ்வரூபம் எடுத்துத் தோன்றினார்.

அதைக் கண்ட பார்வதி; ‘‘முழுமுதற்கடவுளே எனக்கு நீ குழந்தையாகத் தோன்றி எனது மடியில் விளையாட வேண்டும்’’ என்று வேண்டினார் அவ்வாறே விநாயகர் குழந்தையாகி அவளின் மடியில் ஏறி அமர்ந்தார்.

நகர் வலம் வந்த சிந்துராஜனின் வீரர்கள் திரிசந்தி என்னும் ஆச்சிரமத்தில் முனிவர்களோடு வசிக்கும் பார்வதிதேவியாருக்கு மூன்று கண்களுடனும் ஆறுகைகளோடும் கணேசன் என்ற குழந்தை பிறந்திருப்பதாகக் கூறினர். முன்பு சிவபெருமான் அவனுக்கு வரமளிக்கும் போது கணேசரால் தான் உனக்கு அழிவு ஏற்படும். என்று கூறிய வார்த்தைகள் சிந்துராஜனின் நினைவுக்கு வந்தது. அதனால் கிருத்திராசுரன் என்ற அசுரனை அழைத்து விநாயகரைத் தூக்கிவருமாறு கூறினான்.

கிருத்திராசுரன் கழுகு போல உரு மாறி தொட்டிலில் படுத்து விளையாடிய கணேசரைத் தூக்கிக் கொண்டு வானில் பறந்தான். அப்பொழுது விநாயகர் தனது கரங்களால் கழுகின் கழுத்தைப் பிடித்தார். கழுகு கணேசரைப் பார்வதியின் மடியில் போட்டு விட்டு விழுந்து இறந்தது.

அதன் பின் கிருத்திகாசுரன், கேமாசுரன், குசலாசுரன் என்னும் இருவரை எலியாக மாற்றிக் கணேசரைக் கொல்லுமாறு அனுப்பினான். கணேசன் பூனையாக மாறி அவர்களைக் கடித்துக் குதறினார். பின் குசலாசுரன் என்பவனைப் பூனையாக மாற்றி அனுப்பினான். கணேசர் நாயாக மாறிப் பூனையைத் தூக்கித் தரையில் அடித்துக் கொன்றார் பாலாசுரன் என்பவன் முனி குமாரன் போல் வந்து அவருடன் விளையாடினான். கணேசர் அவனை விளையாடி விளையாடிக் கொன்றார்.

வியோமாசுரன் என்பான் மாமரமாகி நின்றான். அதில் இருந்த பொந்துள் நுழைந்த கணேசர் விஸ்வரூபமெடுக்க மாமரம் இரண்டாகப் பிளந்தது. அதனால் வியோமாசுரன் இறந்தான். சதமகிஷ பட்சினி என்ற அரக்கி அழகிய பெண்ணுரு எடுத்து வந்து கணேசரைத் தூக்கிக் கொண்டு வானில் பறந்தாள். கணேசர் அவளது காதைப் பிடித்து இழுத்தார். அவள் கணேசரை விட்டு விட்டு நிலத்தில் பிணமாக விழுந்தாள். கடாசுரன் என்பவன் ஆமையாக மாறி ஊர்ந்து வந்தான் அவனை கணேசர் காலால் மதித்துக் கொன்றார். கற்பாகசுரன் குதிரையாக வந்தான். கணேசர் அதன் மீதேறி உலகம் முழுவதும் சுற்றினார். அதனால் அவன் வாயால் நுரைதள்ளிச் செத்தான். துந்துவி என்ற அசுரன் விஷப்பழங்களைக் கொண்டு வந்து கணேசருக்குக் கொடுத்தான். அவற்றைக் கணேசா வாங்கி உண்டு விட்டு அவனுக்கு மோதகம் கொடுத்தார். அவன் அதை வாங்கி உண்டு விட்டு இறந்தான். அசகாசுரன் மலைப்பாம்பாக மாறி ஆச்சிரமத்திற்கு வந்து கணேசரை விழுங்கினான். கணேசர் விஸ்வரூபமெடுத்து அவனது வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியேறினார். ஒரு நாள் சோலையில் கணேசர் விளையாடிய போது கமலாசுரன் பெரிய பட்சியின் உருக் கொண்டு கணேசரைத் தூக்க வந்தான். கணேசர் பட்சியின் கால்களைப் பிடித்துத் தூக்கி நிலத்தில் மோதிக் கொன்றார்.

வீமாசுரன் என்ற அசுரன் தேவசிற்பியான விஸ்வகர்மனின் உருக் கொண்டு வந்து கணேசரின் கால்களில் இரண்டு சிலம்புகளை அணிந்தான். கணேசர் கால்களை உதற சிலம்புகள் உடைந்து வீமாசுரனைத் தாக்கியது. அப்போது சிலம்பாக இருந்த இரு அரக்கர்களும் வீமாசுரனும் இறந்தனர்.

விகிர்தாசுரன் முனிவர்கள் நீராடும் தடாகத்தில் மீனாக உருவெடுத்து கணேசரை விழுங்கக் காத்திருந்தான். கணேசர் மீனைப் பிடித்து தரையில் எறிந்து கொன்றார். ஒரு நாள் கார்த்தமாசுரன் ஆச்சிரமத்திற்கு வந்து குழந்தைகளை விழுங்கிக் காதின் வழியாகவும் மூக்கின் வழியாகவும் வெளியே வரச் செய்தான். பின்பு பார்வதிதேவியின் மடியில் இருந்த கணேசரைத் தூக்கி விழுங்கி விட்டு எழுந்து சென்றான். கணேசர் தாயின் முகத்திலிருந்து வெளிப்பட்டு அவனை அடித்துக் கொன்றார்.

விசுவகர்மா ஆச்சிரமத்திற்கு ஒரு நாள் வந்து பரசு, தாமரைமலர், பாசம் அங்குசம் முதலியவற்றைக் கொடுத்து விட்டுச் சென்றார். அப்பொழுது விருகாசுரன் என்பவன் செந்நாய் உருவில் கணேசரைக் கொல்ல வந்தான். கணேசர் அங்குசத்தை ஏவி அவனைக் கொன்றார்.

காசிப முனிவரின் மனைவியான வினதை முனிவரைப் பணிந்து எமது புத்திரர்கள் நாகர்களால் சிறை வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை மீட்க வல்ல புத்திரன் ஒருவனை எனக்குத் தந்தருளல் வேண்டும் என்று பிராத்தித்தார்.

''பெண்ணே கவலை கொள்ளாதே உனது வயிற்றில் முட்டை ஒன்று உருவாகும் அதை விநாயகர் ஒருவரால் தான் உடைக்க முடியும். அப்போது அதனுள் இருந்து ஒரு மயில் வெளிப்படும். அதில் விநாயகர் சென்று அவர்களை அழித்து உன் புதல்வர்களை விடுவிப்பார்'' என்றார்.

அதன்படி வினதையின் வயிற்றில் முட்டை ஒன்று உண்டாகி வெளிப்பட்டது. அதை வினதை கொண்டு வந்து விநாயகருக்குக் கொடுக்க விநாயகர் தனது கைவிரல் நகத்தால் அதை உடைத்தார். அதிலிருந்து மயில் ஒன்று வெளியே வந்தது. விநாயகர் அதன்மீது ஏறி அமர்ந்து; ''முனி பத்தினியே உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்'' என்றார்.

''சர்வேஸ்வரா, நாகர்களால் சிறைப்பிடிக்கப்பட்ட எனது புத்திரர்கள் மூவரையும் விடுவிக்க வேண்டும்'' என்றாள் வினதை.

விநாயகர் அவள் கேட்ட வரத்தை அளித்தார். அதனால் மயூரேசர் என்ற நாமத்தைப் பெற்றார். அதன் பின் விநாயகர் பாதாள உலகிற்குச் சென்று நாகர்களைக் கொன்று வினதையின் மூன்று புத்திரர்களையும் மீட்டார். அப்போது ஆதிசேஷன் தனது படையுடன் விநாயகரை எதிர்த்து வந்தான். விநாயகர் அவனைப் பிடித்துத் தனது அரை ஞாணாகத் தரித்துக் கொண்டார்.

சிந்துராஜனின் கொடுமைகள் அளவுக்கதிகமாகியதால் விநாயகர் பூதகணங்களுடனும் வீரபத்திரர் நந்திதேவருடனும் சிந்துராஜனின் தலைநகரான கண்டக நகரை நோக்கிப் புறப்பட்டார். யுத்தத்திற்கு முன்பாக தூது அனுப்ப எண்ணிய விநாயகப் பெருமான் நந்திதேவரை அழைத்து அவரைச் சிந்துராஜனின் அரசசபைக்குத் தூதுவனாக அனுப்பினார்.

சிந்துராஜனின் அரச சபையை அடைந்த நந்திதேவர் விநாயகரை நினைத்துத் தனக்கோர் ஆசனம் தரும்படி வேண்ட, விநாயகர் சிந்துராஜனை விட உயர்ந்த ஆசனத்தை கொடுத்தார். சிந்துராஜன் ஆச்சரியமடைந்து; ''யார் நீ'' என்று சினத்துடன் கேட்டான்.

அசுரேந்திரா, நான் மயூரேசரால் அனுப்பப்பட்ட தூதுவன் என் பெயர் நந்தி. மகா தவம் செய்து அரிய பல வரங்களைப் பெற்றிருக்கும் நீ, அவற்றைத் தகாத வழியில் பிரயோகித்து மக்களையும் தேவர்களையும் வருத்துகிறாய். தேவர்கள் பலரைச் சிறையில் அடைத்துள்ளாய். இவையெல்லாம் உன்னை அழிவுக்கே இட்டுச் செல்லும். உன்னை அழிக்க சர்வேஸ்வரனான விநாயகர் தனது சேனைகளுடன் உனது நகரின் எல்லையில் வந்து நிற்கிறார். அவரைப் பணிந்து அவரின் விருப்பப்படி நடந்தாயானால் இன்னும் மேன்மை அடைவாய். நீ அனுப்பிய பல அசுரர்களை அவர் கொன்று விட்டார்'' என்றார்.

சிந்துராஜன் கோபமாகச் சிரித்தான்; ''நந்திதேவரே அச்சிறுவனா என்னைக் கொல்லப் போகிறான்? கொசுவை நசிப்பதைப் போல அவனை நசித்து விடுவேன். தூதுவனாக வந்த நீ மேலும் பேசாமல் தப்பிச் சென்று விடு. இல்லாவிட்டால் உன்னையும் கொன்று விடுவேன்'' என்று கர்ஜித்தான் சிந்துராஜன்.

நந்திதேவர் கோபத்துடன் காலால் நிலத்தை மிதித்தார். ஒரு கணம் அரண்மனை கிடுகிடுவென ஆடியது. சிந்துராஜன் முகம் குப்புற விழப்போனான். எனினும் விழவில்லை. நந்திதேவன் அவனை எச்சரித்து விட்டுச் சென்றார்.

சிந்துராஜன் தேரில் ஏறிப் போருக்குப் புறப்பட்டான்.

சுப்பிரமணியரும் நந்திதேவரும் வீரபத்திரரும் வீரவாகுதேவரும் படைகளுடன் அசுரசேனைக்குள் நுழைந்து அசுரர்களைக் கொன்று குவித்தனர். அசுரர் கொல்லப்படுவதைக் கண்டு சிந்துராஜன் வெறி கொண்டு, தப்பி ஓடிய வீரர்களைத் தடுத்துத் தைரிய மூட்டி உக்கிரமாகப் போர் செய்தான்.

விநாயகர் தேரில் ஏறி வந்து சிந்துராஜனின் முன் நின்றார். விநாயகரைப் பார்க்க அவனுக்குச் சிரிப்பு வந்தது; ''சிறுவனே புத்தி கெட்டு என்னுடன் போர் புரிய வந்துள்ளாய். இறந்த அசுரர்கள் வரம் பெறாதவர்கள். சர்வலோக நாயகனான சிவன் அளித்துள்ள வரங்களைப் பற்றி சிறுவனான உனக்குப் புரியாது. எனவே ஓடிப் போய்விடு. சின்னஞ்சிறு பாலகனான உன்னை மன்னிக்கிறேன்'' என்றான் சிந்துராஜன்.

''மூடனே, எப்பொழுது நீ தேவர்களைக் கொடுமைப் படுத்தினாயோ அப்பொழுதே சிவபிரானிடமிருந்து பெற்ற வரங்கள் பலமிழந்து விட்டன. அத்துடன் உன்னைச் சங்கரிக்க வென்றே நான் அவதரித்திருக்கிறேன். இன்னும் காலங்கடந்து விடவில்லை. சிறைப்பிடித்த தேவர்களை விட்டு விட்டு என் பாதார விந்தங்களில் சரணடை'' என்றார் விநாயகர்.

சிந்துராஜனின் கண்களில் தீ சுவாலித்துப் பிரகாசித்தது; ''சிறுவனான நீயா எனக்கு அறிவுரை வழங்குகிறாய். உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்று கர்ஜித்தவாறு வில்லை வளைத்துப் பாணங்களைப் பொழிந்தான். விநாயகர் தனது அஸ்திரத்தை விட்டார். சிந்துராஜன் மயக்கமடைந்து விழுந்தான். சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்து எழுந்த சிந்துராஜன் சூரியாஸ்திரத்தை எடுத்து விட்டான். கணேசர் சூலாயுதத்தை விட்டார். சூலாயுதம் சூரியாஸ்திரத்தை விழுங்கி விட்டுச் சிந்துராஜனின் கிரிடத்தைக் கீழே தள்ளி விட்டு அவனது காதுகளை அறுத்து விட்டுத் திரும்பியது. அதனால் சிந்துராஜன் மறைந்து ஓடினான்.

மறு நாள் நடைபெற்ற போரில் சிந்துராஜனின் புத்திரர்கள் இருவரும் கொல்லப்பட்டனர். புத்திரசோகத்தால் துன்பப்பட்ட சிந்துராஜன் ஒருவாறு தேறிப் போருக்குப் புறப்பட்டான். யுத்தம் நீடிப்பதை விரும்பாத நாரதர் விநாயகப் பெருமானிடம் செல்ல, விநாயகப் பெருமான் நாரதரின் மனதை அறிந்து மறு நாளுடன் யுத்தம் முடிவடையும் என்றார். மறு நாள் யுத்தத்திற்கு வந்த சிந்துராஜன் அங்கு நின்ற பூதகணங்களை நோக்கிச் சொன்னான்; ''நான் உங்களோடு போரிட வரவில்லை. என்னை அழிக்கவென வந்த சிறுவனுடன் தான் போர் செய்ய வந்தேன். எங்கே அவனை அழைத்து வாருங்கள்'' என்றான்.

விநாயகர் புன்முறுவலுடன் அவன் எதிரே வந்தார். சிந்துராஜன் சக்கராயுதத்தை எடுத்து விட்டான். அவ்வாயுதம் சீறிச் சென்று விநாயகரை மும்முறை வலம் வந்து அவர் வசமானது. பின் சூலத்தை விட்டான். விநாயகர் பரிசத்தை விட்டார். இரண்டும் மோதிச் சிதறின. அதிலிருந்து அசுரர்களும் பூதகணங்களும் தோன்றின. பூதகணங்கள் அசுரரை அழித்தன. விநாயகர் சூலாயுதத்தை எடுத்து விட அது சிந்துராஜனின் தலையைத் துண்டித்தது.

சிந்துராஜன் இறந்த செய்தி கேட்டு அவ்விடத்திற்கு ஓடி வந்த சிந்துராஜனின் தந்தை, விநாயகரைப் பணிந்து வணங்கினார். விநாயகப் பெருமான் அவருக்கு முடி சூட்டி வைத்தார்.

வீரபத்திரர் சிந்துராஜனால் சிறை வைக்கப்பட்ட தேவர்களை சிறையிலிருந்து விடுவித்தார். தேவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

விந்திய தேசத்தில் மசிபாதினி என்ற நாட்டை தூமாசுரன் என்ற அசுரன் நீதிநெறி தவறாது ஆண்டு வந்தான். அவனது ஆட்சியில் மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். அவன் தினமும் பரமேஸ்வரனைப் பூசித்து வந்ததால் அவர் அவனுக்குச் சகல சௌபாக்கியங்களையும் அருளி வந்தார். ஒரு நாள் அவனது அரண்மனைக்கு பிருகு முனிவர் வந்தார். அவரை வரவேற்று உபசரித்த அசுரன்; ''மாமுனிவரே நான் தினமும் பரமேஸ்வரனைத் துதித்து வருகிறேன். அத்துடன் நீதியான முறையில் ஆட்சி செய்து வருகிறேன். இருந்த போதும் நான் அசுர வம்சத்தில் பிறந்ததை எண்ணி மிகவும் வருந்துகிறேன். நான் ஏன் இவ்வம்சத்தில் பிறந்தேன்'' என்று வலையோடு கேட்டான்.

பிருகு முனிவர் அவனது முற்பிறப்பைப் பற்றிச் சொன்னார்; ''முற்பிறப்பில் நீ தூமராஜன் என்ற மன்னனாகப் பிறந்திருந்தாய். மகேஸ்வரனிடத்தில் பெறுதற்கரிய பல வரங்களைப் பெற்ற நீ, இந்திரப் பதவியடைவதற்காக தொண்ணூற்றொன்பது அஸ்வமேத யாகங்களைச் செய்தாய். நூறாவது அஸ்வமேத யாகங்கஞ் செய்வதற்கு ஆயத்தங்கள் செய்த போது இந்திரன் தனது பதவிக்கு ஆபத்து வந்து விடுமெனப் பயந்து நாரதரிடம் சென்று யாகத்தை குழப்புமாறு இரந்தான். நாரதர் கிழப்பிராமணராக உனது அரண்மனைக்கு வந்தார். நீ அவரை வரவேற்று உபசரித்தாய். அப்போது நாரதர் தனக்கு வரம் தருமாறு கேட்டார். அதற்கு நீ எந்த வரம் கேட்டாலும் தருவேன் என்று வாக்களித்தார். நாரதர் உனது மனைவியுடன் ஒரு முறை கூடியிருக்க விரும்பினார். அது தர்மமாகாது என்று நீ மறுத்ததால் உனது யாகத்தைக் குழப்புவதற்காக நீ அசுரனாகக் கடவாய் என்று சபித்தார். நீ பரமேஸ்வரனின் மீது பூண்ட பக்திகாரணமாக அசுரனாகப் பிறந்தும் நல்லவனாக வாழ்கிறாய்'' என்று சொல்லி விட்டுச் சென்றார்.

மசோதினி என்ற நாட்டை மாதவன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனது மனைவி சுமுதை அவர்களுக்குப் பிள்ளை இல்லாததால் மாதவன் அவளை நாட்டை விட்டுத் துரத்தி விட்டான். சுமுதை காட்டுக்குச் சென்று நாராயணனைக் குறித்து கடுந் தவம் செய்தாள். அவளது தவத்தைக் கண்டு பிரமித்த விநாயகர் விஷ்ணுவின் வடிவெடுத்து அவளின் முன் தோன்றி; ''மகாவிஷ்ணுவே, உனக்குப் பிள்ளையாக வந்து பிறப்பார்'' என்று அருளி மறைந்தார்.

அசுரகுலத்தில் பிறந்த தூமராஜன் நீதி தவறி அயல் நாடுகளை நாசம் செய்யத் தொடங்கினான். அவனது கொடுமைகளால் அயல் நாட்டவர் அஞ்சி நடுநடுங்கினர். அவனது மந்திரிகள் அவனுக்கு நற்போதனை செய்தும் அவன் கேட்கவில்லை. அப்போது வானில் ஓர் அசரீதி ஒலித்தது; ''அசுரராஜனே உன்னை அழிக்க மகா விஷ்ணு சுமுதையின் வயிற்றில் கருவாக வளர்கிறார்'' அதைக் கேட்ட அசுரன் சுமுதையின் வயிற்றில் வளரும் கருவை அழிக்க முயற்சித்தான். அதை அழிக்க வித்ருமன் என்ற அசுரனை அனுப்பினான். வித்ருமன் மாதவரின் அரண்மனைக்குச் சென்று நித்திரையில் ஆழ்ந்திருந்த மாதவனையும் சுமுதையையும் கட்டிலோடு தூக்கிச் சென்று காட்டில் விட்டு விட்டு அவனைக் கொலை செய்ய முயன்றான். விநாயகரின் அருளால் அங்கு பல வீரர்கள் தோன்றி வித்துருமனைத் துரத்தினர். அவன் தப்பிச் சென்று தூமராஜனிடம் நடந்ததைச் சொன்னான்.

குழந்தை பிறக்கும் காலம் நெருங்கியதும் விநாயகர் அழகிய குழந்தை வடிவில் அவளின் முன் தோன்றினார்; ''அம்மா என்னைப் பாலசந்திரன் என்று சொல்வார்கள். முன்பு நான் மகாவிஷ்ணுவாகத் தோன்றி அருளினேன். பின் காட்டில் வீரர்களை அனுப்பக் காப்பாற்றினேன். தற்பொழுது தூமராஜனால் உங்களுக்கு ஆபத்து வரவுள்ளது. அப்போதும் நான் உங்களைக் காப்பாற்றுவேன்'' என்றார்.

சுமுதையும் மாதவனும் விநாயகரை வணங்கினர். பிரசவம் நடைபெற முன் சுமுதையின் மடியில் விநாயகர் ஆண் குழந்தையாகப் படுத்திருந்தார். அதை அறிந்த தூமராஜன் சுமுதைக்கு குழந்தை பிறந்து விட்டதென நினைத்து அதைக் கொல்லப் படையுடன் வந்தான். தூமராஜனின் படை வீரர் அம்பு மழை பொழிந்தனர். அம்புகள் யாவும் அவரைச் சுற்றிக் கரு மேகங்களாக நின்றன. சுமுதை பெருங்குரலெடுத்துக் குழறினாள். அதைக் கண்டு சிரித்த விநாயகர்; ''அம்மா எனக்கு எந்த ஆபத்தும் வராது, கலங்காது இருங்கள்'' என்றார். அவரது வாயில் இருந்து புகை கிழம்பி உலகத்தை மறைத்தது. மறுகணம் அசுரர்கள் அப்புகையில் கருகி எரிந்து மடிந்தனர். சிறிது நேரத்தில் உலகை மறைத்த இருள் விலக விநாயகர் தோன்றி மாதவனையும் சுமுதையையும் நாடு திரும்புமாறு கூறி மறைந்தார்.

சில நாட்களின் பின் சுமுதை, நாராயணனைப் பிரசவித்தாள். நாராயணன் வளர்ந்து அந்நாட்டைச் சிறப்புடன் சில காலம் ஆண்டு பின் தேவலோகம் சென்றான்.

***கஜமுகன் வதம்***

தேவர்கள் அடிக்கடி அசுரர்களைத் தாக்கி அழிப்பதைக் கண்டு அசுரகுருவான சுக்கிராச்சாரியார் மிகவும் வருந்தினார். தேவர்களின் தாக்குதல்களுக்கு உள்ளான அசுரர்கள் சுக்கிராச்சாரியாரிடம் வந்து தேவர்களை அழிக்கவல்ல வீரன் ஒருவனை உருவாக்குங்கள் என்று வேண்டினர்.

‘‘வசிட்டர் மரபில் வந்த மகதர் என்ற முனிவர் வனத்திலே தவம் செய்கிறார். உங்கள் குலத்தில் பிறந்த கன்னியொருத்தியை அனுப்பி அவருடன் கூடுமாறு செய்யுங்கள். அவர்களுக்குப் பிறக்கும் புத்திரன் தேவர்களை அழிக்கக் கூடிய பராக்கிரம சாலியாக விளங்குவான்’’ என்றார் சுக்கிராச்சாரியார். அசுரர்கள் அழகில் சிறந்த விபுதை என்பவளைக் காட்டுக்கு அனுப்பினர்

விபுதை மகதரின் ஆச்சிரமத்திற்குச் சென்ற போது அவர் நிஷ்டையில் இருந்தார். அவர் நிஷ்டை கலைந்து எழுந்திருக்கட்டும் என்று நினைத்து விபுதை காத்திருந்தாள்.

மதகர் நிஷ்டை கலைந்து எழுந்த போது அவரெதிரே இரண்டு யானைகள் கூடிக் களிப்பதைக் கண்டார். அவருள்ளத்தில் விரததாபம் ஏற்பட்டது. அச்சமயம் விபுதை அங்கு சென்று முனிவரின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள். மதகரின் உடல் சிலிர்த்தது. விரததாபம் அதிகரித்து. விபுதை அந்த நோக்கத்தில் வந்தமையால் முனிவரின் இச்சையைத் தீர்க்க முயன்றாள். இருவரும் யானைகளாக மாறிக் கூடிக் குலாவி இன்பம் அனுபவித்தனர்.

அவர்களுக்குத் தலையில் இரண்டு கொம்புகளுடனும் தும்பிக்கையுடனும் கஜமுகாசுரன் என்ற அசுரமகன் பிறந்தான். முனிவர் தனக்கு அசுரமகன் பிறந்தானே எனக் கவலைப்பட்டார். சுமுதையும் கஜமுகாசுரனும் முனிவரிடமிருந்து விடை பெற்றுச் சுக்கிராச்சாரியாரிடம் சென்றனர்.

அவனைக் கண்டு மகிழ்ந்த சுக்கிராச்சாரியார்; ‘‘மகனே உன்னால் தான் அசுரர் குலம் மேன்மையடையப் போகிறது. உன்னைக் கொல்ல இந்திரன் இப்பொழுதே சூழ்ச்சிகள் செய்ய ஆரம்பித்து விட்டான். அதற்கு முன் நீ சிவபெருமானை நோக்கித் தவம் செய்து அரிய பல வரங்களைப் பெறு’’ என்று ஆசீர்வதித்தார்.

கஜமுகாசுரன் காட்டுக்குச் சென்று கடுந்தவம் செய்தான். சிவபெருமான் அவனின் முன் தோன்றி அவன் கேட்ட வரங்கள் யாவற்றையும் அருளினார். அதனால் தேவர்கள் எவராலும் தனக்கு அழிவு ஏற்படாது என்ற கர்வத்துடன் நாட்டுக்குத் திரும்பினான்.

தேவதச்சனான விசுவகர்மன் அவனுக்கு மதங்க நகரத்தை அமைத்துக் கொடுத்தான். அங்கிருந்து கொண்டு கஜமுகாசுரன் சகல அண்டங்களையும் கொடுமைப்படுத்தி ஆண்டு கொண்டிருந்தான்.

இவ்வாறு கஜமுகாசுரன் தேவர்களைக் கொடுமைப்படுத்தி வரும் நாளில் ஒரு நாள் பார்வதியும் பரமசிவனும் உத்தியா வனத்தில் மகிழ்வுடன் உலாவி கொண்டிருந்தனர். அங்கிருந்த மண்டபச் சுவரில் ஆண் யானையும் பெண் யானையும் கூடிக் களித்திருப்பதைப் போன்ற அழகிய சித்திரத்தைப் பார்த்த பரம சிவனுக்கு அப்படித் தாமும் கூடிக் களிக்க வேண்டுமென்ற நினைவு வந்தது.

‘‘தேவி, நீயும் நானும் இப்படிக் கூடி லோகரட்சணைக்காக ஒரு புத்திரனைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதையே இச் சித்திரம் காட்டுகிறது’’ என்றார் பரமசிவன். அக்கணம் இருவரும் யானைகளாக மாறிக் கூடிக்களித்தனர். உடனே கோடிச் சூரியப்பிரகாசத்தோடு பிரணவசொரூபியான விநாயகர் யானை முகத்தோடு அங்கு குழந்தையாகத் தோன்ற, பார்வதிதேவி அவரை அணைத்தெடுத்தாள்.

‘‘விக்கினங்களைத் தீர்க்கவென அவதரித்த விக்னேஸ்வரனே இன்றிலிருந்து கணங்களுக்கெல்லாம் தலைவனாக நீ விளங்குவாய். உன்னைத் தொழுத பின்பே யாவரும் தத்தம் கருமங்களைத் தொடங்குவார்கள்’’ என்று பரமசிவன் அருள விக்னேஸ்வரர் பெற்றோரை வலம் வந்து வணங்கினார்.

‘‘கணநாதனே தேவர்களைக் கொடுமைப்படுத்தும் கஜமுகாசுரனை அழிக்க வென்றே நீ அவதரித்தாய். அவனை அழித்துத் தேவர்களைக் காத்தருள்’’ என்று பரமேஸ்வரன் கூறினார்.

விநாயகப் பெருமான் யுத்தத்திற்கு அசலன் என்ற கணத்தில் ஏறிப் புறப்பட்டார். கஜமுகனும் தனது படைகளுடன் போருக்கு ஆயத்தமானான்.

மாதங்கநகரில் இருபடைகளும் மோதின. கஜமுகன் விநாயகரின் முன் தனது தேரைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டுப் பாணங்களை மழையாகப் பொழிந்தான். விநாயகரின் கதை அவற்றை விழுங்கியது. விநாயகரின் அஸ்திரம் அவனது வில்லின் நாணை ஒடித்தது. கஜமுகன் மாயத் தோற்றத்தில் தோன்றிப் போர் செய்தான். விநாயகர் அவனது நெஞ்சில் கதையால் தாக்கினர். அவனது நெஞ்சு பிளந்தது. அவன் மூசிகமாக மாறி அட்டகாசம் செய்தான். விநாயகர் அதைப் பிடித்து அதன் முதுகில் ஏறி அமர்ந்தார்.

யுத்தம் முடிந்து விநாயகர் திரும்பும் போது சாபத்தின் காரணமாக கண் குருடான மலைப் பாம்பாகக் கிடந்து அல்லற்படும் விஷ்ணுவைக் கண்டார். அவரின் கண் பட்ட மாத்திரத்தே விஷ்ணு சுயரூபமடைந்து விநாயகரைப் பணிந்து அருள் பெற்றார்.

***மடோற்சுரரின் மாய விளையாட்டு***

ரௌத்திர கேது என்றொரு அந்தணன் இருந்தான். அவனது மனைவியின் பெயர் சாரதை. அவர்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அவர்களுக்கு ரௌத்திரகேது தேவாந்தகன், நாரந்தகன் என்று பெயர் வைத்தான். ஒரு நாள் நாரதர் அவர்களது வீட்டுக்கு வந்தார். ரௌத்திரகேது அவரை வரவற்று உபசரித்தான். நாரதர் மனம் மகிழ்ந்து அவனது பிள்ளைகளுக்கு பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்துச் சிவனை நோக்கித் தவமிருந்து அரிய பல வரங்களைப் பெறுமாறு கூறிச் சென்றார்.

தேவாந்தகனும் நாரந்தகனும் நாரதரின் ஆசியைப் பெற்று காட்டுக்குத் தவம் செய்யச் சென்றனர். காட்டில் ஒரு சிவன் கோயிலைக் கண்டு அங்கிருந்து ஆயிரம் வருடங்கள் தவம் செய்தனர். அவர்களின் தவத்தைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் அவர்கள் முன் தோன்றி; ''ரௌத்திர குமாரர்களே உங்களுக்கு வேண்டியவற்றைக் கேளுங்கள் தருகிறேன்'' என்று கூறினார்.

அதற்கு அவர்கள்; ''விஷ்ணு பிரமாக்களால் எமக்கு அழிவுவரப்படாது அத்துடன் தேவர்கள் எமக்குப் பணிவிடை செய்தல் வேண்டும்'' என்று கேட்டனர். சிவபெருமான் அவர்கள் கேட்ட வரத்தை அருளி மறைந்தார்.

அவர்கள் இருவரும் சகலலோகங்களையும் கைப்பற்றி அங்குள்ளவர்களை அடிமைகளாக்கினர். தேவர்கள் அவர்களுக்குப் பணிவிடை செய்தனர்.

தேவமாதாவான அதிதி காசிப முனிவரைப் பணிந்து; ''பூலோகத்தில் உள்ள இரண்டு நரர்கள் நமது புத்திரரை அடிமைபடுத்தி கொடுமைகள் செய்கின்றனர். அவர்களை அழிக்க வல்ல புத்திரனைத் தந்தருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்.

''பிரியே, உன் எண்ணம் விரைவில் நிறைவேறும் அவர்களை அழிக்க விநாயகப் பெருமான் உன் வயிற்றில் அவதரிப்பார். எனவே அவரை நோக்கித் தவம் செய்'' என்றார்.

அதிதி, விநாயகரை நினைத்து நூறு வருடங்கள் தவம் செய்தாள். விநாயகப் பெருமான் அவள் முன் தோன்றி; ''உனது எண்ணம் நிறைவேற யாம் உன் வயிற்றில் அவதரிப்போம்'' என்று அருளி மறைந்தார். தேவர்களும் பிரம்மாவும் விஷ்ணுவும் தம்மைக் காப்பாற்றுமாறு விநாயகரை வேண்டினர். அப்போது; ''தேவர்களே அஞ்ச வேண்டாம் நான் காசிபரின் மனைவியான அதிதியின் வயிற்றில் தோன்றி உங்கள் துயரைத் துடைப்பேன்'' என்று ஓர் அசரீதி எழுந்தது.

ஆச்சிரமத்தில் அதிதி உள்ளன்போடு விநாயகரைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். விநாயகர் ஆயிரம் முகங்களோடும் ஆயிரம் கைகளோடும் கோடி சூரியப்பிரகாசத்தோடு அதிதி முன் தோன்றினார். அதிதி மெய்சிலிர்த்து மகிழ்ந்து விநாயகரைத் தொழுதாள். அப்போது விநாயகர் அன்று பிறந்த குழந்தையைப் போல உருவெடுத்து அவளது மடியில் கிடந்தார்.

அப்பொழுது நாரந்தனின் அரண்மனையில் சில நிகழ்வுகள் நிகழ்ந்தன. அவற்றைக் கண்ட சோதிடர்கள் ''அரசே உங்களுக்குக் கெட்ட காலம் வந்து விட்டது. காசிபருக்கும் அவரின் மனைவிக்கும் விநாயகர் திருக்குமாரனாக அவதரித்துள்ளார்'' என்றனர்.

அதைக் கேட்ட நாராத்தகன் அசுரமாது ஒருத்தியை அழைத்து விநாயகரைக் கொன்று விட்டு வரும்படி அனுப்பினான். அசுரமாது பிராமணப் பெண்ணைப் போலச் சென்று யாருமில்லாத வேளையில் தொட்டிலில் உறங்கிய விநாயகரைத் தூக்கி விழுங்கினாள்.

அசுரமாதின் வயிற்றுள்ச் சென்ற விநாயகர் கண்களைத் திறந்தார் அவரது கண்களுக்குள்ளிருந்து அக்கினி வெளிப்பட்டது. அரக்கி உஷ்ணம் தாங்க முடியாது ஆறுகள் குளங்கள் கிணறுகளில் இருந்த நீரையெல்லாம் குடித்தாள். அப்படியிருந்தும் உஷ்ணம் குறையவில்லை. விநாயகர் தனது கால் நகத்தால் அவளது வயிற்றைக் கிழித்து வெளியே வந்தார்.

அரக்கி இறந்தமையால் நாரந்தகன் தூந்துவி, உகந்தன் என்ற இரு அசுரர்களை விநாயகரைக் கொன்று விட்டு வரும்படி அனுப்பினான். அவர்கள் கிளியாக உருவெடுத்து காசிப முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்றனர். விநாயகர் பருந்தாக மாறி இரு கிளிகளையும் பிடித்துக் கிழித்தெறிந்தார்.

ஒரு நாள் அதிதி, சோமவதி என்ற புண்ணிய தீத்தத்தில் நீராடச் சென்றாள். அவளுடன் சென்ற விநாயகர் குளக்கரையில் அமர்ந்திருந்தார். தாய் குளத்தில் இறங்கியதும் தானும் இறங்கினார். அப்போது அக்குளத்தில் உள்ள முதலை விநாயகரை இழுத்துச் சென்றது. விநாயகர் முதலையின் முதுகில் ஏறிச் சவாரி செய்தார். பலமணி நேரம் சவாரி செய்ததால் முதலை நுரை கக்கி இறந்தது. அப்பொழுது அந்த முதலையில் இருந்து காந்தா்வன் ஒருவன் வெளிப்பட்டு விநாயகரை வணங்கினான்.

''சுவாமி நான் பூர்வ ஜென்மத்தில் இந்திரன் என்ற காந்தர்வனாக இருந்தேன். பிருகு முனிவரின் சாபத்தால் முதலையானேன். இப்பொழுது தங்கள் உடல் என்மீது பட்டதால் சாபவிமோசன மடைந்தேன்'' என்று கூறி மறைந்தான்.

அன்று காசியப்பரின் ஆச்சிரமத்திற்கு மூன்று காந்தவர்கள் வந்தனர். அவர்களை வரவேற்று உபசரித்த முனிவர், அன்று அவர்களை அங்கு தங்கியிருந்து களைப்பாறி உணவு உண்டு விட்டுச் செல்லுமாறு கேட்டார். அதற்கு அவர்கள் சம்மதித்தனர்.

நீராடி விட்டு வந்த காந்தர்வர்கள் உணவு உண்ண முன் தாம் கொண்டு வந்த விநாயகர், மகேஸ்வரன், பார்வதி, விஷ்ணு, சூரியன் ஆகிய ஐந்து விக்கிரகங்களையும் எடுத்து வைத்துப் பூசை செய்து விட்டு தியானத்தில் இருந்தனர். அப்பொழுது அங்கு வந்த விநாயகர் அவற்றை மறைத்து விட்டார்.

தியானத்திலிருந்து விடுபட்ட காந்தர்வர்கள் திகைத்து விட்டனர். செய்தி அறிந்த காசிபமுனிவர் கவலையுடன் எங்கும் தேடினார். அவற்றைக் காணவில்லை. காந்தர்வர்கள் கடுங் கோபம் கொண்டனர். அங்கு நின்ற விநாயகரைப் பார்த்து; ''காந்தர்வர்கள் பூசித்த விக்கிரகங்களைப் பார்த்தாயா...?'' என்று காசியப்பர் கேட்டார்.

விநாயகர் தனது வாயைத் திறந்தார். விநாயகரின் வாய்க்குள் சகல லோகங்களும் தெரிந்தன. ஐந்து விக்கிரகங்களும் ஐவராகத் தோன்றி அவர்களுக்கு ஆசி வழங்கினர். காந்தர்வர்கள் திகைத்து; ''தேவதேவா தங்களின் காட்சி கிடைத்தது. எமது பாக்கியம்'' என்று கூறி வணங்கினர். விநாயகர் அவர்களுக்கு வரமளித்தார்.

காசிபமுனிவனின் புத்திரராக அவதரித்த மடோற்கடர் என்ற விநாயகரக்கு ஐந்து வயது பூர்த்தியானது. காசிபர் அவருக்கு உபநயனம் செய்து வைப்பதற்காக தேவர்களையும் முனிவர்களையும் அந்தணர்களையும் அழைத்திருந்தார். நாரந்தன் மடோற்கடரைக் கொல்வதற்காக ஐந்து அசுரர்களை முனிவர்களைப் போல வேடமணிந்து கொல்வதற்காக அனுப்பியிருந்தான். சபையில் இருந்தோர் அட்சதை தூவும் போது அசுரர்கள் தமது ஆயுதங்களை அட்சதையாக்கி விநாயகர் மீது துவினர். அவரை இரச்சலுடன் விநாயகரை அடைந்து மலர்களாக மாறி அவர் மீது விழுந்தன. மடோற்கடர் ஐந்து அரிசிகளை எடுத்து அவர்கள் மீது ஏவினார். அவை அஸ்திரங்களாக மாறி அசுரர்களின் மார்பைக் கிழித்தன. அசுரர்கள் துடிதுடித்து மாண்டனர்.

அதன் பின் அங்கு வந்திருந்த தேவர்களும் முனிவர்களும் விநாயகருக்கு ஆயுதங்களும் மாலைகளும் பூக்களும் கொடுத்து ஆசீர்வதித்தனர். இந்திரன் மடோற்கசரைச் சிறுவன் என மதியாது இறுமாப்புடன் இருந்தான். காசிபர்; ''தேவேந்திரா இவன் சிறுவனென எண்ணாதே. ஆதிபரம் பொருளான சர்வேஸ்வரன் அசுரர்களை அழிக்க என் மகனாக அவதாரம் எடுத்துள்ளார். அவரைப் பணிந்து ஆசி பெறு'' என்றார். திமிருடன் புன்நகைத்த தேவேந்திரன் அக்கினியையும் வாயுவையும் அழைத்தார். இருவரும் உக்கிரமாக வந்து விநாயகரைப் பணிந்தனர். விநாயகர் விஸ்வரூபம் எடுத்தார். அவருள் சகல அண்டங்களும் தெரிந்தன. இந்திரலோகம் தோன்றியது. அதனுள் இந்திரன் தன்னைக் கண்டான். பயந்து நடுங்கிய இந்திரன், தன்னை மன்னிக்குமாறு விநாயகரின் பாதத்தில் வீழ்ந்தான். விநாயகர் சிறு குழந்தையாகத் தோன்றி அவனுக்கு அருளினார்.

காசிராஜன் தனது புத்திரனுக்குத் திருமணம் நடத்தி வைக்க விரும்பி தனது குருவான காசிப முனிவரிடம் வந்து தனது புத்திரனின் திருமணத்தை நடத்தி வைக்குமாறு வேண்டினான். அப்பொழுது காசிப முனிவர் சதுர்மாஸ்சிய விரதம் அனுட்டித்துக் கொண்டிருந்ததால் தனதுமகனான மடோற்கடனை அழைத்துச் செல்லுமாறு சொன்னார்.

அவர்கள் செல்லும் வழியில் துமாட்சகன் என்ற அசுரன் சூரியனை நோக்கி தவம் செய்து கொண்டிருந்தான். சூரியபகவான் அவனது தவத்தை மெச்சி ஆயுதம் ஒன்றை அனுப்பினார். அவ்வாயுதம் வான வெளியூடாக அசுரனை நோக்கி வந்து கொண்டிருந்தது. அவ்வாயுதம் அவனை அடைந்தால் தேவர்களுக்கும் மானிடர்க்கும் துன்பம் நேருமென்பதை அறிந்த விநாயகர் அதைத் தமது கையால் பிடித்தார். அவரது கைபட்டதும் அவ்வாயுதம் சக்தியிழந்தது. பின் விநாயகர் அசுரனை நோக்கி அவ் ஆயதத்தை ஏவ அது அசுரனின் தலையைத் துண்டித்தது. அதைக் கண்ட அவ் அசுரனின் புத்திரர் இருவர் மடோற்கசருடன் போரிட வந்தனர். மடோற்கடர் மூச்சு விட்டார். அம்மூச்சுக் காற்றில் அகப்பட்ட இரு அசுரர்களும் திக்கு முக்காடி மூச்சு விட முடியாது இறந்து விழுந்தனர்.

துமாட்சகனையும் அவனது புத்திரர் இருவரையும் விநாயகர் கொன்றமையால் நராந்தன் ஆயிரம் அசுரர்களை விநாயகரைப் பிடித்து வருமாறு அனுப்பினான். அவர்கள் காசிராஜனும் விநாயகரும் சென்ற தேரைச் சூழ்ந்து நின்றனர். அசுரர்களைக் கண்ட விநாயகர் பலமாகக் கனைக்க அப்பேரொலியைத் தாங்க முடியாது அவர்கள் அனைவரும் மடிந்தனர்.

காசிராஜனின் நகரத்தை அடைந்த போது அசுரர் இருவர் பிராமண வேடம் பூண்டு அவரைத் தழுவி ஆசீர்வதித்தனர். விநாயகர் அவர்களை நசித்துக் கொன்றார்.

ஓர் அசுரன் தேரின் குறுக்கே பெரும் பாறையாக உருவெடுத்துத் தடுத்து நிறுத்தினான்; ''அரசே நல்ல நேரத்தில் தேர் உள்ளே செல்கிறது. அப்பாறையில் ஆயிரக்கணக்கான தேங்காய்களை அடியுங்கள்'' என்று விநாயகர் கூற காசிராஜன் வீரர்களுக்கு கட்டளையிட்டான். ஆயிரக்கணக்கான தேங்காய்கள் அப்பாறையில் உடைக்கப்பட்டன. அசுரன் வேதனை தாங்க முடியாது சுய உருவெடுத்து பலத்த காயங்களுடன் இறந்து விழுந்தான்.

காமன், குரோதன் என்ற இரு அசுரர்கள் கழுதையாக மாறி விநாயகரைத் தாக்க வந்தனர். விநாயகர் ஒரு புல்லை எடுத்து இரண்டாகக் கிள்ளி அதைக் கழுதைகளை நோக்கி ஏவினார். அவை ஆயுதங்களாக மாறி அசுரர்கள் இருவரையும் அழித்தன. குண்டன் என்ற அசுரன் மதயானையாக மாறி விநாயகரைத் தாக்க வந்தான். விநாயகர் அதன் வாலைப் பிடித்து சுழற்றிப் பின் அதில் ஏறி அமர்ந்து சவாரி செய்தார். யானை நுரை கக்கி இறந்தது.

துமாட்சகனின் மனைவி ஓர் அந்தணப் பெண்ணாக வந்து விசம் கலந்ததைலத்தை விநாயகரின் தலையில் பூசினாள். விசம் அவளது கைகளுடாக தலைக்கேறி அவள் இறந்து போனாள்.

காசிராஜனின் புத்திரனுக்குத் திருமணத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. அசுரர்கள் அத்திருமணத்தைக் குழப்பிக் கொண்டிருந்தனர். விதாரணன் என்ற அசுரன் பெருங்காற்றாகிக் கல்யாணப் பந்தலைப் பிடுங்கினான். ஜவாலாமுகன் என்ற அசுரன் அக்கினி உருவில் நகருக்குள் நுழைந்தான். நரகம் எரிந்தது. மக்கள் அல்லோல கல்லோலப் பட்டனர். வியாக்கியமுகன் என்ற அசுரன் தீப்பிடித்த பந்தங்களில் இருந்து தப்பியோடும் மக்களைப் பிடித்து விழுங்கிக் கொண்டிருந்தான். விநாயகர் தனது கமண்டலத்தை எடுத்து அதிலிருந்த நீரைக் கையில் எடுத்துத் தெளித்தார். காற்றும் அக்கினியும் அடங்கின. அசுரர்கள் இறந்து வீழ்ந்தனர். பட்டணம் முன்பு போல மாறியது.

அன்று விநாயகர் உணவு உண்ணும் போது அரண்மனையில் செய்யப்படாத பலகாரங்கள் பல அவரின் இலையில் இருந்தன. அதைக் கண்ட காசிராஜன் வியப்புடன் விநாயகரைப் பார்த்தான். அதை உணர்ந்த விநாயகர்; ''மன்னா, இன்று சதுர்த்தி தினம். எனது பக்தனான ப்பிருசுண்டி எனக்கு பல வகையான உணவுப் பொருட்களை நிவேதிக்கிறான். அவை தான் இவை'' என்றார்.

''சர்வேஸ்வரா நான் ப்ருசுண்டி முனிவரைப் பார்க்க வேண்டும்'' என்று காசிராஜன் வேண்ட விநாயகர் அவ்விடத்திலிருந்தே ப்ருசுண்டியை வரவழைத்தார். காசிராஜன் அவரைப் பணிந்து வணங்கினான்.

மேகன் என்ற அசுரன் சோதிடனைப் போல வடிவம் கொண்டு காசிராஜனின் அரண்மனைக்கு வந்தான்; ''அரசே நாட்டிற்குப் பெரும் தீமை வரப் போகிறது. தாங்கள் முனி குமாரன் ஒருவனை அழைத்து வந்து அரண்மனையில் வைத்திருக்கிறீர்கள். உங்கள் புத்திரனின் திருமணம் நடைபெறாது அரண்மனையும் நாடும் அழியப் போகிறது. அவனை அரண்மனையை விட்டு வெளியேற்றுங்கள்'' என்றான்.

''அப்படியா? அச்சிறுவனைத் தாங்களே அழைத்துச் சென்று விடுங்கள்'' என்று நடித்தான் அரசன். ஜோசியன் வெளியே பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த மடோற்கசரின் அருகில் சென்று அவரது கையைப் பிடித்தான். மடோற்கசர் தனது கழுத்தில் இருந்த மாலையைக் கழற்றி அவ்அசுரனுக்குப் போட்டார். மறுகணம் அசுரன் எரிந்து சாம்பாரானான். தான் அனுப்பிய அசுரர்கள் அனைவரையும் விநாயகர் அழித்ததால் மிக்க கோபங் கொண்ட நராந்தகன் பல அசுரர்களை காசிப் பட்டணத்திற்கு அனுப்பினான். அந்தகாசுரன் என்ற அசுரன் நாடு முழுவதையும் இருளாக்கினான். துங்காசுரன் என்பவன் பட்டணத்தைச் சுற்றி மலைகளை உண்டாக்கினான். சம்பாசுரன் என்பவன் மேகமாக மாறி இடிமின்னல் புயலுடன் மழையாகப் பொழிந்தான். அதைக் கண்ட விநாயகர் பறவையாக மாறி வானுயர்ந்த ஆலமரம் ஒன்றைத் தோற்றுவித்து அதன் உச்சியில் இருந்து சிறகடித்தார். அக்காற்றுப்பட்டு அம்மூவரும் அவர்களின் தாயாரான பிரமரையின் முன் விழுந்து இறந்தனர். தனது பிள்ளைகள் இறந்தமையால் துயடைந்த அரக்கி விநாயகரைக் கொல்வதற்காக விநாயகரின் தாயின் உருவத்துடன் விஷம்கலந்த தீன் பண்டங்களைக் கொண்டு காசி நகரத்திற்குச் சென்றாள்.

அதிதியைக் கண்ட காசிராஜன் மடோற்கரரின் தாயென நினைத்து வணங்கினான். பின் மடோற்கரரின் அருகில் கொண்டு சென்று விட மடோற்கரர் ஓடி வந்து அவளின் மடியில் அமர்ந்தார். அவள் தீண்

பண்டங்களை எடுத்து அவருக்குக் கொடுக்க அவர் சுவைத்து உண்டார். அப்பொழுது விஷம் தலைக்கேறி அரக்கி சுருண்டு விழுந்து இறந்தாள்.

நகரமாந்தர் மடோற்கரைத் தமது வீடுகளுக்குத் தினமும் அழைத்து உணவு கொடுக்க விரும்பினர். அவர் சம்மதித்து. மறு நாள் மக்கள் எல்லோரினதும் வீடுகளுக்கு வருவதாகக் கூறினார். அந்தநகரத்தில் சுக்கிலர் என்ற பிராமணர் இருந்தார். அவர் மிகவும் ஏழை. மறு நாள் மடோற்கரருக்கு உணவு கொடுப்பதற்காக அரிசி வாங்கச் சென்றார். யாரும் அவருக்கு அரிசி கொடுக்கவில்லை. அதனால் மனம் வாடிய சுக்கிலர் தவிட்டில் பலகாரம் செய்யும் படி தனது மனைவியான வித்துரிமைக்குச் சொன்னார்.

சுக்கிலர் தவிட்டால் செய்யப்பட்ட பலகாரங்களை மடோற்கரருக்குக் கொடுக்க விரும்பாததால் அவரை அழைக்கச் செல்லவில்லை. அதனால் மடோற்கரர் சற்றுத் தாமதமாக அங்கு சென்றார். அவரைக் கண்ட சுக்கிலரும் மனைவியும் அன்புடன் வரவேற்று தவிட்டாலான பலகாரங்களைக் கொடுத்தனர். மடோற்கரர்; ''மிகவும் சுவையாக இருக்கிறது'' என்று கூறியபடி அவற்றை உண்டார். பின் அவர்களுக்குத் தனது விஸ்வரூபத்தைக் காட்டி வரமருளிச் சென்றார்.

தான் அனுப்பிய அசுரர்கள் எல்லோரும் மடோற்கசரால் அழிக்கப்பட்டமையால் கோபம் கொண்ட நாரந்தகன் தானே நேரில் யுத்தத்திற்குச் சென்று மடோற்கசரை அழிக்க வேண்டும் என்று நினைத்து படைகளுடன் மடோற்கசர் இருக்கும் காசி நகரத்திற்குச் சென்றான்.

காசிராஜனது படைவீரர்களும் நராந்தனனின் படைவீரர்களும் உக்கிரமாகப் போர் செய்தனர். அசுரபடையினரது கொடூரமான தாக்குதலைச் சமாளிக்க முடியாது காசிராஜனின் படைகள் சிதறி ஓடின. காசிராஜனைக் கைது செய்த அசுரவீரர்கள் அவனை நராந்தனன் முன் கொண்டு சென்று நிறுத்தினர்.

அதை அறிந்த மடோற்கசர் கோபங் கொண்டார். ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் மடோற்கசரின் முகத்திலிருந்து தோன்றினர். அவர்களுள் குரூரன் என்ற மாவீரனை அழைத்த மடோற்கரர்; ''குரூரா, நீ சென்று காசிராஜனையும் கைது செய்யப்பட்ட வீரர்களையும் மீட்டுவா'' என்றார்.

குரூரன் யுத்த களத்திற்குச் சென்று நராந்தகனை எதிர்த்துப் போரிட்டான். அவன் விட்ட அஸ்திரம் நராந்தனின் தேரைப் புரட்டியது. நராந்தனன் வானில் தூக்கி வீசப்பட்டான். வானில் வீசப்பட்ட அசுரன் வானில் வெகுதூரம் சென்று பின்னர் தரையில் விழுந்தான். அந்த வேகத்தில் அவன் பாதாள லோகம் வரை சென்றான். குரூரன் காசிராஜனையும் வீரர்களையும் மீட்டுச் சென்று மடோற்கசரின் முன் விட்டான்.

பாதாளம் வரை சென்ற நராந்தனன் மயக்கம் நீங்கி ஆக்ரோஷமாக கிளம்பி வந்தான். அவனை அழிப்பதற்காக மடோற்கசர் சேனைகளுடன் புறப்பட்டார். நராந்தகன் அக்கினி உருவில் நகரை அழித்துக் கொண்டிருந்தான். மடோற்கசர் அதை அடக்க, அவன் பல மாய உருக்களை எடுத்தான். அவற்றை அவர் பொசுக்க, அசுரன் காற்றாகவும் தீயாகவும் மழையாகவும் உருவெடுத்து நாட்டையும் மக்களையும் அழித்தான். மடோற்கசர் அவற்றை விளையாட்டாக எண்ணிச் சற்று போரிடாது இருந்தார். மடோற்கசர் களைத்து விட்டாரென நினைத்த நராந்தகன் பல்வேறு மாய உருவங்களை எடுத்தான். கோபங் கொண்ட மடோற்கசர் பினாகம் என்ற அஸ்திரத்தை விட, அது அவனது தலையை துண்டித்து தேவாந்தனின் முன் கொண்டு சென்று போட்டது. பின் அங்கிருந்து அத்தலை பல்வேறு உருவங்களாகித் திரும்பி வந்து மடோற்கசரைத் தாக்கியது. மடோற்கசர் விஸ்வரூப மெடுத்து அவற்றைக் காலால் நசித்துக் கொன்றார்.

### ***தேவாந்தகன் வாதம்***

தனது சகோதரனான நராந்தகனும் அசுரர்கள் பலரும் கொல்லப்பட்ட செய்தியை அறிந்த தேவாந்தகன் கடுங்கோபங் கொண்டு தனது படை வீரருடன் மடோற்கரரைத் தாக்க வந்தான். இதை அறிந்த மடோற்கடர் புத்தி தேவியாரை அழைத்து உனது சக்தியால் வீரர்களை உருவாக்கி அசுரர்களை அழித்து வா'' என்றார்.

புத்திதேவியார் அட்டமா சித்திகளையும் எட்டுத் தேவிகளாகத் தோன்றச் செய்து ஆயிரக்கணக்கான வீரர்களை ஆயுதங்களுடன் தோற்று வித்தாள். அவர்கள் அசுரர்களை சின்னா பின்னப் படுத்தினர். அதைக் கண்ட தேவாந்தகன் கோபாவேசத்துடன் வந்து சித்திகள் எண்மரையும் தாக்கினான். சித்திகள் எண்மரும் கலங்கினர். அதைக் கண்ட புத்திதேவியார் மிகவும் கோரமான தோற்றத்தையும், பிரமாண்டமான உருவத்தையும் கொண்ட சக்தியை உருவாக்கி; ''நீ போர்களத்திற்குச் சென்று சக்தியிழந்து நிற்கும் எண்வகைச் சித்திகளையும் காப்பாற்றி அசுரப்படைகளை நாசஞ் செய்து வா'' என்றார்.

புத்தி தேவியாரால் உருவாக்கப்பட்ட சக்தி, போர்க்களத்திற்குச் சென்று அசுரர்களை அழித்தாள். தேவாந்தகனைத் தூக்கி விழுங்கினாள். தேவாந்தகன் மாய உருவம் எடுத்து அவளது மூக்குத் துவாரத்தினூடாக வெளியே வந்து ஒளித்து ஓடிச் சென்று தனது தந்தையை அடைந்து; ''மடோற்கடரை வெல்லும் வழியொன்று சொல்லுங்கள்'' என்று கேட்டான்.

''தேவாந்தகா, யாகம் ஒன்று செய். அதிலிருந்து கறுப்புக் குதிரை யொன்று வெளிப்படும். அதில் சென்றால் வெற்றியடைவாய்'' என்று கூறி யாகம் செய்யும் முறைகளையும் அதற்கான மந்திரங்களையும் சொல்லிக் கொடுத்தான். அதன்படி தேவாந்தகன் யாகம் செய்ய, ஓம குண்டத்திலிருந்து கறுப்புக் குதிரை ஒன்று வெளிப்பட்டது. அதில் ஏறி மடோற்கடரை எதிர்க்க வந்தான். குரூரனும் அட்டமா, சித்திகளும் புத்தி தேவியரால் உருவாக்கப்பட்ட பிரமாண்டமான சக்தியும் தேவாந்தகனை எதிர்தன. யாகத்தில் தோன்றிய குதிரையில் அவன் வந்ததால் அவர்களால் தேவாந்தகனை எதிர்க்க முடியவில்லை. அத்துடன் தேவாந்தகன் யுத்தகளத்தில் யாகம் ஒன்றைச் செய்து பெரிய பூதம் ஒன்றை வரவழைத்தான். அப்பூதம் மடோகடரின் படை வீரர்களை விழுங்கத் தொடங்கியது. குரூரனும் அட்டமா சித்திகளும் கலங்கினர். இதை உணர்ந்த விஷ்ணுவும் பிரமனும் தேவர்களும் விநாயகரைத் துதித்து; ''இனிமேலும் பொறுமையைக் கடைப்பிடிப்பதால் தேவாந்தகனின் வலிமை கூடும்'' என்று பிரார்த்தித்தனர்.

விநாயகர் அவர்களின் கோரிக்கையை ஏற்று யுத்தகளத்தில் இறங்கினார். தேவாந்தனன் வாயு அஸ்திரம், வருணாஸ்திரம், மோகாஸ்திரம், கருடாஸ்திரம், கர்பாஸ்திரகம் போன்ற அஸ்திரங்களை ஏவினான். அவை பலிக்காததால் பசுபதாஸ்திரத்தை விடுத்தான். மடோற்கடரும் பசுபதாஸ்திரத்தை விட்டார். இரண்டும் பயங்கரமாக மோதி ஒன்றை ஒன்று வெற்றி காண முடியாது திரும்பின. அதனால் கோபங் கொண்ட தேவாந்தகன் தண்டத்தை எடுத்துக் கொண்டு மடோற்கடரின் ரதத்தில் ஏறினான். உடனே மடோற்கடர் யானை முகனாக மாறித் தனது தந்தத்தில் ஒன்றை முறித்து அதனால் அவனைக் குத்திக் கொன்றார்.

தேவர்கள் மகிழ, காசிநகரம் வந்த மடோகடர் காசிராஜனது மகனின் திருமணத்தை முடித்து வைத்து விட்டு காசிபரின் ஆச்சிரமத்திற்குத் திரும்பினார்.

***வக்கிரதுண்டர்***

பத்மகம் என்ற நகரைப் பிரமாசுரன் என்ற அசுரன் ஆண்டு வந்தான். அவன் சிவனை நோக்கித் தவம் செய்தான். சிவபெருமான் அவன் முன் தோன்றி அவன் கேட்ட பல வரங்களை அருளினார்; ''ஈஸ்வரா நான் கேட்ட வரங்கள் யாவற்றையும் தந்தீர்கள். அவ்வரங்களோடு நான் யாராவது ஒருவரின் தலையில் கைவைத்தால் அவர் எரிந்து பஸ்பமாகி விட வேண்டும். அந்த வரத்தையும் தாருங்கள்'' என்று கேட்டான். சிவன் அந்த வரத்தையும் கொடுத்தார். உடனே அசுரன் சிவனின் தலையில் கைவைத்து அவரை அழிக்க விரும்பினான். அதை அறிந்த சிவபெருமான் மாய உருவெடுத்து மறைந்து விட்டார். அதனால் பிரமாசுரன் அவரைத் தேடிச் சகல உலகங்களுக்கும் சென்றான்.

சிவனைக் காணாவிட்டால் தன்னைத் தொட பிரமாசுரன் வருவான் என்று அஞ்சிய மகா விஷ்ணு அவனின் முன் அழகிய மோகினி உருவெடுத்து நின்றார். அவளின் அழகில் மயங்கிய பிரமாசுரன் அவளின் அருகே சென்று விரததாபத்தால் தனது நிலையை எடுத்துச் சொல்லித் தன்னைத் திருமணம் செய்யுமாறு கேட்டான்.

அதற்கு அந்த மோகினி தான் ஒரு நடனமாது என்றும் தனக்குச் சமமாக நடனமாடுவோரைத் தான் திருமணம் செய்வேன் என்றும் கூறினாள். அதற்கு உடன்பட்ட அசுரன் அவளுடன் போட்டியாக நடனமாடினான். அவளின் அபிநயத்திற்கேற்ப அசுரனும் அபிநயம் பிடித்து அழகாக ஆடினான். அப்பொழுது அண்ட சராசரங்களும் கிடுகிடுத்தன. ஆடும் போது மோகினி தனது கரங்களால் பலவிதமான அபிநயங்களைப் பிடித்தாள். அசுரனும் அவளுக்கு போட்டியாக அபிநயங்களைப் பிடித்தான். சட்டென்று மோகினி தனது கையைத் தலையில் வைத்தாள். ஆட்டத்தில் முனைப்பாக இருந்த அசுரன் தான் பெற்ற வரத்தை மறந்து கையைத் தனது தலையில் வைத்தான். அடுத்த கணம் அவன் எரிந்து பஸ்பமாகி விட்டான்.

தனது தந்தை வஞ்சகமான முறையில் மகா விஷ்ணுவால் அழிக்கப்பட்டதை அறிந்த துராசதன் சிவபெருமானை நினைத்துத் தவமிருந்து சக்திமிக்க வரங்கள் பலவற்றைப் பெற்றான். அதற்குப் பயந்த மகாவிஷ்ணு காசிக்குச் சென்று விஸ்வநாதரிடம் சரணடைந்தார். அசுரனுக்குப் பயந்த சிவபெருமானும் தேவர்களை அழைத்துக் கொண்டு கேதாரம் என்னுமிடத்திற்குச் சென்று விட்டார்.

தேவர்கள் எல்லோரும் ஒன்று கூடிப் பிரமதேவரைத் துதித்தனர். அங்கு பிரமதேவர் தோன்றி; ''சிவனுக்கும் பார்வதிதேவியாருக்கும் விநாயகப் பெருமான் அவதரித்து துராசதனை அழிப்பார்'' என்றார். அப்பொழுது தேவர்கள் பார்வதி தேவியைத் துதித்தனர். அங்கு வந்த பார்வதிதேவியின் முகத்தில்

இருந்து ஐந்து முகங்களோடும், பத்துக் கரங்களிலும் ஆயுதங்களோடும் விநாயகர் தோன்றினார். அவருக்கு வக்கிர துண்டர் என்ற நாமத்தை பார்வதிதேவி சூட்டினார்.

வக்கிரதுண்டர், துராசதனை அழிக்கச் சதுரங்க சேனையுடன் புறப்பட்டுச் சென்றார். அசுரன் அவரை எதிர்த்துப் போரிட்டான். வக்கிரதுண்டர் அசுரனது நெற்றியிலே ஓங்கிக் குத்தினார். அசுரன் நெற்றி பிளந்து மயங்கி விழுந்தான். மறு நாள் அவன் மயக்கம் தெளிந்து வக்கிரதுண்டருடன் போருக்கு வந்தான். வக்கிரதுண்டர் விஷ்வரூபமெடுத்துத் தனது திருவடியை அவனது தலையில் வைத்து நசுக்கினார். அதனால் அவனது அஞ்ஞானம் விலகி விட்டது. அவன் வக்கிர துண்டரின் திருவடியைத் தனது கைகளால் பிடித்து மனமுருகி வணங்கினான். அதனால் அவன் மீது கருணை கொண்ட வக்கிரதுண்டர்; "துராசரா, நீ காசி நகரத்தின் மேற்குப் பக்க வாசலில் எமது காலடியில் இருந்து இவ்வூரில் கொடுமைகள் செய்வோரைத் தண்டித்து அடக்குவாயாக" என்று அனுக்கிரகித்தார்.

ஸ்வாயம்பு என்ற சக்கரவர்த்தி இறந்த பின்பு அந்த நாட்டில் அறுபதினாயிரம் வருடங்கள் மழை பெய்யவில்லை. அதனால் பஞ்சம் ஏற்பட்டு பூசைகள் வேதபராயணங்கள் நடைபெறவில்லை. அதனால் பிரமதேவன் பூவுலகத்திற்கு வந்து ரிபுஞ்சக்கன் என்பவனை அரசனாகத் தேர்ந்தெடுத்தார். அவன் காசி நகரத்தில் தேவர்கள் எவரும் இருக்கக்கூடாது. அதை ஏற்றால் தான் அரசனாவேன் என்றான். வேறு வழியின்றி பிரமதேவன் அவனின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்.

காசிகோத்திரத்தை விட்டு தேவர்கள் வெளியேறினதும் ரிபுஞ்சரன் சக்கரவர்த்தியாக மகுடம் சூடிக் கொண்டான். ஆதீசேஷன் தனது மகளான அனங்கமோகினியை அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். தேவர்கள் காசிநகரத்திற்குச் சென்று கங்கையில் நீராட முடியாமையால் வருத்தமடைந்து தமது தேவகுருவான பிரகஷ்பதியிடம் சென்று முறையிட்டனர்.

"தேவர்களே, ரிபுஞ்சயன் நீதி நெறி பிறழாது ஆட்சி செய்வதால் அங்கு எதுவும் செய்ய முடியாது" என்றார் பிரகஸ்பதி.

அதைக் கேட்டு வருந்திய தேவேந்திரன் அக்கினிதேவரை அங்கு செல்ல வேண்டாமென்று சொன்னான். இதை அறிந்த ரிபுஞ்சரன் தனது தவ வலிமையால் தானே அக்கினி தேவனாகவும் சூரியபகவானாகவும் மாறி மக்கள் யாகம் செய்ய உதவினான்.

மந்திர கிரியில் இருந்த கைலைநாதர் காசிக்குச் செல்ல விரும்பினார். ஆனால் பிரமனின் வரம் அதைத் தடுத்தது. எனவே கைலைநாதர் பல யோகங்களை உருவாக்கி காசி நகரத்திற்குச் சென்று வருமாறு அனுப்பினார். ஆனால் அவர்களாலும் அங்கு செல்ல முடியவில்லை. அதனால் கைலை நாதர் விநாயகரிடஞ் சென்று தேவர்களின் குறையை எடுத்துச் சொன்னார்.

விநாயகர் காசிநகரத்து மக்களின் மத்தியில் பயங்கரக்கனவுகளை வரச் செய்து விட்டு அங்கு சோதிடனைப் போலச் சென்று பலன் கூறினார். காசிநகரத்திற்குப் பெரும் ஆபத்து வரப் போவதாகக் கூறிய விநாயகர், மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு கூற மக்களில் பெரும்பான்மையானோர் காசி நகரை விட்டு வெளியேறினர்.

இதை அறிந்த மன்னன் சோதிடராக வந்த விநாயகரை அழைத்து உபசரித்து நாட்டில் ஏற்பட்ட சம்பவங்களுக்குக் காரணம் என்னவென்று கேட்டான். அதற்குச் சோதிடர்; "அரசே இன்றிலிருந்து பதினேழு தினங்கள் கழிய அந்தணன் ஒருவன் இங்கு வந்து உனக்கு இதற்கான பதிலளிப்பான்" என்று கூறி விட்டுச் சென்றார்.

விநாயகர் காசிநகரத்திற்குச் சென்றதை அறிந்த பரமேஸ்வரன் மகாவிஷ்ணுவையும் இலக்குமியையும் அழைத்து காசி நகரம் சென்று மக்களைக் கெடுக்குமாறு கூறினார். மகாவிஷ்ணு காசிநகரத்து ஆண்களை அணுகி வேதங்களைப் பற்றியும் யாகத்தைப் பற்றியும் தவறாக எடுத்துக் கூறி வேதங்களை ஓத வேண்டாமென்றும், யாகங்களைச் செய்ய வேண்டாமென்றும் தடுத்தார்.

இலக்குமி பெண்களிடம் சென்று கற்புத் தன்மை குறையுமாறு அவர்களின் மனதை மாற்றி, அவர்களைப் பிற ஆடவர்களுடன் இன்பம் அனுபவிக்கத் தூண்டினாள்.

பதினேழாவது நாள் மகாவிஷ்ணு ரிபுஞ்சரனின் அரண்மனைக்குச் சென்றார். தன் தவ வலிமையால் வந்திருப்பவர் மகா விஷ்ணு என்று விஷ்ணு என்று ரிபுஞ்சரன் என்று உணர்ந்தான்; "சுவாமி தாங்கள் யாரென்பதை நான் புரிந்து கொண்டேன். பதினேழு தினங்கக்கு முன்பு சோதிடராக விநாயகர் வந்து சென்ற பின்பு எனது அஞ்ஞான இருள் மறைந்து விட்டது. காசி நகருக்குத் தேவர்கள் வரலாம்" என்றான்.

மகாவிஷ்ணு மகிழ்ந்து, அவனுக்குத் தனது சுய உருவைக் காட்டினார். ரிபுஞ்சரன் மகிழ்ந்து அவரை வணங்கினான்.

***வல்லபைக்கருளிய விநாயகர்***

மரீசி முனிவர் விநாயகரை நினைத்துத் தவம் செய்தார். அதனால் மகிழ்ந்த விநாயகர் மரீசி முனிவனின் முன் தோன்ற, மரீசிமுனிவர்; ''சுவாமி பார்வதிதேவி எனக்குப் புத்திரியாக வந்து பிறக்க வேண்டும். அவளைத் தங்களுக்கு நான் திருமணம் செய்து வைக்க வேண்டும்'' என்று வேண்டினார் விநாயகர் அவ்வாறே அனுக்கிரகித்தார்.

மரீசிமுனிவர், பிரமதேவரிடம் வந்து தான் விநாயகரிடம் பெற்ற வரத்தைச் சொன்னார். பிரமதேவர் மனம் மகிழ்ந்து வேதவல்லி என்ற பெண்ணை அவருக்கு மணம் செய்து வைத்தார்.

கைலையில் பரமேஸ்வரனுடன் இருந்த சக்தி; ''சுவாமி அண்டசராசரங்கள் எவ்வாறு இயங்குகின்றன.'' என்று கேட்டாள்.

''தேவி, நிமிர்த்தம், துணை, உபாதனம் என்ற மூன்றாலும் தான் அவை இயங்குகின்றன. நிமிர்த்தம் என்பது நான், துணை என்பது நீ உபாதனம் என்பது மகாமாயை'' என்றார்.

அதைக் கேட்ட சக்தியின் உள்ளத்தில் கர்வம் தோன்றியது; ''சுவாமி சக்தியென்பது நானென்றால் தங்கள் உடலும் உருவமும் நான் தானே'' என்றாள்.

மகேஸ்வரன் கோபங் கொண்டு சகல புவனங்களிலும் உள்ள சக்திகளை ஒடுக்கினார். அதனால் உலகம் நடுங்கியது. அதனால் பயந்த சக்தி மகேஸ்வரனைத் தொழுது தன்னை மன்னிக்கும் படி வேண்டினாள்.

''தேவி! யமுனை தீர்த்தத்தில் மரீசிமுனிவரின் ஆச்சிரமம் இருக்கிறது. அவர் நீராட யமுனை நதிக்கு வரும் போது நீ தாமரை மலராக அந்நதியில் மலர்ந்திருப்பாயாக அவர் உன்னைக் காணும் போது நீ ஒரு பெண் குழந்தையாக மாறுவாய். மரீசி முனிவர் உன்னை எடுத்துச் சென்று வளர்ப்பார். நான் விநாயகர் உருவில் வந்து உன்னை மணம் புரிவேன்'' என்றார்.

தை மாதம் பிறந்தது. மரீசிமுனிவர் தனது மனைவியோடு நீராட யமுனை நதிக்கு வந்தார். மரீசி முனிவர் அக்குளத்திலிருந்த ஒரு தாமரை மலரில் சங்கு ஒன்று இருப்பதைக் கண்டார். பின் அது அழகான ஒரு பெண் குழந்தையாக மாறியது. மரீசி முனிவர் அக்குழந்தையை ஆச்சிரமத்திற்குத் தூக்கி வந்து வல்லபை எனப் பெயரிட்டு அன்போடு வளர்த்து வந்தனர்.

உரிய பருவம் வந்ததும் வல்லபை ஆச்சிரமம் அமைத்துப் பரமேஸ்வரனை நினைத்துத் தவமிருந்தாள்.

தேவிக்குப் பன்னிரண்டு வயது நடக்கும் போது விநாயகப்பெருமான் பரமேஸ்வரனிடம் வந்து வல்லபையைத் திருமணம் செய்யப் புறப்படுமாறு கூறினார். பரமேஸ்வரன் ஓர் அந்தணர் வடிவம் கொண்டு வல்லபையின் முன் தோன்றினார். வல்லபை அவரை வரவேற்று உபசரித்து; ''சுவாமி தாங்கள் இங்கு வந்த காரணம் யாது'' என்று கேட்டாள்.

''பெண்ணே உன்னை மணந்து கொள்ளவே இவ்விடம் வந்தேன்'' என்றார் அந்தணர்.

''நான் விக்னேஸ்வரப் பெருமானை மணம் செய்யும் பொருட்டே தவம் செய்கிறேன். அவரை அன்றி வேறெவரையும் நான் மணம் செய்ய மாட்டேன். நீர் இங்கிருந்து செல்லும்'' என்றாள் வல்லபை.

அப்பொழுது அந்தணர் உருவில் வந்த பரமேஸ்வரன், கணேசரின் உருவில் நின்றார். மனம் மகிழ்ந்த வல்லபை அவரைப் பல முறை வலம் வந்து வணங்கினாள்; ''சுவாமி, தங்கள் வலப்பக்கத்தில் நான் என்றும் பிரியாதிருக்க அருள் புரிய வேண்டும்'' என்று கேட்டாள்.

இதை அறிந்த மரீசி முனிவர் ஆச்சிரமத்திற்கு வந்து விநாயகப் பெருமானை வலம் வந்து பணிந்து தனது மகளைத் திருமணம் செய்யுமாறு வேண்டினார். பகாவான் அவருக்குத் தனது சுய உருவத்தைக் காட்டித் திருமணத்திற்கு இசைந்தார்.

திருமணத்திற்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகின. விஷ்ணுவும் பிரமாதிதேவர்களும் முனிவர்களும் வந்து கூடப் பகவான் வல்லபையைக் கைப்பிடித்தார். அதன் பின்பு விநாயகர் தனது விஸ்வரூபத்தைக் காட்டி எல்லோருக்கும் ஞானத்தை உபதேசித்தார்.

### *சோமகாந்தன் முக்தி*

பிரமதேவர் வியாசபகவானுக்கு எடுத்துக் கூறிய விநாயகரின் பெருமை மிக்க சரித்திரத்தைப் பிருகு முனிவர் சோமகாந்தராஜனுக்கு விரிவாகக் கூறினார்.

''அரசே ஆதிபரம் பொருளான விநாயகப் பெருமானின் பாதங்களைத் தினமும் அர்ச்சித்து வந்தால் நீ எண்ணிய தெல்லாம் நிறைவேறும்'' என்றார். சோமகாந்தன் பிருகுமுனிவரால் உபதேசிக்கப்பட்ட விநாயகரின் மகா மந்திரத்தைத் தினமும் உச்சரித்து விநாயகரை அர்ச்சித்து வந்தான். அதைக் கண்டு மகிழ்ந்த விநாயகப் பெருமான் தனது கணங்களை அழைத்து அழகிய விமானம் ஒன்றைக் கொடுத்து சோமகாந்தனை அழைத்து வருமாறு அனுப்பினார்.

தேவகணங்கள் அரசனிடம் வந்து அவனை விநாயகப் பெருமான் அழைத் வரச் சொன்னதாகச் சொன்னார்கள். சோமகாந்தன் ஆனந்த பரவசமடைந்து பிருகுமுனிவரின் பாதங்களைப் பணிந்தான்; ''சுவாமி தங்களின் அருளால் எல்லாம் வல்ல சர்வேஸ்வரனின் பாத பங்கஜங்களை அடையும் பெரும் பேற்றைப் பெற்றேன். என்னை வாழ்த்தி விடை தாருங்கள்'' என்றான்.

''மன்னா, விநாயகப் பெருமானின் பெருமைகளை எடுத்துக் கூற ஆயிரம் ஜன்மங்கள் எடுத்தாலும் போதாது. நீயும் உன் மனைவியும் இரு அமைச்சர்களும் விநாயகப் பெருமானின் திவ்விய லோகத்திற்குச் சென்று இன்பமாக வாழுங்கள்'' என்று வாழ்த்தினார் பிருகுமுனிவர்.

சோமகாந்தனும் அமைச்சர்களும் அவனது மனைவி சுதன்மையும் தேவ விமானத்தில் ஏறினர். அப்பொழுது சுதன்மை சொன்னாள்; ''நாதா நாம் நோயுற்று இவ்விடம் வந்தோம். எமது மகன் எமகண்டன் எமக்காகக் காத்திருப்பான். எனவே அரண்மனைக்குச் சென்று அவனைச் சந்தித்துக் கதைத்த பின்பு செல்வது தான் நன்று''.

''தேவியார் சொல்வது சரி தங்கள் புத்திரனும் எம்பெருமான் மீது பக்தி கொண்டு தினமும் அவரைப் பூசித்து வருகிறான். தங்கள் பட்டணத்திற்கு வெளியே விமானத்தை நிறுத்துகிறோம். அவனைச் சந்தித்து ஆசி கூறி விட்டு வாருங்கள்'' என்று தேவகணங்கள் கூறின.

தேவகணங்கள் பட்டணத்தில் அவர்களை இறக்க, எமகண்டன் செய்தி அறிந்து அவ்விடத்திற்கு விரைந்து வந்தான். அவனைத் தொடர்ந்து அமைச்சர்களும் நகரமக்களும் ஓடோடி வந்தனர். அனைவரையும் சோமகாந்தன் ஆசீர்வதித்தான். அவர்கள் அனைவரும் விநாயகரின் லோகத்திற்குச் சென்றனர்.

விநாயகப் பெருமானின் திவ்விய சரித்திரத்தைப் படிக்கும் வாசகர்கள் அனைவரும் புராணத்தில் கூறியபடி பகவானை அர்ச்சித்து எல்லா நலன்களையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

### *விநாயகர் புராணம் கேட்பதால் ஏற்படும் பலன்கள்*

நைமிசாரண்யத்தில் ஒன்று கூடியிருந்த முனிவர் பெருமக்களுக்கு சூத புராணிகர் விநாயகப் பெருமானின் திவ்விய சரிதங்களை எடுத்துரைத்துப் பின்னும் சொல்வார்.

''அன்பு மிக்க முனிவர்களே! எம்பெருமானின் லீலைகளைச் சொல்லச் சொல்லிக் கேட்டுக் கொண்டேயிருக்கலாம். இந்த ஜன்மம் அதற்குப் போதாது. இக்கதைகளைக் கேட்டாலும், படித்தாலும், பிறருக்கெடுத்துரைத்தாலும் அவரவர் ஏழேழு ஜன்மங்களில் செய்த பாவம் அணைத்தும் போய்விடும் என்று சொல்வதிலிருந்தே இதன் மகிமையை உணரலாம்.

''செய்நன்றி மறத்தல், பிற உயிர்களுக்குத் துன்பஞ் செய்தால் யாகம், தவம், தருமம், தானம் ஆகிய கர்மாக்களைச் செய்யாதிருத்தல், குருவுக்கு உரிய தக்ஷிணை கொடாதிருத்தல், தெய்வ வழிபாடு செய்யும் இடங்களை அசுத்தப்படுத்தல், பஞ்சபூதங்களான பூமி, வானம், நீர்,நெருப்பு, வாயு ஆகியவற்றையும் அந்தணர்,பசுக்கள்,சூரிய, சந்திரர் ஆகியோரையும், வணங்காதிருத்தல், புசிக்கும் உணவைத் தெய்வமாகக் கருதித் தொழாதிருத்தல், விருந்தினர், அடிமைகள் ஆகியோருக்கு உணவு அளிக்காதிருத்தல், பந்தியில் பெரியவர்கள் உணவு அருந்தி எழும் முன்பு தான் உண்டு எழுந்திருத்தல், ஒரு கையால் தானம் வாங்குதல், அந்திப் பொழுதில் தீபத்தை வணங்காதிருத்தல்.

இருவருக்கிடையே புகுந்து செல்லல், புல்விளை நிலம், சாணம், சுடுகாட்டுக்குச் செல்லும் வழி, குளம், ஆறு முதலிய தீர்த்தங்கள், ஆலயம், பசுக்கள் இருக்குமிடம் ஆகிய இடங்களை அசுத்தப்படுத்துதல், பிற ஸ்திரீகளை விரும்பி அடைதல், மதுபானம், களவு, சூது ஆகியவற்றில்ஆசை கொண்டு ஈடுபடல், பிறரைக் கண்டு பொறாமைப்படுதல், வீட்டு தெய்வங்களுக்குப் பூஜை செய்யாதிருத்தல், நெருப்பைத் தாண்டுதல், தலையில் வைத்த எண்ணெயை உடம்பில் வழித்துத் தடவுதல்,மனையின் குணத்தைப் பெருமையாக எடுத்துச் சொல்லல், தொடையில் தட்டினை வைத்து உணவருந்துதல், பட்டினி கிடந்து உயிரை வாட்டுதல், பூமியை நகத்தினால் கீறுதல், வஸ்திரமின்றி நீரில் இறங்குதல், மந்திரங்களைத் தகாதவர்க்கு உபதேசித்தல், பெரியோர்கள் அமர்ந்திருக்கும் ஆசனங்களைக் காலால் உதைத்தல், நகங்கள், உரோமங்களைப் பல்லினால் கடித்தல், பெரியோர் நித்திரை செய்யுங் காலத்து அவரை எழுப்புதல், பொய் சொல்லுதல், நல்லோர்களை ஏசுதல், காலோடு காலைத் தேய்த்துக் கழுவுதல், இடக்கையால் தலையைத் தொடுதல், நின்றும், நடந்தும், படுத்தும் உணவு அருந்துதல்,அடியார்களை தூஷித்தல், கர்மாக்களைச் செய்யாதிருத்தல், தகாத காலங்களில் மனைவியுடன் கூடுதல், தீபத்தை வாயால் ஊதி அணைத்தல், பெண்கள் பிறபுருஷனிடம் இச்சித்தல், இன்னும் எத்தனையோ செய்யக் கூடாதகாரியங்களைச் செய்யாத பாவம் அனைத்தும் போகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

“இத்துணை மகத்துவம் வாய்ந்த கதையைத் தாங்கள் கேட்கவும் அதை நான் எடுத்துச் சொல்லவும் நேர்ந்தது, நாம் செய்த பாக்கியமே காரணம்!” என்றார் சூதர்.